# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 202 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 02, புதன்கிழமை 17.06.2015


**2 வயதில் திருமணம் 13 வயதில் விதவை**



பக். 12

**ஆண்டிறுதியில் ஒபாமா இங்கு வருவாராம்**



யாழ்ப்பாணம், ஜூன் 17
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த ஆண்டு இறுதியில் இலங்கைக்கு, தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்வார் என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
இது தொடர்பில் அமெரிக்கத் தரப்பிலிருந்து எந்தவித உத்தியோகபூர்வ தகவல்களும் வெளியிடப்படாதபோதும் கொழும்பு அரச தரப்பிலிருந்து தொடர்ச்சியாக ஒபாமாவின் வருகை பற்றித் தெரிவிக்கப்பட்டு வருகிறது.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் ஒபாமாவின் வருகை பற்றிய தகவலை அமைச்சர் கிரியெல்ல வெளியிட்டார்.
மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் முறுகல் நிலையை அடைந்திருந்த அமெரிக்க - பக்.24

**ரணில் கையாண்ட தந்திரத்தை மைத்திரிபால கையாளத் தயங்குவதேன்?**

பக். 17

# ஏமாற்றம்

## அரசு மீது கூட்டமைப்புக்கு

### மைத்திரி அரசு மீது கூட்டமைப்பு நேற்று முதல் தடவையாக அதிருப்தி ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்துப் பேசவும் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 17
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் குறித்துத் தான் கவலையும் ஏமாற்றமும் அடைந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுத் தெரிவித்தது. கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி கொழும்பில் புதிய அரசு அமைந்த பின்னர் அதன் நடவடிக்கை குறித்து கூட்டமைப்பு பகிரங்கமாக ஏமாற்றம் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவை. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் நேற்று யாழ்ப்பாணத் பக்.24

## பீதியைக் கிளப்பிய சிவப்பு வெளவால்

கனகராயன்குளத்தில் நேற்றுமுன்தினம் சம்பவம்



கனகராயன்குளம், ஜூன் 17
வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை திடீரெனப் பறந்து திரிந்த சிவப்பு நிறமுடைய வெளவால்கள் மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பின. பக்.24

## பொறுப்புக்கூறல் அவசியம் அமெ. மீண்டும் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 17
பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை இலங்கை அரசு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
ஜெனிவாவில் ஆரம்பமாகிய ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 29 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய அமெரிக்கப் பிரதிநிதி எரிக் ரிச்சட்சன் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பிலான வொஷிங்டனின் நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்தினார்.
ஜனநாயக அமைப்புக்களை மீளமைக்கவும், ஊழலுக்கு எதிராகவும் இலங்கை மக்கள் எடுத்த முடிவை அமெரிக்கா வரவேற்கிறது என்றும் ரிச்சட்சன் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அகற்றி பக்.24

## சொல்ஹெய்முக்கு எந்தப் பங்குமில்லை

### இலங்கை தொடர்பான விவகாரத்தில் என்கிறார் மங்கள

யாழ்ப்பாணம், ஜூன் 17
இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எந்தப் பங்கையும் வகிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
'இலங்கை விவகாரத்தில் மீண்டும் எரிக் சொல்ஹெய்ம்' என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று நேற்று முன்தினம் வெளியிட்ட தலைப்புச் செய்தியை மங்கள மறுத்தார்.
அது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள மங்கள சமரவீர பக்.24

## முதல்வரிடம் விளக்கம்கோர கூட்டமைப்பு நேற்று முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 17
கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தென்பகுதிக்கு அழைக்கப்பட்டு நிதி வழங்கப்பட்டதாக வடக்கு முதலமைச்சர் தெரிவித்த கருத்துத் தொடர்பான உண்மைத் தகவலை அவரிடம் கோருவது என்றும், அத்துடன் வடக்கு மாகாண பக்.24

## மாற்றத்துக்காக உயிரையும் விடுவேன்

### சூளுரைக்கிறார் ஜனாதிபதி மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூன் 17
அரசியல் மற்றும் சமூக மாற்றத்துக்காக எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டார நாயக்க செய்த தியாகத்தை எமது நாடு மீண்டும் வேண்டி நிற்கின்றது. நாட்டுக்குத் தேவையான மாற்றங்களைக் கொண்டு வர எனது உயிரையும் தியாகம் செய்ய நான் தயார்.
இவ்வாறு சூளுரைத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. தம்பதெனியவில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பொதுத் தேர்தல் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது அந்த நிகழ்வு. பிளவுபட்டு நிற்காமல் கட்சியினர் அனைவரும் ஒரே அணியாக ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். "அப்போது தான் வெற்றியைப் பெறமுடியும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.
தான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எந்தவொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடவில்லை என பக்.24

**மஹிந்தவுக்கு இப்படியும் ஒரு ஆசை**

கொழும்பு, ஜூன் 17
எதிர்பார்க்கப்படும் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக, புதிய தேர்தல் முறையில் கீழ் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால், அது தனக்கு மிகவும் வசதியாக அமையும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
முன்னாள் ஜனாதிபதி பக்.24

## 49 மருத்துவர்கள் புதிதாக யாழ்ப்பாணத்தில் நியமனம்

### போதனா வைத்தியசாலையில் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 49 வைத்தியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்றுத் தொடக்கம் அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.
பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி வைத்தியசாலை பக்.24

## இனிமேலும் வீடுதான் கூட்டமைப்பின் சின்னம்

### தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
இனிவரும் தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் என்று, கூட்டமைப்பில் உள்ள 4 கட்சிகளும் இணைந்து உருவாக்கிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பக்.24

**சபை அமர்வை ஒத்திப்போட ஜனாதிபதி சிறிசேன யோசனை?**

பக். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றைக் கலைக்க இணங்கியுள்ளார் மைத்திரி

## பிரதமர் ரணில் தெரிவித்ததாக மனோ கணேசன் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 17

20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடிய சூழல் தற்போது இல்லை. எனவே உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளதாகவும், அதற்கு ஜனாதிபதி உடன்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியினருக்கும், ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இரவு சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. 20 ஆவது திருத்தம் தொடர்பில் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாட்டை பிரதமருக்கு தெரிவித்த போது, 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றக் கூடிய சூழல் தற்போது இல்லை. எனவே நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளேன்.

மேலும், நாடாளுமன்றத்தில் தனக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்ட பிரதமர் அதனால் இந்த மாத இறுதியில் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாகவும், அதனை அவர் ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது, தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான உடன்பாடு எட்டப்படுவது தொடர்பில் பேச்சு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டதாக, மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (ற-5)



## ஆயுள்வேத நிலைய திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 17

சிவன் ஆயுள்வேத மருத்துவ நிலையத்தின் கிளைநிறுவனம் ஒன்று குருநகரில் இந்தியத்தூதுவர் நடராஜன் அவர்களால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

சிவன் ஆயுள்வேத ஸ்தாபகர் கணேஸ் வேலாயுதம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு இன்று பிற்பகல் 5.30 அளவில் இடம் பெறும். ஈழத்து பாலசுப்பிரமணியத்தின் இசைக்கச்சேரியும் நடைபெறும் என்று ஸ்தாபகர் கணேஸ் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நெல்லியடியிலும், கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு சித்தாண்டியிலும் நேற்று சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமிலும் இந்த கிளை நிறுவ்னங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. (ற-4)

## நீதிமன்றத் தண்டம், முத்திரை வரியால் ரூ.16 மில்லியன் வருமானம்

தென்மராட்சி, ஜூன் 17

சாவகச்சேரி பிரதேச சபைக்கு நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை வரியாக 16 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், இந்த நிதி சபையின் உறுப்பினர்கள் ஊடாக தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் இந்த நிதி கிடைத்தமை பற்றி சபை உறுப்பினர்களுக்குத் தெரிவித்த சபைத் தலைவர், இந்த நிதியில் வரணி மற்றும் கைதடி பகுதிகளில் குடிதண்ணீர் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார். அவ்வேளையில் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் பகிர்ந்தளிப்பதெனவும் இந்த நிதியில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பட்டியலை வழங்குமாறு தலைவர் கோரியதையடுத்து உறுப்பினர்களால் அவசியமென கருதும் வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## நயினை நாகபூசணி அம்மன் மஹோற்சவத்தை முன்னிட்டு 'உதயனின்' சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 17

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு, 'உதயன் பத்திரிகையால்' ஆலயச் சூழலில் சமய அறிவுப் போட்டி நடத்தப்பட்டு, பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மகோற்சவ காலத்தை முன்னிட்டு, ஆலய வீதியில் உதயனின் விசேட கருமபீடம் திறக்கப்பட்டுள்ளது. 'ஞானக் கதிர்', 'கொம்பியூட்டர் ருடே' சஞ்சிகைகளின் அறிமுக நிகழ்வுகளும், சமய அறிவுப் போட்டியும் உதயனின் விசேட கருமபீடத்தால் நடத்தப்படவுள்ளது.

உதயன் கருமபீடத்துக்குச் சென்று, சமய அறிவுப் போட்டிக்குரிய படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி, அங்கு வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடப்பட வேண்டும். மஹோற்சவ காலம் முழுவதிலும் இந்தப் போட்டி இடம்பெறும். தீர்த்த திருவிழா அன்று இரவு, சரியான விடை எழுதிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்படுவர். அவ்வாறு தேர்வு செய்யப்படுபவர்களுக்கு, முதல் பரிசாக துவிச்சக்கர வண்டியும், இரண்டாவது பரிசாக மின்விசிறியும், மூன்றாவது பரிசாக கிறைண்டரும், மேலும் 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. அதனை விட 50 ஞானக் கதிர் சஞ்சிகையும், தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது. (ற-5)

## போதையில் ரகளை: ரூ.5,000 அபராதம்

அம்பாறை, ஜூன் 17

அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் பிரதேசங்களில் மது போதையில் கலகம் விளைவித்த இருவருக்கு அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் நீதிவான் நீதிமன்ற நீதிபதியுமான எச்.எம்.எம்.பஸீல் நேற்று செவ்வாய்க்கிழமை தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

மதுபோதையில் கலகம் விளைவித்த இரு நபர்கள் தொடர்பில் அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு சென்று குறித்த நபர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர். (ற)

# மாணவரை நற்பிரஜைகளாக்கும் பொறுப்பு பாடசாலைச் சமூகத்துக்கே அதிகம் உண்டு

## சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் சுட்டிக்காட்டு

தென்மராட்சி, ஜூன் 17

மாணவர்களை ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளாக மாற்றக்கூடிய பொறுப்பு பாடசாலை சமூகத்திடமே அதிகம் காணப்படுகிறது. சிறு வயது தொடக்கம் பாடசாலைகளில் வழங்கப்படும் பயனுள்ள செயற்பாடுகள் அவர்களை நற்பிரஜைகளாக மாற்ற ஏதுவாக இருக்கும். மாணவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் அதிபர் ஆசிரியர்கள் கண்காணிப்பதுடன் அவர்களின் நற்செயல்களை பாராட்டுவதுடன் தவறான செயல்களை தனியாக வைத்து அவர்களுக்கு விளங்கப்படுத்த அதிபர் ஆசிரியர்கள் முன்வரவேண்டும். - இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம்.

சாவகச்சேரியில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைகளின் அதிபர்கள் தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை அலுவலர் மற்றும் தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாணவர்களுக்கு வெறும் கல்வி அறிவை ஊட்டுவதுடன் நின்றுவிடாமல் மாணவர்கள் தம்மைத் தாமே ஆற்றகைப்படுத்தக்கூடிய தியானப் பயிற்சிகளை தினமும் வழங்கவேண்டும். இவை மாணவர்களை படிப்பில் ஊக்கத்துடன் ஈடுபடவும் நல்வழிப்படுத்தி மனதைக் கட்டுப்படுத்தவும் உதவியாக இருக்கும். மாணவர் ஒவ்வொருவரின் உயர்கல்வி தொடர்பான ஆலோசனைகள் அடிக்கடி அதிபர் ஆசிரியர்களால் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக கட்டிளம் பருவத்தில் கல்வியில் மட்டும் கவனம் செலுத்தும் பழக்கங்களை உருவாக்கவேண்டும். மாணவர்களின் கவனத்தை திசை திருப்பக் கூடிய பருவம் என்பதால் அவர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன் கவனம் மாறுவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு மாணவர் தவறு விட்டு விட்டால் அவரை பகிரங்கமாக தண்டிக்காமல் அதிபர் அல்லது ஆசிரியர் தனியாக அழைத்து அறிவுரைகள் கூற வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் அதிபர், ஆசிரியர்கள் மீது நம்பிக்கை ஏற்படுவதுடன் தனது தவறை உணர்ந்து திருந்த வாய்ப்பாகவும் அமையும்.

மாணவர்களுக்கு கல்வி அறிவுடன் சமூகப் பொறுப்பு உள்ளதை சுட்டிக்காட்ட வேண்டும். குறிப்பாக முதியோரை மதித்தல், அவர்களுக்கு உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை உருவாக்கவேண்டும். [illegible] உள்ள முதியோர் இல்லங்கள் சிறுவர் இல்லங்கள் போன்றவற்றுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கும் பழக்கங்களை உருவாக்க வேண்டும்.

வகுப்பறைகளில் உள்ள மாணவர்களுக்கிடையில் ஏழை, பணக்காரன் என்ற பேதம் காண்பிக்க இடமளிக்கக்கூடாது. அவ்வாறான தாழ்வு மனப்பாங்கு மாணவர்கள் மத்தியில் ஏற்படாமல் இருக்க அனைவரும் நண்பர்கள் என்னும் நிலைமையை உருவாக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் பாடசாலைகளுக்குள் நடைபெறும் செயற்பாடுகளுக்கு வெளியாள்களின் தலையீடு ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். வெளியாரின் தலையீடு பிள்ளைகளின் கல்வி நிலையில் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும்

பிரதேச செயலகத்தில், நீதிமன்றில் சிறுவர் நலன்களைக்கவனிக்கவென அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களை மாதத்தில் ஒரு தடவை அழைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சி தொடர்பான அறிவூட்டல் சொற்பொழிவுகளை நிகழ்த்த வேண்டும். மொழி அறிவு அவசியம் என்பதனால் ஒவ்வொரு மாணவரும் ஏனைய மொழிகளைக் கற்றுக் கொள்வதில் கவனம் செலுத்த அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக ஆங்கிலம், சிங்களம் போன்ற பாடங்களை மாணவர்கள் இலகுவாகக் கற்கக் கூடிய நடவடிக்கைகளை வகுப்பறைகளில் அந்தப் பாட நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்களுக்கு பிற மொழிகளைப் பேசுவதற்கு ஏற்படும் கூச்சசுபாவம் தானாகவே நீங்கும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் பிள்ளைகள் தமது பிரச்சினைகளைக் கூறுவதற்கு 'அபிப்பிராயப் பெட்டி' வைக்கப்படல் வேண்டும். அதனை சிறுவர் நன்னடத்தை அலுவலர் முன்னிலையில் திறந்து பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். பாடசாலைக்கு தொடர்ந்து தகுந்த காரணமின்றி ஒரு கிழமைக்கு மேல் வருகை தராத பிள்ளைகளின் எண்ணிக்கையை பட்டியலிட்டு சிறுவர் நன்னடத்தை அலுவலருக்கு தொலைபேசி ஊடாக அவ்வப்போது அறிவிக்க வேண்டும். அதைக் கொண்டு அந்த உத்தியோகத்தர் தகுந்த நடவடிக்கை எடுத்து மீளவும் அந்த மாணவன் அல்லது மாணவி கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதனை உறுதி செய்ய வேண்டும்

அதிபர், ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் அனாவசியமான தொடுகைகள் தவிர்க்கப்படல் வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கிடையிலான சந்திப்புக்களை ஏற்படுத்தி அதன் மூலம் பாடசாலைக்கு வெளியில் மாணவர்களுக்கு தொடர்பில்லாத களியாட்டங்களில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் அல்லாது தனியாகவோ அல்லது நண்பர்களுடனோ செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் மாணவர்கள் அனாவசியமாக சட்டத்தின் பிடியில் சிக்குவதையும் பாடசாலையின் நற்கீர்த்திக்கும் பங்கம் ஏற்படுவதையும் தவிர்க்க முடியும். - என்றார். (ற-9)

## விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு, ஜூன் 17

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நேற்று இரவு இடம்பெற்றுள்ள இருவேறு விபத்துக்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கு முன்பாக சைக்கிளும் லொறியும் மோதியதால், பழைய பொலிஸ் நிலைய வீதியை சேர்ந்த பொன்னம்பலம் நடராஜா (வயது 65) மரணமடைந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இவர், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களைத் தடுக்க இரவுவேளை ரோந்து

## யாழ்.நகரில் பொலிஸார் தீவிர நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் நகரிலும் – நகரை அண்டிய புறநகர் பகுதிகளிலும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக இரவு வேளையில் பொலிஸாரின் ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

நகரின் பஸ் நிலையச் சுற்றாடல் முற்றவெளி தனியார் பஸ் தரிப்பு நிலையச் சுற்றாடல், பண்ணை சுற்றுலா மையப் பகுதி, கரையோரப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கி பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை அமையவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் மற்றும் கால் நடையாகப் பொலிஸார் இந்தப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். இரவு வேளையில் நடைபெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சம்பந்தப்பட்டவர்களை உடன் கைது செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் புலனாய்வாளர்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை காரணமாக பண்ணை சுற்றுலா மையப் பகுதியில் இரவு வேளை கூட்டியிருந்து மதுபானம் அருந்துவோரைத் தற்போது காண முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது குடாநாட்டில் போதைப் பாவனையும் மிக அதிகரித்துள்ள நிலையில் – யாழ். நகரப் பகுதியில் அவற்றைக் கட்டுப்படுத்தும் முகமாகவே பொலிஸார் இந்த ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–17)

# மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக 2ஆவது முறைப்பாடு

## ஊழல் ஒழிப்புக் குழு செயலகத்தில் நேற்றுப் பதிவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

முன்னாள் அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தாவால் நடத்தப்படும் மகேஸ்வரி நிதியம், சட்டவிரோதமாக மணல் விநியோகத்தில் ஈடுபட்டமை மற்றும் பொதுமக்களிடமிருந்து கோடிக்கணக்கான பணத்தை சூறையாடியமை தொடர்பில் ஊழல் ஒழிப்புக் குழு செயலகத்தில் நேற்று இரண்டாவது முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவனால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் மகேஸ்வரி நிதியமானது, சட்டவிரோதமான முறையில் மண் அகழும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இந்த நடவடிக்கைகளுக்குப் பிரதேச சபையிடமிருந்து உரிய அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. மேலும் நீதிமன்றம் 286 ரூபாவுக்கு மணல் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், 13 ஆயிரத்து 500 ரூபா மணலை மகேஸ்வரி நிதியம் விற்பனை செய்துள்ளது.

இதன் மூலம் 8 வருடங்களில் பொதுமக்களின் நிதி சூறையாடப்பட்டுள்ளது. யார் யாரிடமிருந்து எவ்வளவு நிதி பெறப்பட்டதோ அந்த நிதி மீள வழங்கப்பட வேண்டும். மகேஸ்வரி நிதியத்தின் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்று முறைப்பாட்டாளரான சஞ்சீவன் குறிப்பிட்டார்.

சட்டத்தின் சில தேவைகளை மகேஸ்வரி நிதியம் பூர்த்தி செய்திருந்தாலும், மணல் அகழ்விலும் விநியோகத்திலும், சட்ட விரோதமாக அந்த அமைப்பு செயற்பட்டதாக, முறைப்பாட்டாளருடன் ஊழல் ஒழிப்புக் குழு செயலகத்துக்கு வருகை தந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருமான தவராசாவிடம் கேட்ட போது, கடந்த தடவை நான் குறிப்பிட்டதைப் போன்று இது அரசியல் காழ்புணர்ச்சியால் எடுக்கப்பட்ட நடவடிக்கை. மகேஸ்வரி நிதியம் சட்டபூர்வமானது. அதன் நடவடிக்கைகள் சட்டபூர்வமானவை. மணல் அகழ்வுக்கு இலங்கையில் அனுமதி வழங்கும் நிறுவனம், புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகம் மட்டுமே.

அந்த அனுமதி பெறப்பட்டிருந்தது. அத்துடன் மணல் அகழ்வின் போது அந்த திணைக்களத்தின் இரு அதிகாரிகள் நேரடியாக பிரசன்னமாகியிருப்பர். மணல் அகழ்வில் ஏதாவது தவறு நடந்திருந்தால் அந்தத் திணைக்களத்தினர் அதனைச் சுட்டிக்காட்டியிருப்பர்.

மேலும், நீதிமன்றம் 286 ரூபாவுக்கு மணலை விற்பனை செய்ய வேண்டும் என்று எப்போது தீர்ப்பளித்தது என்று கேள்வியெழுப்பியுள்ள தவராசா அந்தத் தீர்ப்பின் பிரதியை தருமாறு கேட்டுக் கொண்டார்.

> 8 வருடங்களில் பொதுமக்களின் நிதி சூறையாடப்பட்டுள்ளது. யார் யாரிடமிருந்து எவ்வளவு நிதி பெறப்பட்டதோ அந்த நிதி மீள வழங்கப்பட வேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதேவேளை– கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் யாழ்.மாவட்ட பார ஊர்த்தி சங்கத்தால், தமது பணத்தை சூறையாடியதாகத் தெரிவித்து, முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற–5)

## திடீர் சோதனையில் சிக்கிக் கொண்ட வர்த்தகர்கள்

வலி.தென்மேற்கு, ஜூன் 17

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது பல வர்த்தகர்கள் அகப்பட்டுக்கொண்டனர்.

திகதி காலாவதியான பொருள்கள் உட்பட சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் மானிப்பாய் மத்திய சந்தை உட்பட மானிப்பாய் பட்டினத்திலுள்ள 14 வர்த்தக நிலையங்களை சோதனை செய்த போது 9 வர்த்தக நிலையங்களில் திகதி, காலாவதியான பொருள்கள் உட்பட பாதுகாப்பான முறையில் வைக்கப்படாமலிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களைக் கைப்பற்றி அழித்துள்ளனர். (ற–115)

## கூ.சங்கங்களில் இளையோரை இணைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களில் இளம்வயதினரை அங்கத்தவர்களாக இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென சகல கூட்டுறவுச் சங்கங்களும் விசேட பொதுச்சபைக் கூட்டங்களைக் கூட்டி நூறுநாள் வேலைத் திட்டத்தில் சங்கங்களின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடி ஆராய்ந்து உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

குறிப்பாக இந்த நூறுநாள் வேலைத் திட்டத்தில் சகல கிளை நிலையங்கள் ஊடாகவும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளம் வயதினரை அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கிளைகளில் இருந்தும் குறைந்தது நூறு வரையிலான இளம் வயதினர் இணைக்கப்பட வேண்டும். அங்கத்தவர்களாக இணையும் இளம் வயதினருக்கு சம்பந்தப்பட்ட கிராமிய வங்கிகள் ஊடாக தொழில் முயற்சிக்கான கடன் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அதனால் கூட்டுறவுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற இளம் வயதினர் முன்வர வேண்டும்.

சகல சங்கங்களும் நகர, கிராம மட்டங்களில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி இளம் வயதினரை சங்கங்களில் அங்கத்தவர்களாக இணைப்பதற்கு முன்வர வேண்டும். மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி துண்டுப் பிரசுரங்களை வழங்க வேண்டும்.

சங்கங்களில் இந்த விழிப்புணர்வு செயற்பாடுகளில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள். அத்துடன் சங்கங்களின் கிளைக்குழு உறுப்பினர்களுக்கான விசேட பொதுச்சபைக் கூட்டங்களைக் கூட்டி இது தொடர்பாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ற–17)

# மாற்றுத் திறனாளிகளின் உற்பத்திக்கு சந்தை வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்

## சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் அனுசா கோகுல பெர்னாண்டோ தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 17

சமூக சேவைகள் அமைச்சால் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளைக் கொண்டு மாற்றுத்திறனாளிகள் மேற்கொள்ளும் உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்புகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். – இவ்வாறு தெரிவித்தார் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அனுசா கோகுல பெர்னாண்டோ.

சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுத்திறனாளிகளை சமூக மட்டத்தில் வைத்து புனர்வாழ்வளிக்கும் சமுதாய மட்டத்திலான புனருத்தான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் (சி.பி.ஆர்.) செயலமர்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மாவட்ட ரீதியாக மாற்றுத் திறனாளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டு வருகின்றேன். அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினேன். அவர்கள் தங்களுக்கான தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து என்னிடம் கூறினர்.

வாழ்வாதார உதவிகள் மூலம் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாக அவர்கள் கூறினர். அவர்களின் உற்பத்திகளுக்கான சந்தையை சமூக சேவை உத்தியோகத்தர்கள் அடையாளம் காணவேண்டும். [illegible] வெளிமாவட்டம் அல்லது [illegible] சந்தையா? என்பதை அடையாளங் கண்டு அதற்கான ஏற்பாடுகளை அவர்களுக்குச் செய்ய வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேவைகள், பிரச்சினைகள் குறித்து தொடர்ந்தும் அறிந்த வண்ணம் இருப்பேன். பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் நுழைவதற்கு [illegible] செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். – என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சி.சத்தியசீலன்:–

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் பலவிதமான தேவைகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. போருக்குப் பின்னர் அதிகளவான மாற்றுத்திறனாளிகள் உருவாகியுள்ளதுடன் அவர்களுக்கான தேவைகளும் அதிகரித்துள்ளன. அனைவரையும் ஒருங்கிணைத்து செயலாற்ற வேண்டும். – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் மத்திய அரசின் சமூக சேவைகள் அமைச்சின் சி.பி.ஆர். திட்ட தேசிய இணைப்பாளர் எம்.ஆர்.சாந்தகுமார, சி.பி.ஆர். திட்ட கிளிநொச்சி இணைப்பாளர் சு.ஜெயானந்தராஜா, சமூக சேவைகள் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலர், மாவட்ட உளவள துணையாளர், 4 பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த சமூக சேவைகள் அலுவலர்கள், சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர்கள், சமூக சேவைகள் உதவியாளர்கள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், தொண்டர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தில் விக்கிரகம் தகர்க்கப்பட்டுத் திருட்டு



கிளிநொச்சி, ஜூன் 17

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் கோவிலில் மூலஸ்தான விக்கிரகம் தகர்க்கப்பட்டு விக்கிரகத்தினுள் இருந்த ஐம்பொன் உலோகங்கள், ஆலயத்தின் உண்டியலில் உள்ள பணம் மற்றும் வேறு சில பொருள்களும் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

இரவு பூசைகள் முடிந்து ஆலயம் பூட்டப்பட்ட பின்னர் நள்ளிரவில் ஆலயத்தின் வலது பக்க கதவை உடைத்து உள்நுழைந்து பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

முறைப்பாட்டை அடுத்து மோப்ப நாய்கள் சகிதம் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

எதிர்வரும் சனிக்கிழமை ஆலயப் பொங்கல் திருவிழா நடைபெறவிருக்கும் நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அதனால் அந்தப் பகுதி மக்கள் மிகுந்த மனக் கிலேசம் அடைந்துள்ளனர்.

ஆலய விக்கிரகம் தகர்க்கப்பட்ட போதும் விக்கிரகத்துக்குப் பாதிப்பு இல்லை என்று தெரிவித்துள்ள ஆலய நிர்வாகத்தினர் வெகு விரைவில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு மூலஸ்தான விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படும் என்றும் தெரிவித்தனர். அத்துடன் எதிர்வரும் சனிக்கிழமை பொங்கல் திருவிழா திட்டமிட்டவாறு நடைபெறும் என்றும் கூறினர். (ற-21,4)

# வீட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்த சுயதொழில்கள்

## குடும்பத் தலைவிகளை ஊக்கப்படுத்த விவசாய அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 17

வீட்டுப்பொருளாதாரத்தை மேம்படுத்தி விடுவதற்காக வேலை வாய்ப்பற்றிருக்கும் வீட்டுத் தலைவிகள் விவசாயம் சார்ந்த சுயதொழில்களில் ஈடுபடுவது தொடர்பாக அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

காளான் வளர்ப்பு, இயற்கைப் பசளை விவசாயம் மற்றும் பூச்செடிகள் வளர்ப்பு போன்ற திட்டங்களின் கீழ் அவர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள வீட்டுத் தலைவிகள் ஊக்கப்படுத்தப்படவுள்ளதோடு, இதன் முதற் கட்ட நடவடிக்கையாக கடந்த 10 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் உள்ள வீட்டுத் தலைவிகள் 500 பேருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்ததாக விவசாய அமைச்சு தெரிவிக்கிறது.

வேலைப்பளு காரணமாக பரபரப்பாக இயங்கும் வீட்டுத்தலைவிகள் வீட்டிலிருந்தவாறே வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு ஊக்கமளிப்பதன் மூலம் குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தி விடுவதால் தேசிய உற்பத்திக்கு அவர்களின் பங்களிப்பு கிட்டுவதாகவும் வீட்டுத் தலைவிகளுக்கு தொழில்நுட்ப அறிவு, வழிகாட்டல்கள் மற்றும் உற்பத்திகள் தொடர்பாகவும் வர்த்தக சந்தைகளை அறிமுகப்படுத்தி விடுவதற்கும் அமைச்சு தலையிட்டு செயற்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுத்தோட்டத்தை வருமானமீட்டும் மார்க்க மொன்றாக அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் நச்சுக்களற்ற உணவுப் பாவனை தொடர்பாக ஊக்கப்படுத்தி விடுவதும் இதன் குறிக்கோளாகியிருப்பதாக விவசாய அமைச்சு தெரிவிக் கிறது.

அத்துடன் அம்பாறை மாட்டத்தின் வீட்டுத் தலைவிகளை ஊக்கப்படுத்திவிடும் செயற்பாட்டுக்கு கொரிய நாட்டு சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் தயா உதவிகள் அமைப்பும் நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக்கொடுத்திருந்தன.(ற-22)





நாடு முழுவதும் உள்ள சுகாதாரத் திணைக்களங்களால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று கிளிநொச்சி சிவபாத கலையகம் பாடசாலை மாணவர்கள் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். டெங்கு ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அவர்கள் பதாகைகளையும் தாங்கியிருந்தனர். அதேவேளை, கிளிநொச்சியில் திணைக்களங்கள், பாடசாலைகள் பலவும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளைத் தற்போது மேற்கொண்டு வருகின்றன. (ற-21)

## திடீரென நிறுத்திய பஸ்ஸில் மோதி ஒருவர் படுகாயம்

### காயமடைந்தவரை சிகிச்சைக்கு கொண்டு செல்லாது அலட்சியம்



யாழ்ப்பாணம், ஜூன் 17

திடீரென நிறுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையின் பஸ்ஸுடன் மோதி காயமடைந்த நபரை, வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாமல் பஸ் சாரதியும் – நடத்துநரும் செயற்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில், விசுவமடுவைச் சேர்ந்த குலசிங்கம் (வயது–65) என்பவரே காயமடைந்தவராவார்.

புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தனை நோக்கி இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வேகமாக வந்துள்ளது. பரந்தன் சந்திக்கு அண்மையில் வைத்து, பயணி ஒருவர் பஸ்ஸை மறித்துள்ளார். அதனால் பஸ் திடீரென நிறுத்தப்பட்டது.

பஸ் திடீரென நிறுத்தப்பட்டதால் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த விவசாயி ஒருவர் பஸ்ஸுடன் மோதி படுகாயமடைந்தார். அவர் விற்பனைக்கு கொண்டு வந்த மரக்கறிகளும் வீதியில் சிதறின.

காயமடைந்த விவசாயியை, வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு பேருந்தின் நடத்துநரும் – சாரதியும் முன்வரவில்லை. அங்கு கூடிய பொதுமக்களும் அக்கறை கொள்ளவில்லை.

நீண்ட நேரமாக இரத்தம் வழிந்தோடிய நிலையில் இருந்த அவரை, அவரின் உறவினர்கள் வந்து மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (ற-5,21)

## உடைந்துவிழும் நிலையில் மின்மாற்றி

### சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை

நிந்தவூர் வைத்தியசாலைக்கு முன்பாக பொருத்தப்பட்டிருக்கும் மின்மாற்றியின் கொங்றீட் தூண்கள் செயலிழந்து விழும் நிலையிலுள்ளதாக பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சுமார் 7 அடி உயரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் இந்த மின்மாற்றியை தாங்கிக் கொண்டிருக்கும் கொங்றீட் தூண்கள் செயலிழந்து மிகவும் மோசமான நிலையில் உடைந்துள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

இத்தூண்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனினும், இதுவரை காலமும் இது புனரமைக்கப்படாது பாதுகாப்பற்ற முறையில் உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் [illegible] தொடர்பில் அவதானம் [illegible] வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட அம்பாறை மக்களுக்கு நிதியுதவி

அம்பாறை, ஜூன் 17

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 800 குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் 800 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் இக்குடும்பங்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக ஹண்டிகப் இன்டர்நேர்ஷனல் நிறுவனத்தின் உடனடி செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 7 குடும்பங்களுக்கு முதல்கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது.



இந்நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை ஆலையடிவேம்பு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அரச சார்பற்ற சர்வதேச தொண்டு நிறுவனமான ஹண்டிகப் இன்டர்நேஷனல் நிறுவனம் ஐரோப்பிய ஆணைக்குழுவின் மனிதாபிமான செயலகத்தின் அனுசரணையோடு [illegible] அம்பாறை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

இந்த நிறுவனத்தின் இடர் அபாயங்களைக் குறைக்கும் செயற்திட்டத்தின் முகாமையாளரான ஷரண்யா ரவிகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன், ஆலையடிவேம்பு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தனராஜன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு இவ்வாறான இரண்டு கொடுப்பனவுகள் குறித்த குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதுடன், இச்செயற்திட்டத்துக்கான நடவடிக்கைகளில் ஹண்டிகப் நிறுவனத்துடன் இணைந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகமும் ஈடுபடவுள்ளது. (ற)

## இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை 125 ஆண்டு நிறைவையிட்டு நடைபவனி

வவுனியா, ஜூன் 17

வவுனியாவில் புகழ்பெற்ற தேசிய பெண்கள் பாடசாலையாகத் திகழும் இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், பாடசாலை சமூகத்தால் கல்லூரியைக் கௌரவப்படுத்தும் வகையில் மாபெரும் நடைபவனி ஒன்று எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையிலிருந்து ஆரம்பமாகி வவுனியா நகரம் வழியாக மீண்டும் பாடசாலையை வந்தடையவுள்ளது.

1890ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை, பல்வேறுபட்ட சவால்களைச் சந்தித்து சமுதாயத்தில் பல்வேறுபட்ட கல்விமான்கள் மற்றும் நற்பிரஜைகளை உருவாக்கி 125 வருட சாதனைப் பயணத்தில் வெற்றி நடை போடுகின்றமையை உலகறி யச்செய்யும் நோக்குடன் இந்த நடை பவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நடைபவனியில் அதிபர் திரேசம்மா சில்வா, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என அனைவரையும் பங்கு கொள்ளுமாறு கல்லூரி சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்கள் அதிகரிப்புக் குறித்து இதுவரை தீர்மானம் ஏதுமில்லை

## அதில் ஐ.தே.கவுக்கு உடன்பாடுமில்லை என்கிறார் பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா

கொழும்பு, ஜூன் 17

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகையை 237 ஆக அதிகரிப்பது தொடர்பில் இதுவரையில் எந்தவித தீர்மானமும் எட்டப்படவில்லை. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகையை அதிகரிப்பது தொடர்பிலும் ஐ.தே.க.வுக்கு உடன்பாடும் இல்லை. – இவ்வாறு வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்பே உத்தேச 20 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், தேர்தலின் பின் ஐ.தே.க. மூன்றிலிரண்டு பெருமான்மையை கைப்பற்றுமென எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளதாவது:–

நாட்டின் அரசியல் களத்தில் 20 ஆவது திருத்தமா? நாடாளுமன்றத்தை கலைப்பதா? அல்லது 20 ஆவது திருத்தத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகையில் மாற்றம் செய்வதா? ஆகிய கேள்விகளே தொடர்ந்தும் வினவப்படுகின்றன.

அதன் பிரகாரம் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகை 237 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகின. ஆயினும் அது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானங்களும் அரசால் எட்டப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகையை 225 அல்லது 255 ஆக கொண்டமைந்த சட்டமூலங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன. 237 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சட்டமூலம் பற்றி பேச்சுக்கள் மட்டுமே நடைபெறுகின்றன.

ஐக்கிய தேசிய கட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 ஆக இருத்தல் வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. அதனால் 20 ஆவது திருத்தம் குறித்து ஐ.தே.க. துரிதமாக செயற்படாது. மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் பொது தேர்தல் ஒன்றுக்கு செல்லவே எமது கட்சியின் அவதானம் திரும்பியுள்ளது.

19ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் பெரும் நெருக்கடிகளை ஐ.தே.க. அரசு சந்தித்தபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய சற்றுக் காலம் தாழ்த்தப்பட்டது.

அதன் காரணமாக 19ஆவது திருத்தச்சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ள ஐ.தே.க அரசுக்கு முடிந்தது. அது போன்று 20ஆவது திருத்தத்தை ஐக்கிய தேசிய கட்சி வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளும்.

எதிர்வரும் தேர்தலின் பின் ஐக்கிய தேசியக் கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கைப்பற்றும் என்ற எதிர்பார்ப்பும் எமக்கு உள்ளமையால் ஐ.தே.க. அரசைக் கொண்டே 20 ஆவது திருத்தம் எவ்வித தடையுமின்றி நிறைவேற்றப்படும்.

அவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் வெற்றி காணும் பட்சத்தில் தனி ஆட்சி அமைக்காது, தேசிய அரசொன்றை உருவாக்கவே எதிர்பார்த்துள்ளது. எவ்வாறாயினும் தேர்தல் முறைமாற்றம் எப்போது நிகழ்ந்தாலும் 2020 ஆம் ஆண்டு தேர்தலின் போதே நடைமுறைக்கு வரும்.

அரசின் நிலை இவ்வாறிருக்க மறுபுறம் அரசை முடக்குவதற்காக சிலர் நம்பிக்கை இல்லாப் பிரேரணைகளை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நல்லாட்சியை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றனர்.

அவ்வாறான நோக்கங்களுடன் செயற்படுகின்றவர்களை ஆதரித்து ஊழல்வாதிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடம் கொடுக்கமாட்டார் என எதிர்பார்த்துள்ளோம்.

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த எவரும் பிரதமர் பதவிக்கு தகுதியுடையவர்கள் என கூற முடியாது, குறிப்பாக எதிர்க் கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, நாமல் ராஜபக்ஷ போன்ற வர்கள் பிரதமர் பதவிக்கு வருவார் களா னால் எமது நாட்டின் நிலை என்ன ஆகும் என்பதை அனைவரா லும் புரிந்து கொள்ளக் கூடியதாகஇருக்கும்.–என்றார். (ற)

# பொதுத்தேர்தலில் தனித்தே போட்டி

## ஜே.வி.பி. திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 17

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிட எண்ணியுள்ளதுடன், நாடாளுமன்றத்திலும் தனித்து இயங்க தீர்மானித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த அரசின் செயற்பாடுகள் அனைத்துமே ஒரு சில அரசியல் பிரமுகர்களின் தேவைக்கும் பெரும்பாலும் மக்களை ஏமாற்றும் விதமாகவுமே அமைந்தன இவ்வாறான காரணங்களினாலே நாம் நாடளாவிய ரீதியில் எமது கட்சியின் சார்பில் மக்களை தெளிவுபடுத்தி ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம்.

ஆட்சி மாற்றத்தின் பின்பும் புதிய அரசு மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால் அவற்றை நிறைவேற்றத் தவறியே இன்று செயற்படுகிறது.கடந்த பத்து வருடங்களாக முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக் ஷ எவ்வாறு தமது பதவியையும் ஆட்சியையும் தக்க வைத்துக் கொள்ளத் தொடர்ச்சியாக செயற்பட்டாரோஅவ்வாறே இந்த அரசும் செயற்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவுடன் முன்னைய ஆட்சிக்காலத்தில் கைகோர்த்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று எமது நாட்டை வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றவர்களுக்கு இன்று இந்த அரசு அமைச்சுப் பதவிகளை வழங்குகின்றது. இவ்வாறான செயற்பாடுகளினால் இன்று நல்லாட்சி என்று கூறிக் கொண்டிருக்கும் இந்த அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துவருகின்றது.

நூறு நாள்கள் மட்டுமே இந்த அரசுக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர். இதனை கருத்தில் கொண்டு உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதோடு சிறுபான்மைக் கட்சிகள் உட்பட அனைவரும் ஆதரவளிக்கும் வகையில் 20 ஆவது திருத்தத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

முன்னைய சர்வாதிகார மஹிந்த ராஜபக் ஷவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே ஆட்சிமாற்றம் ஒன்றை மக்கள் ஏற் படுத்தினர். இவ்வாறான நிலையில் முன்னைய அரசின் செயற்பாடுகள் போல் இந்த அரசின் செயற்பாடுகளும் அமையுமானால் மக்களின் நம்பிக்கையை இந்த அரசும் இழக்க நேரிடும். எனவே தெரிந்தே இந்த அரசும் மேற்கொள்ளும் பிழையான செயற்பாடுகளைக் கைவிட வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேண்டுகோளின் பிரகாரம் எமது கோரிக் கைகளுக்கு செவிசாய்த்து எமது மக்கள் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த பெரும் பங்களிப்பை வழங்கினார்கள். அந்த வகையில் எதிர் வரும் பொது தேர்தலில் எமது கட்சி தனி த்து போட்டியிட்டு அதிகளவான நாடாளுமன்ற பிரதிநிதித்து வங்களை பெறும். அதே வேளை நாடாளுமன்றத்திலும் மக்களுக்கான சேவைகளை செய்வதற்குத் தனித்துச்செயற்படும்.–என்றார். (ற)

# புலம்பெயர் தமிழர் நினைத்தால் சமூகத்தைத் தூக்கி நிறுத்த முடியும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 17

புலம் பெயர் நாடுகளில் வாழும் உறவுகள் நினைத்தால் போரால் பாதிக்கப்பட்ட எங்களுடைய தமிழ் மக்கள் இந்த அரசிடமோ அல்லது யாரிடமோ கையேந்தி நிற்கத் தேவையில்லை. அவர்கள் ஒரு ரூபா வழங்கினாலே போதும் எங்களுடைய சமூகத்தை நாங்கள் தூக்கி நிறுத்திவிடலாம். – இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நிறைய உதவி செய்கின்ற அமைப்புக்கள் இருக்கின்றன. இங்கே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். இங்கே முதலமைச்சர் நிதியம் ஒன்று உள்ளது. இவற்றினூடாக புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழுகின்ற ஒவ்வொரு தமிழ் மகனும் அவர்களது குடும்பத்திலே 5 அங்கத்தவர்கள் இருந்தால் ஒருவருக்கு ஒரு ரூபா வீதம் 5 பவுண்களோ சோ அல்லது 5டொலர்களோ வழங்கினால் உண்மையிலேயே எங்களுடைய கையேந்தி நிற்கின்ற சமூகத்தை யாருடைய தயவும் இன்றி தூக்கி நிறுத்திவிட முடியும். அவர்களை தங்களுடைய சொந்த காலிலே நிற்க வைப்பிக்கவும் முடியும்.

புலம்பெயர்ந்த உறவுகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். உதவி செய்கின்ற அமைப்புக்களினூடாக அல்லது முதலமைச்சர் நிதியத்தினூடாக உங்களுடைய உதவிகளை நீங்கள் செய்வேண்டும். எங்களுடைய சமூகத்தைத் தூக்கி நிறுத்த வேண்டும். எங்களுடைய சமூகம் சின்ன ஒரு உதவி செய்தாலே அதைப் பற்றிக்கொண்டு எழுந்து நிற்கின்ற சமூகம். ஆகவே இந்த உதவி என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் போய் சேருகின்ற போது அவர்கள் எழுந்து நின்று தங்களுடைய பணியையும் தங்களுடைய வேலைகளையும் செய்வார்கள்.

போராக இருக்கலாம், அல்லது குடும்பங்களை தாங்குகின்ற திறனாக இருக்கலாம் உடனடியாக செய்கின்ற திறமை கொண்டது எங்களுடைய இனம். அந்த வகையிலே எமது மக்களுக்கு புலம் பெயர்ந்தவர்களாலே தான் உதவிகளை மேற்கொள்ளமுடியும். என்றார். (ற–21)

# சிறிய விடயத்தைக் கையாள்வதற்கும் திறனற்றுப் போயுள்ளார் சட்டமா அதிபர்

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாகனத்தின் இலக்கத்தைப் போலியாகப் பொருத்திக் கொண்டு பயன்படுத்திய கார் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வ தென்பது ஒரு சிறு விடயமே என்றாலும் கூட சட்டமா அதிபர் அதைக் கூடக் கைவிட்டுள்ளார் என்று பிரதிவெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரித்துள்ளார்.

ஒரு சில அரச நிறுவனங்களின் நடைமுறைப் போக்கின் காரணமாக ஊழல்கள் மற்றும் மோசடிகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டியுள்ளோரை சட்டத்தின் முன் நிறுத்துவது தாமதமாகியுள்ளதா கவும் பிரதி அமைச்சர் தெரிவித் துள்ளார்.

அண்மையில் அரச தகவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஊடகச் சந்திப்பொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

லஞ்ச, ஊழல்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகளில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லையென மக்கள் இன்று கேள்வி எழுப்புகின்றனர்.

அது நியாயமானதே. நெத்தலிகள் முதற் கொண்டு பெரும் சுறாக்கள் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும் சில அரச நிறுவனங்களின் நடைமுறைப்போக்குகள் காரணமாக வழக்குகள் மற்றும் கைதுகள் தாமதமாகியுள்ளன. அதற்கு உதாரணமொன்றை முன்வைக்க முடியும். 2015 ஜனவரி 14ஆம் திகதி அன்று கெஸ்பாவ பிரதேசத்தில் வைத்து அதிசொகுசு பந்தயக் காரொன்று கைப்பற்றப்பட்டது. அதன் தொடரிலக்கம் டபிள்யூ. பி.கே.ஈ. 1391 ஆகும்.


இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால்இன்று பயன்படுத்தப்படும் பென்ஸ் காரின் இலக்கமாகும். போலி இலக்கத்துடனான இந்த வாகனத்தைப் பயன்படுத்தியிருந்தவர் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரொருவரே என்பதைஅனைவரும் அறிந்திருந்தனர்.

இந்த மோட்டார் கார் இன்றும் கூட கெஸ்பாவ நீதிமன்ற வளாகத்தில் காணப்படுகிறது. இந்த வாகனம் குறித்து சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான காரணிகள் நிறையவே உள்ளன. இது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனைகளைக் கோரி 4 மாதங் களா கின்றன. இவை மிகச் சிறிய விடயங்களே.மாதக் கணக்கில் இழுத்தடிக்க வேண்டியுள்ள விடயங்கள் அல்ல. இது சம்பந்தப்பட்ட கோவையை ஆராய்ந்து பார்த்து முன்னெடுக்கப்பட வேண்டியுள்ள சட்டச் செயற்பாடுகள் பற்றி நிர்ணயிப்பதற்கு சட்டமா அதிபருக்கு ஓரிரு தினங்கள் தாராளமாகவே போதுமானதாகும்.

ஆனாலும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாகனத்தின் இலக்கத்தைக் களவாகப் பொறித்துச் செலுத்திச் செல்லப்பட்ட 400 லட்சங்கள் பெறுமதி கொண்ட மோட்டார் காரைப் பற்றிய விசாரணைகளை முடிப்ப தற்கு இன்று வரையிலும் சட்டமா அதிபர் திறனற்றுப் போயுள்ளார். இதேபோன்று பொலிஸாரால் விசா ரணைகள் முடிக்கப்பட்டு சட்டமா அதிபரிடம் ஆலோசனை களைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதக் கோவைகள் ஏராளமாக உள்ளன. எனவே இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றி நிலவும் வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு நாம் சட்டமா அதிபருக்கு கோரிக்கை விடுத்து நிற்கிறோம்.–




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தகுதிக்கு மீறி எவருக்கும் வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். குடும்பச் செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். பிள்ளைகளின் செயல்பாட்டைக் கண்டிக்க நேரிடும்.

**இடபம்:** எதிரிக்கு தக்க பதிலடி கொடுக்க வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் அதிக வருமானம் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு மனதுக்கு மகிழ்ச்சி தரும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** கவனக் குறைவான செயல்பாடு பிரச்சினையை ஏற்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் வரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். உணவு விடயத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது.

**கடகம்:** கடந்த கால அனுபவம் மூலம் நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் கூடும். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். இயன்ற அளவில் மற்றவருக்கு உதவி புரிவீர்கள்.

**சிங்கம்:** உழைப்புக்கு உரிய பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். மனைவியின் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பீர்கள். ஆடம்பரச் செலவால் சேமிப்புக் கரையும்.

**கன்னி:** பணிகளில் கவனக்குறைவு ஏற்படலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். அரசியல்வாதிகள் தலைமையின் எதிர்ப்புக்கு ஆளாகலாம்.

**துலாம்:** பொது விடயங்களில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. அவசிய செலவுக்காக கடன் வாங்க நேரிடும். உடல் நலனில் விழிப்புணர்வு உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் புதிய உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்க வாய்ப்புண்டு. பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**தனுசு:** பிறருக்கு உதவும் மனப்பான்மை உண்டாகும். சமயோசிதமாக செயல்பட்டு தொழிலில் இலாபம் காண்பீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். ஆடை, ஆபரணம் வாங்க யோகமுண்டாகும்.

**மகரம்:** எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். நல்ல மனிதர்களின் அறிமுகம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழிலில் போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது. பணியாளர்கள் பணி விடயமாக அலைச்சலுக்கு ஆளாவர்.

**கும்பம்:** உங்கள் மீது பிறர் குறை காணும் சூழ்நிலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் வரும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகத்தை பின்பற்றவும்.


**மீனம்:** மற்றவர் புகழும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வழியில் வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆன்மீக விடயங்களில் ஆர்வம் காட்டுவர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

## நெருக்கக் காட்சி ஒளிப்பதிவாளரை வெளியேற்றிய நடிகை



பொலிவுட் நடிகைகள் வரிசையில் சக கதாநாயகிகளுக்கு போட்டியாக வளர்ந்து வருகிறார் கங்கனா ரனாவத்.
குயின் படத்துக்காக தேசிய விருது பெற்றார். தற்போது கட்டி பட்டி படத்தில் நடித்து வருகிறார். இம்ரான் கான் கதாநாயகன்.
கதாநாயகனுடன் நெருக்கமான காட்சியில் கங்கனா நடிக்க ஒப்புக் கொண்டிருந்தார். குறிப்பிட்ட காட்சியின் போது ஒளிப்பதிவாளர்கூட இருக்கக் கூடாது. காட்சியைத் தானே படமாக்குவதாக கங்கனா கூறினார். இதை கேட்டு இயக்குனரும் ஒளிப்பதிவாளரும் அதிர்ச்சி அடைந்தனர்.
தடாலடி நடிகையான கங்கனா அவ்வப்போது இதுபோல் ஏதாவது ஏடாகூடமாக செயற்படுவது வழக்கம். அதனால் கங்கனாவின் நிபந்தனையை இயக்குனர் மற்றும் ஒளிப்பதிவாளர் ஏற்றனர். கை அகல கமராவை வைத்துக் கொண்டு 7 நிமிடம் ஓடும் அந்தக் காட்சியை கங்கனாவே படமாக்கினார்.

## உலகின் வயதான பூனை சாவு



அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள டிபானி என்ற பூனை தான் உலகின் மிக வயதான பூனையாக இருந்தது. தனது வயது 27 வருடங்கள், 2 மாதம், 20 நாள்கள் ஆன நிலையில் அது தூக்கத்திலேயே சாவடைந்தது என்று கின்னஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.
அங்குள்ள ஒரு செல்லப்பிராணிகள் கடையில் இருந்து அந்தப் பூனையை 6 வார குட்டியாக இருந்தபோது ரோன் வோர்ஹீஸ் என்பவர் 10 டொலர் விலை கொடுத்து வாங்கினார். அப்போது ஒரு பூனைக்கு 10 டொலர் என்பது மிகப் பெரிய தொகையாக இருந்தது. இப்போதைக்கு இந்த பூனை தான் மிக அதிக காலம் உயிருடன் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.


## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

வீட்டுக்கு சாப்பிட வந்தேன் . வந்த உடனே ஆரம்பிச்சவங்க ஒரு மணி நேரம், திணறத் திணற அடி பின்னி எடுத்திட்டாங்க...... அடிச்ச கை வலிக்குது என்று நிறுத்தின கப்புல, எதுக்குமா அடிக்கிறாய் என்று ஒரு கேள்வியைக் கேட்டன், ஏன்டா நான் உனக்கு போன் பண்ணினா, நீங்கள் தொடர்பு கொண்ட நபர் வேறு ஒருவருடன் தொடர்பில் உள்ளார் என்று சொல்லுறாங்க.... டேய் அவ யாருடா?

## பிக் ஸ்டிச்


ஒளிப்படங்களை அழகிய ஒளிப்படத் தொகுப்பாக மாற்ற வழி செய்கிறது பிக் ஸ்டிச் செயலி. ஐபோன் மற்றும் அண்ட்ரொய்டு தொலைபேசிகளில் செயற்படும் இந்தச் செயலி மூலம் பல ஒளிப் படங்களை ஒன்றாகத் தைத்துத் தொகுக்கலாம்.
இதற்கான வடிவமைப்பும், டெம்ப்ளேட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. விரும்பியதைத் தேர்வு செய்து கொள்ளலாம். டெஸ்க்டொப், பேஸ்புக் என எதிலிருந்தும் படங்களை எடுத்துத் தொகுக்கலாம்.
ஸ்மார்ட் போனில் புதிதாக எடுக்கும் ஒளிப்படங்களையும் பயன்படுத்தலாம். இந்தத் தொகுப்பை எளிதாக எடிட் செய்யலாம். அப்படியே சமூக வலைத் தளத்தில் பகிர வும் செய்யலாம்.

## சந்திரனிலும் நில நடுக்கம்



பூமியின் துணைக் கிரகமான சந்திரனின் மேற்பரப்பிலும் புவி அடுக்குகள் போல அடுக்குகள் இருக்கின்றன என்றும் அந்த அடுக்குகள் நகர்கின்றபோது, அங்கும் நில நடுக்கம் ஏற்படுகிறது என்றும் தெரியவந்துள்ளது. சந்திராயன் விண்கலம் எடுத்து அனுப்பிய படங்களை ஆராய்ச்சி செய்ததன் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
சந்திரனின் தென்துருவத்தில் பெறப்பட்ட தகவல்கள், சந்திரனின் மேற்பரப்பில் அடுக்குகள் நகர்ந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதை வெளிப்படுத்துகின்றன. அதுவும் இந்த அடுக்குகளின் நகர்தல், பூமியில் புவித்தட்டுகளின் நகர்தல் போலவே அமைந்துள்ளது.
பூமியின் மேற்பரப்பில் உள்ள அடுக்குகளில் இரண்டாவது அடுக்கு எரிந்துகொண்டிருப்பதால், டெக்டானிக் பிளேட்டுகள் நகர்கின்றன எனவும் இது தொடர்பில் ஆராய்ச்சி செய்த பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர். இரண்டாவது அடுக்கு எரிந்து கொண்டிருப்பதால், அங்குள்ள பாறைகள், கனிமங்கள், தாதுக்கள் உருகி, பாகு போன்ற திரவ நிலையில் உள்ளன. இதேபோன்ற நிலையை சந்திரனின் மேற்பரப்பிலும் காண முடிகிறது.
எனவே, பூமியின் வடிவமைப்பில் தான் சந்திரனும் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியதாகிறது. அந்த வகையில் பூமியில் ஏற்படுகிற நில நடுக்கத்தையும், சந்திரனில் ஏற்படுகிற நில நடுக்கத்தையும் ஒப்பிட்டு ஆராய முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.
தற்போது நில நடுக்கத்தை முன் கூட்டியே கணிக்க வழி இல்லை. எனவே எதிர்காலத்தில் சந்திரனின் மேற்பரப்பில் ஏற்படுகிற டெக்டானிக் பிளேட்டுகளின் நகர்தல், நில நடுக்கம் ஆகியவற்றை பூமியில் ஏற்படுகிற நில நடுக்கத்துடன் ஒப்பிட்டு ஆராய்ந்தால், அது பூமியில் நில நடுக்கத்தை முன்கூட்டியே கணிப்பதற்கு ஒரு முன்னோடியாக அமையும் என இந்த படங்களின் ஆராய்ச்சியின் பின் தெரியவந்துள்ளது.

## விஷாலுக்கு சறுக்கல்



நடிகர் சங்கத் தேர்தலுக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது. நடிகர் சங்கத்துக்கு எதிராகக் கொடி பிடித்து வரும் விஷால் தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை அளித்துள்ளது.
ஜூலை 15 ஆம் திகதி தென்னிந்திய நடிகர்கள் சங்கத் தேர்தல் நடக்க உள்ளது. இந்தத் தேர்தலில் தலைவர் பதவிக்கு சரத்குமாரும், பொதுச் செயலாளர் பதவிக்கு ராதாரவியும் மீண்டும் போட்டியிடுகின்றனர். இதற்கிடையே, நடிகர் சங்கக் கட்டட விவகாரம் தொடர்பாக சரத்குமார் அணிக்கும், விஷால் அணிக்கும் காரசாரமான வாக்குவாதங்கள் நடைபெற்று வருகின்றன.
இந்த நிலையில், நடிகர் விஷால் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.
அதில், நடிகர் சங்கத் தேர்தல் நடைபெறும் ஜூலை 15 ஆம் திகதி புதன் கிழமை. வேலை நாளான படியால் அன்று வெளியூரில் படப்பிடிப்பு களில் இருப் போரால் இந்தத் தேர்தலில் கலந்து கொள்ள இயலாது. எனவே, தேர்தல் தினத்தை இரண் டாம் ஞாயிறான விடுமுறை தினத்தில் நடத்த வேண்டும். ஓய்வு பெற்ற நீதிபதிகள் தலைமையில் நடத்த வேண்டும் அத்தோடு எனக் குறிப் பிட்டிருந்தார்.
இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, நடிகர் சங்கத் தேர்தலுக்கு தடை விதிக்க இயலாது எனத் தெரிவித்து விட்டார். மேலும், இது தொடர்பாக இரண்டு வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என நடிகர் சங்கப் பொதுச்செயலாளர் ராதாரவிக்கு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளை கண்காணிக்கக் குழு

## காத்தான்குடி சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜுன் 17

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் கிராம மட்டத்தில் சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழுக்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக காத்தான்குடி சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் சி.சத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 18 கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளில், 04 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராமமட்டத்தில் சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழுக்கள், இச்செயற்றிட்டத்தின் கீழ், இவ்வருடம் புனரமைக்கப்பட்டள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறுவர்களின் பிரச்சினைகள், தேவைகளை இனங்காணல், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சமூகத்துக்கு விழிப்பூட்டல் மற்றும் பிரதேச மட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறுவர் கழகங்களை கண்காணித்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு கிராம மட்டத்தில் சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்களில் கிராமசேவை அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதி, தாதி மற்றும் அதிபர் ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர்.

சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராம மட்டத்திலான சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழுக்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (ற)

## மரண அறிவித்தல்

### கனகரட்ணம் அருந்தேஸ்வரி



தோற்றம் : 29.12.1959
மறைவு : 14.06.2015

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாவும் வவுனியா, பண்டா ரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் அருந்தேஸ்வரி (யசோ) 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரட்ணத்தின் அன்பு மனைவி யும், அரவிந்தன் (கனடா), தவராணி (பிரான்ஸ்), அருள்ராசா (பிரான்ஸ்), இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், அன்சவா (கனடா), சச்சிதானந்தம் (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்), கணநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அஸ்வின், எஜிவின், தேனுஜன், சைந்தவி, சாளினி, பிரவீண், சகாணா, பிரதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கனகேஸ்வரி, விக்கினேஸ்வரன், மகேஸ்வரன், சந்திரேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2015) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு பண்டாரிக்குளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.91/5, குளோப் மில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா. T.P.024 567 0157

தகவல்:
கணவர், பிள்ளைகள்.
(58597) (45.7.5)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை பொன்னையா(பொன்னுத்துரை)



பிறப்பு 17.12.1924 இறப்பு 16.06.2015

அளவெட்டி வடக்கு சாத்தாகலட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு, தடுவாங் கலட்டியை வசிப்பிடமாகவும் தற் போது டச்சுறோட், அளவெட்டி மேற்கில் வசித்து வந்தவருமான திருமதி அன்னப்பிள்ளை பொன்னையா (பொன்னுத்துரை) 16.06.2015 செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா (பொன்னுத்துரை) அவர்களின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை அதிபர் மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை), விக்னேஸ்வரி, மல்லிகாதேவி(கனடா), இரஞ்சிதமலர், இந்திரவதனி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் இந்திராணி, தம்பித்துரை, இராமநாதன் (கனடா), ரவீந்திரமூர்த்தி, ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜித்திரா(அபிவிருத்தி உத்தியோகத்தர் பொதுச்சேவை ஆணைக்குழு - நல்லூர்), சுயதீப்(ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி) நிசாகன் (பொறியியலாளர் CECB கொழும்பு), லதீபா (நோர்வே), கஜதீபன், சஜீபா(கனடா), தரிஷ்கா(கனடா), அனுசா(கனடா), தர்சினி (கனடா), சுதாகரன்(கனடா), சிவாகரன்(கனடா), துஷிகரன் (யாழ்கோ - அளவெட்டி), துஷாந்தன், கோபி(கனடா), வசந்தகுமார் (மாகாணக் கல்வி அமைச்சு - யாழ்ப்பாணம்), சசிரேகா(ஆசிரியர் - அத்தியார் இந்துக் கல்லூரி), சிவபாலன்(நோர்வே), தயாநந்தினி, குயிந்தன்(கனடா), மகிந்தகோபு (கனடா), பிரதீபன்(கனடா),சுரேஸ்குமார்(கனடா), துரேகா (கனடா), நிரோஜா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கேசிகா துவாரகன், அட்சயன் (நோர்வே), சாருஜா(நோர்வே), ஸ்சுபஸ்ரிகா, ஹரீஸ், யாழினா (கனடா), ஆரன்(கனடா), கேதீஸ்(கனடா), அபிஷா(கனடா), இனியா (கனடா), அபிசரன்(கனடா) ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.06.2015) புதன் கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் அளவெட்டி கேணிப்பிட்டி இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
பொ.சுந்தரலிங்கம்
(மகன் ஓய்வு நிலை அதிபர் மகாஜன கல்லூரி தெல்லிப்பழை)

டச்சுறோட்,
அளவெட்டி மேற்கு.

## மரண அறிவித்தல்

### திருமதி

# மாலினி நகுலேஸ்வரன்

( இளைப்பாறிய ஆசிரியை )



கிளானை, கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கிளுவானை ஒழுங்கை, கோப்பாய் மத்தி, கோப்பாயை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாலினி நகுலேஸ்வரன் (முன்னாள் ஆசிரியை - கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்) 15.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயாவிளான் தெற்கு சபாரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற உமாகாந் அவர்களின் அன்புச் சகோதரியும், நகுலேஸ்வரன் (முன்னாள் சிறுவர் பாதுகாப்பு Save the Children in Srilanka உதவி மாவட்ட முகாமையாளர் - கிளிநொச்சி, ஆறுதல் நிறுவனம், வைமன் வீதி , யாழ்ப்பாணம் செயற்திட்ட அபிவிருத்தி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும். சதீஸ், கமலினி (லண்டன்) கௌரிசங்கர் (லண்டன்), சுபாஜினி, தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவரூபி, கருணாகரன் (லண்டன்) அருணா(லண்டன்) குகனேஸ்வரன் (தபால் ஊழியர் கிளிநொச்சி), சுந்தரதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும். நதீசன், தருணீஷ், அபிஷா, மகிஷா அனீஷ், அக்ஷனா, நிகிதா, நிகிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2015) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளுவானை ஒழுங்கை, கோப்பாய் மத்தி, கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் எடுத்து செல்லப்பட்டு கோப்பாய் கைதடி வீதியில் உள்ள கந்தன் காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
தொ. இல. 076 628 9170, 021 223 0455

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மிக வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான பாலவிஹார் எனும் ஆன்மிக வகுப்புக்கள் பிரதி ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நல்லூரில் அமைந்துள்ள ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வகுப்புக்களில் சுய ஒழுக்கம், சிறந்த ஆற்றல் உள்ள தலைமைத்துவம், கலை, கலாசார விழுமியங்களைப் பேணும் தன்மை, தன்னம்பிக்கையுடன் மகிழ்ச்சியாக சேவை செய்யும் மனப்பாங்கு, முரண்பாடுகள் அற்ற ஆரோக்கியமான நேர்மனப்பாங்குள்ள எண்ணங்கள் போன்ற சிறந்த விழுமியப் பண்புகள் கற்பிக்கப்படுகின்றன.

சின்மயமிஷனின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளால் இந்த வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆர்வமுடைய மாணவர்கள் இந்த வகுப்புக்களில் பங்குபற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# வலி. மேற்கில் புதிதாக 8 நூலகங்கள் அமைப்பு

### 'வேள்ட் விசனின்' ஒருங்கிணைப்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட பிரிவில் 'வேள்ட் விசன்' நிறுவனத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் 8 நூலகங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. அத்துடன் இந்தப் பிரிவில் மேலும் இரு நூலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நூலகங்களுக்குத் தேவையான நூல்கள் மற்றும் அலுமாரிகளை 'வேள்ட் விசன்' நிறுவனமும், தளபாடங்களை சங்கானை சம்பத் வங்கியும் வழங்கி உள்ளன. பிரதேச சபையும், பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களும் இணைந்து நூலகருக்கான கொடுப்பனவைவழங்கவுள்ளன.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் பெரிய புலோ, சுழிபுரம் காட்டுப்புலம், தொல் புரம் கிழக்கு, அராலி தெற்கு, அராலி மேற்கு, அராலி மத்தி ஆகிய இடங்களிலேயே நூலகங்கள் திறந்து வைக்கப்பட்டன. பல்லசுட்டி, தொல்புரம் மேற்கில் நூலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பிரதேசசபைத் தவிசாளர் கலந்து கொண்டு நூலகங்களைத் திறந்து வைத்தார். 'வேள்ட் விசன்' நிறுவன ஒருங்கிணைப்பாளர் வி.வென்சஸ், சம்பத் வங்கி யின் அலுவலர்கள், வலி.மேற்கு பிரதேச செயலக உத்தியோகத் தர் கள், சனசமூக அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-29)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு தொழில் பயிற்சி அதிகார சபையால் புதிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாலிநகரில் தகவல் தொழில் நுட்பம், தையற்கலை, வீட்டு மின்னிணைப்பு ஆகிய கற்கை நெறிகளும், ஒட்டுசுட்டானில் தகவல் தொழில் நுட்பம், தையற்கலை, நீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய கற்கை நெறிகளும், முல்லைத்தீவில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், கணினி வன்பொருள் தொழில் நுட்பம், பெண்களுக்கான அழகுக்கலை, சிகை அலங்காரம், தையற்கலை, முச்சக்கர வண்டி திருத்துநர், அலுமினிய கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துநர், வெளியிணைப்பு இயந்திர திருத்தம் ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுடையவர்கள் மாங்குளம் வீதி, முல்லைத்தீவில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்துடன், 021-229-0097 அல்லது 07103 189 89 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு. ஒட்டுசுட்டான் சந்தைக்கட்டடத்தின் கடைகளுக்கான வைப்புப்பண மீள்கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2015 ஜூலை பத்தாம் திகதி தொடக்கம் முதலாம் வருடம் (31.12.2015 வரை) மாதம் ரூபா 1,750.00 (ரூபா ஓராயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்.) வீதம் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 18.06.2015 – 01.07.2015 வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 02.07.2015 முற்பகல் 10.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரசீலிக்கப்படும் திகதி :- 02.07.2015 பிற்பகல் 02.30 மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 02.07.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 02.07.2015 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்குச் சமுகமளிக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங் கப்படமாட்டா. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்க லாம்.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
7. வாடகை வருடா வருடம் சபையால் நிர்ணயிக்கப்படும்கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.
8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம் : மகன், மகள்)
9. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
12. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும். என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
13. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
14. கேள்வி சம்பந்தமாக மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT.NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கடை இலக்கம் 01 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 2 | கடை இலக்கம் 02 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 3 | கடை இலக்கம் 03 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 4 | கடை இலக்கம் 04 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 5 | கடை இலக்கம் 08 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 6 | கடை இலக்கம் 10 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 7 | கடை இலக்கம் 11 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |

புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.

கு.மிதிலைநாதன்,
செயலாளர்,
பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.


## மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தின் கிளைகளின் தேர்தல் ஒத்திவைப்பு

### கோரமில்லாததை அடுத்து

வலி.தென்மேற்கு, ஜூன் 17

கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு பொதுச் சபையில் கோரமில்லாததால் மானிப்பாய் கோயிற்பற்று ப.நோ.கூ. சங்கத்தின் கீழுள்ள ஐந்து கிளைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்து 23 கிளைகளுடன் பல வருடங்களாக சிறப்பாக இயங்கி வந்த மானிப்பாய் கோயிற்பற்றுப் ப.நோ.கூ. சங்கம் நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க்கால சூழ்நிலையாலும் வியாபாரமின்மையாலும் பெரிய நட்டத்துக்குள்ளானதால் தற்பொழுது ஒன்பது கிளைகளுடன் மட்டும் இயங்கி வருகின்றது.

இந்தநிலையில் இயங்காமல் மூடப்பட்டிருக்கும் கிளைகள் உட்பட 23 கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல் கடந்தவாரம் நடைபெற்றது. கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட பொதுச்சபைக் கூட்டங்களில் கோரமில்லாததால் ஐந்து கிளைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இக்கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல்களை மீண்டும் நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்படிசங்கம் மேற்கொண்டுள்ளது.(ற-115)

## குரங்குகள் தொகை மதிப்பீடு தென்மராட்சியில் ஆரம்பம்

வரணி, ஜூன் 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து குரங்குகளை அப்புறப்படுத்தும் நோக்கத்துடன், அவைகளின் தொகை தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளும் நடவடிக்கை இம் மாதம் 15ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தால் பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் முன்னெடுக்கப் பட்டுவருகின்றது.

இது விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பிரதேச செயலகத்தில் கடந்த வார முற்பகுதியில் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு யாழ்ப்பாண மாவட்ட விவசாய திணைக்களப் பணிப்பாளர் கே.ஸ்ரீபாலசுந்தரம் மற்றும் உதவிப் பிரதேச செயலர் ர.நவரட்ணம், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ற.ரகுநாதன், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட விவசாய திணைக்களப் பணிப்பாளர் கருத்துத் தெரிவித்ததாவது:–

வன ஜீவராசிகள் திணைக்களமானது எந்த ஒரு ஜீவராசிகளையும் அவற்றின் உயிர்களைப் பாதுகாப்பதே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது.

கடந்த மாத காலத்தில் குரங்குகளைப் பிடித்து அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவைகள் தொடர்பில் வில்பத்து காட்டுப் பகுதியில் குரங்குகள் விடப்பட்ட சமயம் புத்தளம் பகுதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. இதில் உண்மை நிலை பற்றி கூறமுடியாதுள்ளது.

இருந்தும் எமது பிரதேசத்தில் குரங்குகளால் ஏற்படும் பாதிப்புக்கள், அழிவுகள் பற்றி நாம் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு மீண்டும் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலையில், ஒரு மாத காலத்துக்கு தென்மராட்சிப் பிரதேசத்தின் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் குரங்குகளின் சஞ்சாரம் தொடர்பான சகல விவரங்களையும் பதிந்து கொள்ளும் முகமாக ஒரு விண்ணப்பப் படிவம் ஒன்று ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கப்படும். அவற்றை உரிய குடும்பத்தர்கள்பதிந்துஎம்மிடம்ஒப்படைக்கஆவன செய்ய வேண்டும் – என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலர்:–

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்தப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இந்தப் பணிக்கு கிராம ரீதியாக இயங்கும் விவசாய சம்மேளன பிரதிநிதிகள், கிராமிய நிறுவனங்கள், கிராம அலுவலர்கள் அனுசரணை வழங்கி உதவ வேண்டும்.– என்றார். (ற-122)

## ஆசிரியர் விடுதி திறப்பு

யா/எழுவைதீவு றோ.க.த.க. வித்தியாலய புதிய ஆசிரியர் விடுதி திறப்பு விழா இன்று மு.ப 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் ப.விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. இன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் கலந்துகொண்டு விடுதியை திறந்து வைக்கவுள்ளார். நிகழ்வின் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச சபை உப தவிசாளர் எம்.எப்.எப்.அல்பேட் அவர்களும், கௌரவ விருந்தினராக தீவக வலயம் வலயக்கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ்ஸும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீசிங் நிறுவன குழு சாரதியை தாக்கிய வழக்கில் மேலும் 4 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

லீசிங்கில் பெறப்பட்ட முச்சக்கர வண்டிக்குரிய தவணைப் பணத்தைச் செலுத்த தவறியதை அடுத்து அதனை திரும்பப் பெற்றுக்கொள்வதற்குச் சென்ற லீசிங் நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் தாக்கி சாரதி காயமடைந்தமை தொடர்பான வழக்கில் மேலும் நான்கு சந்தேக நபர்கள் நீதிமன்றின் அதிரடி நடவடிக்கையால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் லீசிங் நிறுவனமொன்றில் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் முச்சக்கரவண்டியை பெற்ற ஒருவர் அதனை இன்னொருவருக்கு நாளாந்த வாடகைக்கு கொடுத்திருந்தார். எனினும் சில மாதங்களுக்குரிய தவணைப்பணத்தை அவர் செலுத்தவில்லை. கடந்த 11 ஆம் திகதி யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்துக்குச் சென்ற லீசிங் நிறுவனத்தைச் சேர்ந்த சிலர் குறித்த முச்சக்கர வண்டியைக் கொண்டு செல்ல முற்பட்டபோது அதன் சாரதி அதனைத் தடுத்துள்ளார். இதனையடுத்து அவரை சினிமாப் படப்பாணியில் அக்குழுவினர் தாக்கியுள்ளனர். அதில் சாரதி காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் லீசிங் நிறுவனத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவரை கைதுசெய்து அன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவரை நேற்றுமுன்தினம்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் பெ.சிவகுமார் ஏனைய சந்தேகநபர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு கட்டளையிட்டிருந்தார்.

எனினும் நேற்றுமுன்தினம் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பொலிஸார் எவரையும் கைது செய்து முற்படுத்தவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணி சம்பவத்துக்கு மறுநாள் வெளிவந்திருந்த 'உதயன்' பத்திரிகைச் செய்தியை மன்றில் காட்டி யாழ். நகரில் பட்டப் பகலில் இச்சம்பவம் இடம்பெற்றிருந்த போதும் பொலிஸார் ஏனைய சந்தேக நபர்களை இதுவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லையென முறையிட்டார்.

அதையடுத்து ஏனைய சந்தேகநபர்களை உடனடியாக கைதுசெய்து முற்படுத்துமாறு நீதவான் பெ.சிவகுமார் பொலிஸாருக்குக் கட்டளையிட்டார். விரைந்து செயற்பட்ட பொலிஸார் பிற்பகலில் நான்கு சந்தேகநபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-103)

## நாவிதன்வெளியில் மினி சூறாவளி

அம்பாறை, ஜூன் 17

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் நேற்று முன்தினம் மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. அதில் வீடுகளின் கூரைகள் மற்றும் மதில்கள் சேதமடைந்துள்ளன.

6ஆம் கொலணி, சொறிக்கல்முனை, 4ஆம் கொலணி, வீரத்திடல் பிரதேசங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், மின்சார தூண்களும் உடைந்தன. இதனால், மின்சாரக் கம்பிகள் அறுந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டது. (ற)

## ஒரு மாதத்துள் 180 வர்த்தகர்களுக்குத் தண்டம்

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒரு மாதத்துள் நுகர்வோர் அதிகாரசபையின் சட்டங்களை மீறி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த 180 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டதாக மாகாண நுகர்வோர் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் எச்.எல். அப்துல் குத்தூஸ் தெரிவித்துள்ளார்.

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, குறிக்கப்பட்ட விலையை விடவும் அதிக விலைக்கு பொருட்களை விற்றமை, தொகுதிக் குறியீடு பொறிக்கப்படாமை, காலாவதியான பொருள்களை விற்றமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 180 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

திருகோணமலையில் 72 கடை உரிமையாளர்களிடம் இரண்டு இலட்சத்து 86 ஆயிரம் ரூபாவும் மட்டக்களப்பில் 69 பேரிடம் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 900 ரூபாவும் அம்பாறை மாவட்டத்தில் 39 கடை உரிமையாளர்களிடம் 93,500 ரூபாவும் அறவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ற)

# வருடாந்த திருவிழா

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும். திருவிழாக்கள் வரிசையில் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாயக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

* * *

அளவெட்டி பெருமாக்கடவை ஆல யத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும். திருவிழாக்கள் வரிசையில் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

* * *

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் (பேச்சி அம்மன்) ஆலய பெரும் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 26ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 30ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் முதலாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். பிரம்மஸ்ரீ சுந்தர பாலமுரளிதரக் குருக்கள் தலைமையில் பெரும் திருவிழாக் கிரியைகள் இடம்பெறும். (ற-9)

## பனை, தென்னை வ.கூ.ச பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அங்கத்துவ பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கான பயிற்சி நெறி ஒன்றை நடத்தி வருகின்றது.

முதற்கட்டமாக கரவெட்டி, சாவகச்சேரி, வேலணை ஆகிய சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கான பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை சமாச மண்டபத்தில் இடம் பெற்றது. சமாசத் தலைவர் என்.கணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி ஆரம்ப நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் கலந்து கொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பயிற்சி நெறியில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.புவன்ராஜ் வளவாளராகக் கலந்து கொண்டு பணிப்பாளர் சபையின் கடமைகள், பொறுப்புகள், அதிகாரங்கள் தொடர்பாக கருத்துரை வழங்கினார். (ற-17)


## முடிவில்லாத் துயரலையில் 15ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு ★ 01.06. 1933

உதிர்வு ★ 03.07.2000

**அமரர் கந்தையா மயில்வாகனம்** பொலிஸ் பப்பா

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

திதி: பிரதமை (17.06.2015)

ஆண்டுகள் பதினைந்து ஆகியும் என் கவலை தீரவில்லை
இந்த உலகில் வாழ்ந்த காலம் போதுமென்றோ பரமனடி சேர்ந்தீர்கள்
இறுதிவரை எனக்குத் துணையாக இருப்பீர்கள் என்றிருந்தேன்
பூவுலகு விடைகொடுக்க பொன்னுலகம் சென்று விட்டீர்கள்
நான் தனி மரமாகத் தவிக்கின்றேன் இவ்வுலகில்
என் விதியை நொந்து உங்கள் காலடிக்கு வரும்வரை
சந்நிதியான் நிழலில் சரணடைந்த என் அன்புத் தெய்வமே
என் உயிர் உள்ளவரை உங்கள் நினைவோடு வாழ்வேன்.
பிறந்த நாள் 01.06.33, திருமணநாள் 02.05.66, இறந்த நாள் 03.07.2000
பிறந்தோம், வாழ்ந்தோம், இறைவனோடு சேர்ந்தோம் என்று முடிந்தது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

(6100)(10.3)

பழைய பாலத்தடி, தொண்டமானாறு.

திருமதி. ம.பரமேஸ்வரி (மனைவி)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

மயில்வாகனம் இராசரெத்தினம்

திதி : பிரதமை

தோற்றம் 30.06.1930

மறைவு 28.06.2014

ஓராண்டு ஓடி மறைந்து விட்டது ஐயா
மறக்க முடியவில்லை உங்களை
மீண்டும் ஒரு பிறவி இருந்தால் வாருங்கள்
ஐயா எங்கள் தந்தையாக.....?

இன்று (17.06.2015) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெறும் எமது தந்தையின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

42, பிரப்பங்குளம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

முருகேசு கந்தசாமி

[உரிமையாளர் ராஜன் எலக்றிக்கல்ஸ் - பருத்தித்துறை.]



கடந்த 19.05.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் முருகேசு கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.06.2015) வியாழக்கிழமை காலை 5.00மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது துயரச் செய்தி அறிந்து உடன் வந்து துயரில் பங்குபற்றியோர் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் தொலைநகல் மூலம் எம்முடன் துயர் பகிர்ந்தோர், கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை வீதி, 4ஆம் தெரு சந்தி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி



மாந்தை கிழக்கு பிரதேசசபையின் செயலாளராகக் கடமையாற்றிய

முருகேசு கிருஸ்ணநவரத்தினராசா

அவர்கள் 14.06.2015 காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
மாந்தைகிழக்கு பிரதேசசபை
பாண்டியன்குளம்.

## கண்ணீர் அஞ்சலி



சின்னப்பு நடராசா

வரணியைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டை, இரண்டாம் கட்டையை வசிப்பிடமாகவும், தற்போது வரணி இயற்றாலையில் வசித்தவருமான சின்னப்பு நடராசா 14.06.2015 ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"சிவகாமி இல்லம்"
மார்க்கண்டு குடும்பம், மன்னார்.

(C/17683) (10.3)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் வேலு செல்லையா

கடந்த 20.05.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் வேலு செல்லையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.06.2015) புதன்கிழமை கீரிமலையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 19.06.2015 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லம் உள்ள பூங்காவனச் சந்தி, முல்லை வீதி, பரந்தனிலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(57128)(10.3)

**பூங்காவனச் சந்தி,**
**முல்லை வீதி, பரந்தன்.**

**குடும்பத்தினர்.**
**தொலைபேசி: 0773743444**

## நன்றி தெரிவிப்பு

### தமிழரசு .க. சின்னத்துரை



கடந்த 10.06.2015 அன்று எமது தந்தை **அமரர் தமிழரசு க-சின்னத்துரை (J.P)** அவர்களின் மரணச் செய்தி கேட்டு அமர ரின் வீட்டுக்கு விரைந்து வந்து வீட்டில் செய்ய வேண்டிய முற்கருமவேலைகள் எதுவென அறிந்து அமரரின் உடலைப் பக்குவப்படுத்தி வெளிநாட்டில் இருந்து நமது குடும்பம் வருவதற்கு முன்பாகவே எது தேவை எனக் கருதி அக் கருமங்களை முன்னின்று -செயற்கரிய சேவை எதுவென அறிந்து- செய்து முடித்த எமது உறவினர்கள் உற்றார் சுற்றத்தார் எல்லோருக்கும் முதற்கண் நன்றியறிதலை எமது குடும்பத்தார் சார்பில் தெரிவிக் கின்றோம். மேலும் கடல்கடந்து வாழ்ந்தாலும் எங்கள் ஐயாவின் மரணச் செய்தி கேட்டு எங்களது துயரங்களுக்கு தாமும் அனுதாபங்களைத் தெரிவித்து எம்முடன் துயர் பகிர்ந்த அன்பு உள்ளங்கள் உறவுகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

ஐயாவின் மரணம் எங்கள் குடும்பத்துக்கு மட்டும் இழப்பில்லை என்பதை அமரரின் இறுதிக்கிரியைகள் மூலமும் உணர்த்தியும் தமது கண்ணீர் அஞ்சலி உரை நிகழ்த்தியதன் மூலமும் உணர்த்திய அரசியல் தலைவர்களுக்கும் அஞ்சலி இதழ் வெளியிட்டு வைத்தும் மலர் வளையங்கள் வைத்தும் தம்கடன் பணிசெய்வதே என்ற நன்மொழிக்கிணங்க தமது பணியை திறம்படச் செய்த அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் சிறு சிறு உதவி களைக் கூடச் சிரம் மேற்கொண்டு நடந்துகொண்ட எல்லோருக்கும் எமது குடும்பத்தின் சார்ப்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் பந்தல்கள் அமைத்து ஒலி,ஒளி தந்து வாகன உதவி செய்தவர்களுக்கும் இறுதிக்கிரியையின் போது ஊர்வலத்தில் கலந்துகொண்ட நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கின்றோம். மேன்மேலும் நமது குடும்பம் ஐயாவால் செய்து கொண்ட பணிகள் முன் னெடுப்புக்கள் கட்சியின் சேவைகள் அரசியல் தொடர்புகளை ஐயா கொண்ட கொள்கை மாறாது தமிழரசுக் கட்சியுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் இணைந்து நற்சேவை செய்ய காத்திருக்கின்றோம்.

**வன்னிய சிங்கம் வீதி,**
**ஆவரங்கால்,**
**புத்தூர்.**

**தமிழரசு க. சின்னத்துரை**
**குடும்பத்தார்.**

## நீங்காத நினைவுகளில் 8ஆம் ஆண்டு

அன்னை மடியில்
04.11.1956

அம்பாள் பாதங்களில்
16.06.2007



ஒத்த நிறை பண்புடைய பெற்றோர்
ஈந்த தவப்புதல்வியே!
அன்னை துர்க்கா தேவியின் தொண்டராய்
சமய, சமூக பணிகள் ஆற்றினீர்,
அன்பெனும் ஆர்வத்தால் ஒன்றுகூடிய
பெரியோர் முன் மணவாழ்வில் இணைந்தீர்.
கருமேகங்கள் சூழ்ந்து இடி இடித்த காலத்தில்
கொள்கை மாறாது வாழ்ந்தீர்.
விழிப்பு நிலை என்ற அருள் கொண்டு விருப்பு வெறுப்பு
எனும் சூழலைக் கடந்து கடமை உணர்வுடன்
சிக்கனமும் சிந்தனையும், சிறந்த பண்பும்
கொண்டு சிறப்புடன் வாழ்ந்தீர்.
பிறர் உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை
ஆராய்ந்து எதிர்விளைவைக் கணித்து
மிக்க நலமுள்ள வழியே செயல்களாற்றி
மேலான அறவழியில் வாழ்ந்தீர்
எங்கள் மண்ணில் நிகழவிருந்த வேரவலங்களை
காணச்சகிக்காமல் சென்றீரோ!
கிழக்கு வானம் வெளிக்கிறது என்று
எங்கள் பார்வைக்கு தெரியும்போது
எங்கள் மண் பண்பாட்டு விழுமியங்களை
இழந்து வாழப்போவதை புரிந்து சென்றீரோ!
அறிவினில், நெறியினில், இல்லை என்பார்க்கு
உதவுவதில், நியாயத்துக்காக குரல் கொடுப்பதில்
பின்நிற்காத உமது வாழ்க்கைப் பயணத்தை
எட்டாம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**கணவர், தாய்,**
**சகோதரர், உறவினர்கள்.**

### திருமதி
### கணேஸ்வரி தம்பிராஜா

திதி: வளர்பிறை 17.06.2015

"துர்க்கா இல்லம்",
26/5, பிரம்படி வீதி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒன்லைன் வங்கிச் சேவையில் கடவுச் சொற்களாக ஈமோஜிகள்

தற்போது உலகளாவிய ரீதியில் பிரபலமடைந்து வரும் ஒன்லைன் வங்கிச் சேவையில் கடவுச் சொற்களாக Pin Code பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் அவற்றில் காணப்படும் பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக எதிர்காலங்களில் ஈமோஜிகள் (Emogis) எனப்படும் குறியீடுகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்தத் தகவலை பிரித்தானியாவிலுள்ள Intelligent Environments எனும் மென்பொருள் வடிவமைப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. சாதாரணமாக Pin Code உதவியுடன் 7,290 வகையான கடவுச் சொற்களை உரு வாக்கும் அதே சமயத்தில் ஈமோஜிகள் மூலம் மில்லியன் கணக்கான (3,498,308) கடவுச் சொற்களை உருவாக்கிக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதி உச்ச பாதுகாப்பினை பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.


# ட்ரோன் விமானங்களை தயாரிக்கும் மைக்ரோசொப்ட்



அண்மைக்காலமாக ட்ரோன் எனப்படும் சிறிய ரக விமானங்களைத் தயாரிப்பதில் பல்வேறு நிறுவனங்களும் முனைப்புக் காட்டி வருகின்றன.

இந்த நிலையில் மைக்ரோசொப்ட் நிறுவனமும் இந்த விமானத் தயாரிப்பில் இறங்கியுள்ளது. எனினும் அதன் நோக்கமானது ஏனைய நிறுவனங்களின் நோக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. அதாவது நுளம்புகளை அழித்தல் மற்றும் வைரஸ் மூலமான தொற்று நோய்கள் மனிதர்களை தாக்க முன்னரே கண்டறிந்து பாதுகாப்பை ஏற்படுத்தல் போன்றவற்றிற்காக இந்த விமானம் பயன்படுத்தப்படவுள்ளது. Premonition எனும் திட்டத்தின் ஊடாக இந்த விமானத் தயாரிப்பு இடம்பெறவுள்ளது.மேலும் ரிமோட்டின் உதவியுடன் இயக்கக்கூடியதாக இருப்பதால் எந்தவொரு இடத்துக்கும் அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இழையங்களை மீளப் புதுப்பிக்கக்கூடிய மாத்திரை



சிதைவடைந்த இழையங்களை மீண்டும் புதுப்பிக்கக்கூடிய மாத்திரை ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பெருங்குடல், ஈரல் மற்றும் என்பு மச்சைகளில் உள்ள இழையங்கள் சிதைவடைந்தால் அவற்றை மீளப் புதுப்பிக்க இந்த மாத்திரை உதவும். எனினும் இந்த மாத்திரை எலிகளில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்ட போதிலும் இதுவரை மனிதர்களில் சோதனைக்குட்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாத்திரையைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் குழுவிற்கு தலைமை தாங்கிய Sanford Markowitz கருத்து தெரிவிக்கையில் இந்த மாத்திரை தொடர்பாக தாம் ஆச்சரியம் அடைவதாகவும், விற்றமின்களை போன்றே இதனைத் தயாரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# பாலமுனை பிரதான வீதி விளக்குகளை ஒளிர வைக்குமாறு மக்கள் கோரிக்கை

அம்பாறை, ஜூன் 17

பாலமுனை பிரதான வீதியில் இரவு நேரங்களில் பயணம் செய்வோரின் நலன் கருதி அட்டாளைச்சேனை பிரதேச சபையால் பொருத்தப்பட்டுள்ள 'சோலர்' சக்தி மின் விளக்குகளை ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி, வயல் மற்றும் ஆற்றை ஊடறுத்துச் செல்வதால் இரவு நேரங்களில் இவ்வீதியால் செல்வோர் காட்டு யானைகள் மற்றும் முதலைகளின் அச்சுறுத்தலுக் குள்ளாக வேண்டியுள்ளது. அத்துடன், இரவு வேளையில் இப்பகுதியில் அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

"அட்டாளைச்சேனை பிரதேச சபை மக்களின் நலன்கருதி சில மாதங்களுக்கு முன்னர் அக்கரைப்பற்று – கல்முனை நெடுஞ்சாலையிலுள்ள அட்டாளைச்சேனை, பாலமுனை பிரதேசங்களை இணைக்கும் பிரதான வீதியில் மின்கம்பங்களை அமைத்து மின் குமிழ்களையும் பொருத்தியிருந்து.

இந்த மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் குமிழ்கள் தற்போது ஒளிர்வதில்லை. சூரிய சக்தியில் இயங்கும் 6 தெரு மின் விளக்குகளுடனான கம்பங்களை நிர்மாணிக்கப்பதற்காக அட்டாளைச்சேனை பிரதேச சபையால் 5 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செல விடப்பட்டுள்ளதாக அறிய முடிகி றது. ஆனால்,இதனால் மக்களுக்குஎதுவித பயனும் இதுவரை கிடைக்கவில்லை.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு ஒளிராத தெருமின்விளக்குகளை ஒளிரச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)



வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்தின் கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்து, வெலிக்கடை கைதிகள் கொலைக்கு எதிரான மக்கள் அமைப்பு, ஆர்பாட்டமொன்றை வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று முன்னெடுத்தது. (ற)

# ஆசிரியர் கலாசாலைக்கு 'பியானோ' கையளிப்பு

## இசுருபாய கல்வி அமைச்சால்

வலி.வடக்கு, ஜூன் 17

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு நேற்றுமுன்தினம் வந்திருந்த இசுருபாய கல்வி அமைச்சுக் குழுவினர் கலாசாலையின் தற்போதைய நிலைமைகள் குறித்து நிர்வாகத்துடன் கலந்துரையாடினர்.

இதன்போது இசுருபாய கல்வி அமைச்சின் வழங்கல் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் ஐ.எம். கே.பி. இலங்கசிங்க கொரியத் தயாரிப்பு பியானோ இசைக்கருவி ஒன்றை ஆசிரிய மாணவர்களின் பயன்பாட்டுக்காக கலாசாலை நிர்வாகத்திடம் கையளித்தார்.

கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன், உப அதிபர் த.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் அதனைப்பெற்றுக்கொண்டனர். (ந-86)



# காணாமல்போன யுவதி சடலமாக மீட்கப்பட்டார்

கிளிநொச்சி, ஜூன் 17

கடந்த 12ஆம் திகதி முதல் காணாமல்போனார் என்று தெரிவிக்கப்பட்ட யுவதி ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காட்டைச் சேர்ந்த கனகசூரியர் சரண்யா( வயது24) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த 12ஆம் திகதி காலை முதல் குறித்த யுவதியைக் காணவில்லை என உறவினர்கள் தேடிவந்தனர். நேற்றுக் காலை சந்தேகத்தில் வீட்டு வளவில் உள்ள இரு கிணறுகளிலும்தேடிய பின் அருகிலுள்ள பாவனையற்ற கிணற்றிலிருந்து குறித்த சடலம் கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 வயதில் திருமணம் 13 வயதில் விதவை

புதுடில்லி,ஜூன் 17



ராஜஸ்தானில் சிறுமி ஒருவருக்கு 2 வயதில் திருமணம் செய்து வைத்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தானில் டோங் மாவட்டத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 22 பேர் உயிரிழந்தனர். அதில் 15 வயதுச் சிறுவன் ஒருவனும் உயிரிழந்துள்ளார். அந்தச் சிறுவன் 13 வயதான சோஹானி தேவி என்ற சிறுமியின் கணவராவார்.

அந்தச் சிறுமிக்கு 2 வயதாக இருக்கும் போதே சுக்கிராம் என்ற அந்தச் சிறுவனை திருமணம் செய்து வைத்துள்ளனர்.

படிக்கவேண்டிய வயதில் அந்தச் சிறுமி விதவைக்கோலம் பூண்டுள்ளமை சமூக ஆர்வலர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தனது கணவனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக அவரது மாமனார் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அந்தச் சிறுமி தனக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் இருந்துள்ளார்.

ஆனால் அந்த மாநிலத்தில் அதிகளவான சிறுமிகளுக்கு சிறு வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படுவதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.(ஐ)

# அமெரிக்காவை எச்சரிக்கிறது ரஷ்யா

மாஸ்கோ,ஜூன் 17

தங்கள் நாட்டின் எல்லை அருகே அமெரிக்கா ஆயுதங்களைக் குவித்தால் தக்க பதிலடி கொடுப்போம் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்ய எல்லையின் அருகில் உள்ள நேட்டோ நாடுகளில் டாங்கிகள் மற்றும் பெரும் அளவில் ஆயுதங்களை குவிக்கவேண்டும் என்று ரஷ்யாவுடன் ஏற்பட்ட பனிப்போர் காலத்தில் இருந்தே அமெரிக்கா முயற்சி செய்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரேன் விவகாரத்துக்கு பின்னர் ரஷ்யாவை ஒட்டியுள்ள ஐரோப்பாவின் கிழக்குப் பகுதிகளில் தங்களது ஆயுதங்களைச் சேமித்து வைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

போலந்து மற்றும் பால்டிக் கடலை ஒட்டியுள்ள நாடுகள் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும் ஏனைய நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ரஷ்ய மற்றும் அமெரிக்கப் படைகளுக்கு நடுவில் தாம் மாட்டி கொள்ள நேரிடும் என்று அந்த நாடுகள் அஞ்சுகின்றன.

ஆனால் பால்டிக் நாடுகளான லித்துவானியா, லத்வியா, எஸ்தோனியா ஆகியவற்றில் தலா 150 இராணுவ வீரர்களையும் போலந்து, பல்கேரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளில் 750 இராணுவ வீரர்கள், ஆயுதங்கள் ஆகியவற்றைச் சேமித்து வைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.



ஆனால் அமெரிக்காவின் அந்தத் திட்டத்துக்கு ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்யாவின் பாதுகாப்புத்துறை தலைமை அதிகாரி யூரி யாகுபொவ் கூறுகையில், ரஷ்யாவைச் சுற்றியுள்ள எல்லைகளில் ஆயுதங்களை குவிக்க அமெரிக்கா முடிவு செய்தால் அது அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளின் மோசமான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக இருக்கும். ரஷ்யாவுக்கு எங்கும் புதிய படைத்தளம் மற்றும் சேமிப்பு கிடங்கு அமைக்கும் எண்ணம் இல்லை. அதே நேரத்தில் எங்களின் மேற்கத்திய எல்லைகளை பலப்படுத்துவதில் எங்களுக்கு எந்த தடையும் இல்லை என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# சீனக் கப்பல் விபத்து மீட்பு பணி நிறைவு



பீஜிங்,ஜூன் 17

சீனாவில் யாங்ட்ஸே ஆற்றில் பயணிகள் கப்பல் கவிழ்ந்து விபத்தில் சிக்கிய பகுதியில் மீட்புப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன என்றும் 12 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர் என்றும் சீனா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் 11 நாள் பயணமாக, ஜியாங்சு மாகாணத்தின் தலைநகரான நான்ஜிங்கில் இருந்து, தென்மேற்கு நகரமான சோங்கிங் நோக்கி கடந்த மாதம் 28 ஆம் திகதி "ஈஸ்டர்ன் ஸ்டார்" என்ற பயணிகள் கப்பல் புறப்பட்டு சென்றது. ஆனால் கடந்த முதலாம் திகதி ஆசியாவின் மிகநீளமானயாங்ட்ஸே ஆற்றில் சென்று கொண்டிருந்த போது, கடுமையான சூறாவளியில் சிக்கி, நிலை தடுமாறி அந்தக் கப்பல் கவிழ்ந்தது. அப்போது கப்பலில் மொத்தம் 456 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். விபத்தைத் தொடர்ந்து உடனடியாக மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணியில், கப்பலின் கப்டன், இயக்குனர் உட்பட 12 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர்.

தொடர்ந்து 3 ஆயிரத்து 400 வீரர்கள், ஆயிரத்து 700 துணை இராணுவத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். 149 கப்பல்கள், 59 இயந்திரங்கள், ஒரு ஹெலிகொப்டர் ஆகியவையும் இந்தப் பணியில் முழு வீச்சில் ஈடுபடுத்தப்பட்டன. கப்பல் கவிழ்ந்து 5 நாள்கள் கடந்த பின்னர் கிரேன்களின் உதவியுடன் கவிழ்ந்த கப்பல் நேராக நிமிர்த்தப்பட்டன. தொடர்ந்து மீட்புப் பணிகள் விரைவாக நடைபெற்றது. மாயமானவர்களை தேடும் பணியும் தீவிரமாக நடைபெற்றது. அந்தவிபத்து குறித்து முழுமையான விசாரணை நடத்துவதற்கு சீன ஜனாதிபதி ஜின்பிங் உத்தரவிட்டார். விசாரணையில் எந்தவொரு ஒளிவுமறைவும் இருக்காது என சீன அரசு உறுதிபடக் கூறியது. இதுதொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. தற்போது, விபத்தில் உயிரிழந்த 444 பேரின் உடல்களையும் மீட்டுவிட்டதாக மீட்புக்குழுவினர் அறிவித்துள்ளனர். அந்தக் கப்பலில் பயணம் செய்த 12 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டதாகவும் அரசு கூறியுள்ளது. சீனாவில் கடந்த 70 வருடங்களில் நடந்த மிக மோசமான கப்பல் விபத்து இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாத்திரைக்கு சென்ற 12 பேர் மாயம்

லண்டன்,ஜூன் 17



பிரிட்டனில் இருந்து புனித யாத்திரையாக சவூதிக்குச் சென்ற 12 பேர் ஐ.எஸ் அமைப்பில் இணைந்திருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனின் பிராட் போர்டா பகுதியைச் சேர்ந்த சகோதரிகளான சுக்ரா தாவுத், ஷொஹ்ரா தாவுத், மற்றும் காதிஜாதாவுத் தங்களது குழந்தைகளுடன் கடந்த மாதம் மெதினாவுக்குப் புனித யாத்திரை சென்றனர்.

இந்த நிலையில் அவர்கள் கடந்த 9ஆம் திகதி விமானம் மூலம் துருக்கியின் இஸ்தான்புல் நகருக்குச் சென்றிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அவர்களது சகோதரன் சிரியாவில் உள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களும் ஐ.எஸ். அமைப்பில் இணைந்திருக்கலாம் என்று அச்சம் எழுந்துள்ளது. மேலும் அவர்கள் 12 பேரையும் கடந்த 9 ஆம் திகதியில் இருந்து தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஒரு வேளை அவர்கள் சிரியாவுக்கு சென்றிருந்தால் பிரிட்டனில் இருந்து சென்று ஐ.எஸ் அமைப்பில் இணைந்து கொண்ட பெரிய குடும்பம் அவர்களுடையதாக தான் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)



# மலேசிய எண்ணெய் கப்பல் மாயம்

கோலாலம்பூர், ஜூன் 17

மலேசியா எண்ணெய்க் கப்பல் ஒன்று 22 கடற்படை ஊழியர்களுடன் மாயமாகியுள்ளது. கப்பலைத் தேடும்பணி தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தெற்கு ஜோகோர் மாகாணத்தில் கடலில் 7.5 மில்லியன் லீற்றர் பெற்றோலுடன் எண்ணெய்க் கப்பல் ஒன்று மாயமாகியுள்ளது. மலாக்காவில் இருந்து குவாந்தான் சென்றபோது கடந்த வியாழக்கிழமை அந்தக் கப்பல் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாயமான கப்பலில் 22 கடற்படை ஊழியர்கள் இருந்துள்ளனர். அவர்களில் 16 பேர் மலேசியாவைச் சேர்ந்தவர்கள், 5 பேர் இந்தோனேஷியாவையும், மற்றொருவர் மியான்மரையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாயமான கப்பலை 20 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் தொலைவில் கடற்படையினர் தேடிவருகின்றனர். இதற்கிடையே சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியா கடற்பகுதியிலும் தேடுதல் பணி நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தென்னாபிரிக்காவில் இருந்து சூடான் ஜனாதிபதி வெளியேறினார்

ஜோகனஸ்பர்க், ஜூன்17

சர்வதேச நீதிமன்றத்தால் இனப்படுகொலைக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷிர் நீதிமன்றத்தின் உத்தரவை மீறிய வகையில் நேற்று தென்னாப்பிரிக்காவில் இருந்து வெளியேறியுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் கடந்த 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றதாகவும், அந்த நாட்டின் ஜனாதிபதியே போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. அதனைத் தொடர்ந்து அவர் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இது தொடர்பான விசாரணையில் பஷிரை கைது செய்யுமாறு சர்வதேச நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

இதையடுத்து, தென்னாபிரிக்க நாட்டின் தலைநகரான ஜோகன்னர் ஸ்பர்க்கில் நடைபெற்றுவந்த ஆபிரிக்க யூனியன் மாநாட்டில் கலந்து கொள்ளச்சென்ற சூடான் ஜனாதிபதி ஓமர் அல்–பஷிரை கைது செய்யுமாறு அந்த நாட்டின் அரசை சர்வதேச நீதிமன்[illegible]டுக்கொண்டது.

பஷிரை நாட்டை விட்டு வெளியேறாமல் தடுக்குமாறு தங்கள் நாட்டு அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார். அதனால் பஷிர் கைது செய்யப்பட்டு, சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் மாநாடு முடிவடைந்தவுடன் பிரெடோரியா நகருக்கு வெளியே உள்ள இராணுவ விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட விமானத்தில் ஏறி ஓமர் அல் பஷிர் தென்னாபிரிக்காவில் இருந்து நேற்று வெளியேறியுள்ளார்.

[illegible] விட்டு, அவரைத் தப்பிச் செல்ல அனுமதித்த தென்னாபிரிக்க அரசுக்கு மனித உரிமை அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய தென்னாபிரிக்காவுக்கு உலக நாடுகள் எல்லாம் துணை நின்றன. ஆனால்,ஆபிரிக்க மக்களைக்கொன்று குவித்து, சர்வதேச நீதிமன்றத்தால் இனப்படுகொலைக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஒருவரை தப்பிச் செல்ல அனுமதித்ததன் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உள்நாட்டு நீதிமன்றத்தின் உத்தரவை தென்னாபிரிக்கா காற்றில் பறக்கவிட்டு விட்டது என மனித உரிமைகள் ஆணைய இயக்குனர் கென்னத் ரோத் குற்றம் சாட்டியுள்ளார்.(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் கொத்தடிமைகளாக விற்பனையாகும் தமிழர்கள்

கோலாலம்பூர், ஜூன் 17

மியன்மாரில் வசித்து வரும் சிறுபான்மையினத் தமிழர்கள், சித்ரவதைகளை அனுபவித்து வருவதாக மலேசிய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மியன்மாரில் வசித்து வரும் ரொஹிங்யா முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட இனத்தாக்குதலால் அவர்கள் பெரும் துயரத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த துன்புறுத்தல்கள் காரணமாக அவர்கள் நாட்டைவிட்டு, மலேசியா, இந்தோனேஷியா தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு செல்கின்றனர்.

இந்த நிலையில் மியன்மாரில் வசிக்கும் ரொஹிங்யா முஸ்லிம் மக்களை விட தமிழர்கள் பல கொடுமைகளை சந்தித்து வருவதாக அந்த நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மியன்மாரில் உள்ள தமோ மற்றும் தத்தோன் மாவட்டங்களில் வசித்து வரும் இந்து மற்றும் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த தமிழர்கள் விவசாயத் தொழில் செய்து வருகின்றனர். அங்கு இவர்கள் மீது நடத்தப்படும் இனத்தாக்குதலால், அவர்களும் ரொஹிங்யா முஸ்லிம்களோடு சேர்ந்து நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில் மலேசியாவில் வேலை வாங்கித்தருவதாகக் கூறி தமிழர்களை அழைத்துச்செல்லும் இடைத்தரகர்கள், அங்கு கொத்தடிமைகளாக அவர்களை விற்று விடு கின்றனர்.

பாதிக்கப்பட்ட தமிழர்கள், தங்கள் சொத்துக்களை விற்று இடைத்தரகர்களுக்குக் கொடுத்துள்ளதாகவும், இறுதியில் மலேசியாவின் பினாங்கு, கெடா, பெர்லிஸ் மாகாணங்களில் கொத்தடிமைகளாக விற்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது. (ஐ)



## அமெரிக்காவை எச்சரிக்கும் சீனா

பீஜிங், ஜூன் 17

ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் சீறிப்பாயும் ஹைபர்சானிக்கிளைட் என்ற வாகனத்தை சீனா வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.

தென்சீனக் கடற்பகுதியில் உள்ள ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்குச் சொந்தமான தீவுகளையும், கடல் பரப்பையும் சீன இராணுவம் ஆக்கிரமித்து வருகிறது.

இந்தப் பிரச்சினையில் பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு ஆதரவாக அமெரிக்க களமிறங்கியுள்ளது.

அண்மையில் தென்சீனக்கடலில் அமெரிக்க உளவு விமானம் வட்டமிட்டபதற்கு, இது எங்கள் பகுதி நீங்கள் திரும்பி போகலாம் என அமெரிக்காவை, சீனா எச்சரித்தது.

இந்த நிலையில் மீண்டும் அமெரிக்காவை எச்சரிக்கும் விதமாக, அதிநவீன ஹைபர்சானிக் கிளைட் வாகனத்தைச்சீனா வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.

தரைத்தளம், போர்க்கப்பல் அல்லது போர் விமானத்தில் இருந்து பாலிஸ்டிக் ஏவுகணை மூலம் இந்த ஹைபர்சானிக் கிளைட் வாகனம் விண்வெளியில் செலுத்தப்படுகிறது.

அங்கு ஏவுகணையில் இருந்து பிரியும் அந்த வாகனம் ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் சீறிப்பாய்ந்து இலக்கை தாக்கி அழிக்கிறது. அதாவது மணிக்கு 12 ஆயிரத்து 231 கி.மீற்றர் வேகத்தில் பயணிக்கும் அதன்மூலம் அணுகுண்டுகளையும் வீச முடியும்.

ஹைபர்சானிக் கிளைட் வாகனத்தை ரேடரில் கண்டறிய முடியாது என்பதால், இதனைத் தடுக்கவோ, அழிக்கவோ முடியாது எனப் பாது காப்புத்துறை நிபுணர்கள் தெரிவித் துள்ளனர். அமெரிக்காவை அடுத்து சீனாவிடம் மட்டுமே ஹைபர்சானிக் கிளைட் வாகனம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சூடு பிடிக்கும் அமெரிக்க தேர்தல் பரப்புரை



நியூயோர்க், ஜூன்17

அமெரிக்காவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை இப்போதே சூடு பிடித்துள்ளது.

ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதாக நேற்று முன்தினம் ஹிலாரி அறிவித்த நிலையில், நேற்று குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையில் ஈடுபடப் போவதாக ஜெப் புஷ் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். கடந்த சில மாதங்களாகவே ஜெப் புஷ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று கூறப்பட்ட நிலையில், அதற்கான முன்னேற்பாடுகளை தற்போது அவர் முடித்து விட்டதாக கூறப்படுகிறது. குடியரசு கட்சியினர் மத்தியில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனக்கான ஆதரவை பலப்படுத்தியுள்ள அவர், பரப்புரைக்கு தேவையான நிதியையும் திரட்டி விட்டதாக தெரிகிறது. புளோரிடா மாகாணம், மியாமி நகரிலுள்ள மியாமி டேட் கல்லூரியில் திரண்டிருந்த கூட்டத்துக்கு தாமதமாக வந்த ஜெப், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்த அறிவிப்பை அங்கு வெளியிட்டார். ஜனாதிபதித் தேர்தலில் ஜெப் வெற்றி பெற்றால், ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் அமெரிக்க ஜனாதிபதியான சாதனையை படைப்பார். அந்த நாட்டின் 41 ஆவது ஜனாதிபதியான ஜார்ஜ் எச்.டபிள்யூ. புஷ்ஷின் மகனும், 43 ஆவது ஜனாதிபதியான ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தம்பியுமே ஜெப் புஷ் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 100 பேருக்கு தலை துண்டிப்பு சவூதியில் கொடூரம்



ரியாத், ஜூன் 17

சவூதி அரேபியாவில் கடந்த 6 மாதங்களில் 100 பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சவூதி அரேபியாவில் கொலை, கற்பழிப்பு, போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதமேந்திய கொள்ளை ஆகிய குற்றங்களுக்கு இஸ்லாமிய –ரீஅத் சட்டங்களின்படி சாவுத்தண்டனை விதிக்கப்படுகிறது. அந்தவகையில், சவூதிக்குள் போதைப்பொருளைக் கடத்த முயன்ற வழக்கில் சிரியாவைச் சேர்ந்த இஸ்மாயில் அல் தவ்ம் என்பவருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அவருக்கு சவூதியில் உள்ள ஜவுப் நகரில் கடந்த திங்கட்கிழமை தலையை வெட்டி சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் அவருடன் சேர்த்து கடந்த ஆறு மாதங்களுக் குள் சவூதியில் 100 பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 87 பேருக்கு சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்ட நிலையில், இந்த வருடம் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 100 பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை, சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களை கொதிப்படையச் செய்துள்ளது.

எனவே இதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

சவூதி வரலாற்றிலேயே அதிகபட்சமாக கடந்த 1995 ஆம் ஆண்டு 192 பேரின் தலைகளைத் துண்டித்து சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## தென்கொரியாவுடன் பேச வடகொரியா நிபந்தனை விதிப்பு

தென்கொரியாவுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக வட கொரியா அறிவித்துள்ளது.

கொரிய தீபகற்ப போருக்கு பின்னர் வடகொரியாவும், தென் கொரியாவும் பகை நாடுகளா கிவிட்டன. இரண்டு நாடுகளுக்கும் இடையே சிக்கல் நீடித்து வரும் நிலையில், இரு நாடுகளும் அடிக் கடி ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் தென் கொரிய இராணுவம், அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொண்டு வந்தது. அந்தப் பயிற்சிக்கு வட கொரியா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தது.

இந்த நிலையில், அமெரிக்காவுடன் இணைந்து நடத்தி வரும் இராணுவப் பயிற்சியை தென்கொரியா கைவிட்டால் தாம் சமரச பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என வட கொரியா தற்போது அறிவித்துள்ளது.

மேலும், வடகொரிய ஜனாதிபதி மீது சுமத்திவரும் தேவையற்ற குற்றச்சாட்டுகளையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளது.

## இந்தோனேஷியாவில் எரிமலை வெடிப்பு

### 5 ஆயிரம் பேர் வெளியேற்றம்

ஜகார்த்தா, ஜூன் 17

இந்தோனேசியாவில் சுமத்ரா தீவில் சீனாபக் என்ற எரிமலை நேற்று முன்தினம் முதல் வெடிக்கத் தொடங்கியுள்ளது. தற்போது அதில் இருந்து கரும்புகைச் சாம்பலுடன் பாறைகளும் வெளியேறி வருகின்றன.

அது போன்று 28 இடங்களில் இருந்து கரும்புகை மற்றும் சாம்பல் வெளியாகிக் கொண்டிருக்கிறது. எனவே எரிமலை அருகே வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இதுவரை 5 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர். கடந்த 400 வருடங்களாக எந்தவித அச்சுறுத்தலும் இன்றி அமைதியாக அந்த எரிமலை இருந்துள்ளது. ஆனால் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் அந்த எரிமலை வெடிக்க ஆயத்தமானது. அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் தங்கியிருந்த மக்கள் உஷார் படுத்தப்பட்டனர். (ஐ)



## இங்கிலாந்தில் குட்டைப்பாவாடைக்கு தடை

லண்டன், ஜூன் 17

இங்கிலாந்தில் பாடசாலை ஒன்றில் மாணவிகள் குட்டைப்பாவாடை அணி யத் தடை விதிக்கப்பட்டமை அந்த நாட்டில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.


இங்கிலாந்தின் ஹெர்ட்போர்ட்னை கவுண்டியில் உள்ள செயிண்ட் மார்கரெட் பாடசாலை மாணவிகள் குட்டைப்பாவாடை அணியத் தடை விதித்துள்ளது. அந்தப் பாடசாலையின் அதிபர் தொழில்முறை மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட அ...கு முறையை பிரதிபலிக்கும் வகை...ல் மாணவிகள் சோபர் எனப்...ம் கண்ணியமான (கணுக்கால் ...ர மூடிய) உடைகளை அ...ய வேண்டும் என்று தெரிவித்துள்...ர்.

இந் தத் தடைக்கு எதிராக ...கி லாந்தில் பத்திரிகைகளும் ...ள விகளின் பெற்றோர்களும் ...ப் புத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாகம் வழிபட்ட நாயகி"
# நயினை நாகபூஷணி அம்மன்

நயினை நா.க.குமாரசூரியர் J.P



உலகில் உள்ள உயிர்கள் உய்யும் வண்ணம் எம்பெருமானாகிய சிவபெருமான் தமது சக்தியைப் பதித்தருளிய இடங்கள் அறுபத்து நான்கு ஆகும். இவை சக்தி பீடங்கள் எனப்படும். காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் திருநாமங்கள் கொண்ட பேரருள் சக்தியானவள், நயினாதீவு எனும் மணிபல்லவத்தில் புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக் கொண்டு நாகபூஷணி, நாகேஸ்வரி என்னும் திருநாமங்களுடன் எழுந்தருளி அருளாட்சி நடத்தி வருகின்றாள். அகிலாண்ட கோடியெல்லாம் ஈன்ற அன்னையாய் விளங்கும் ஆதிபராசக்தியைப் பற்றி எழுத எனக்குச் சக்தியைத் தந்தவள் அன்னை நாகபூஷணியே.

அலைகடல் நடுவே வீற்றிருந்து அகிலமெல்லாம் அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதி நயினையம்பதியாகும். சப்த தீவுகளின் மத்தியில் வையகமெல்லாம் புகழ்பூத்து நிற்பதும் இப்பதியாகும். மணிமேகலாத் தெய்வம் இப் பதிக்கு வந்து சென்றதனால் "மணிபல்லவம்" என்ற சிறப்புப் பெயர் பெற்றதும் இப்பதியாகும். ஈழத்தி லுள்ள புராதன சக்தி வழிபாட்டுத் தலங்களில் மிகவும் சிறப்பு வாய்ந் தது நயினை ஸ்ரீ நாகபூசணி அம் மன் ஆலயமாகும். புண்ணிய ஸ்தலமாக விளங்குகின்ற நாகபூஷணி அம்மன் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற ஓர் அற்புதத் திருத்தலமாகும்.



தன்னை நாடிவருகின்ற பக்த கோடிகளுக்கு "அஞ்சேல்" என்று அபய கரம் காட்டி நிற்பவள் நாகபூஷணித்தாய். அடியவர்களின் கண்ணீரைக் காணிக்கையாக ஏற்றுக் கருணைபாலிக்கும் தெய்வம் அன்னை நாகபூஷணி. பொன்னையும் புகழையும். போகத்தையும் அள்ளி அள்ளி சொரிகின்றாள். இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத அமைதியும், சாந்தமும் நிறைந்த புண்ணிய பூமியாகிய நயினையில் அம்பிகை எழுந்தருளி அகிலமெல்லாம் உள்ள ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு இருக்கிறாள்.

"ஓம் சக்தி" யென கடல் அலைகள் துதிபாட, உதயசூரியனின் வெண் பொற் கதிர்கள் கோபுரத்தின் மீது படர்ந்து பளிச் என ஒளி வீச, நயினையில் அருளாட்சி செய்து வருகின்றாள் அன்னை பராசக்தி. அருட்கடலை நாடிவருகின்ற பல்லாயிரக் கணக்கான அடியார்களை அன்னையின் அருட்கோபுரம் வரவேற்கின்றது. அம்பிகை அடியார்களை அமைதிப்படுத்தி ஆதரவளிக்கின்றாள். அடியார்கள் அன்னையின் ஆலயத்தைக் கண்டவுடன் அவர்களது மனதிலுள்ள கவலைகள் எல்லாம் பறந்தோடி விடுகின்றன. நயினாதீவில் சக்தி வழிபாட்டுடன் நாகவழிபாடும் இணைந்தே உள்ளது. முன்னொரு காலத்தில் ஒரு சர்ப்பம் நெடுநாள்களாக, வசித்து தவம் செய்து அம்பிகையின் அருளால் சாபநிவர்த்தி பெற்றுக் கொண்டது. சாபம் நீங்கப்பெற்ற நாக பாம்பை தமது திருமேனியில் அணிந்து சாபநிவர்த்தியை செய்தமையால்தான் இங்கு எழுந்தருளியிருக்கும் அம்பிகை "நாகபூஷணி" என்ற பெயரைப் பெற்றாள் என்பது வரலாறாகும். அம்பிகை சகல நலன்களையும் தரு வாள்.

*தனம் தரும் கல்விதரும் ஒரு நாளும்*
*தளர்வு அறியா*
*மனம் தரும் தெய்வ வடிவும் தரும்*
*நெஞ்சில் வஞ்சம் இல்லா*
*இனம் தரும், நல்லன எல்லாம் தரும்*
*அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும், பூங்குழலாள் அபிராமி*
*கடைக் கண்களே!*

நாகசாந்தி, நாகப் பிரதிஷ்டை செய்வதன் மூலம் நாகதோஷம் நீங்குகின்றது என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் காணப் படுகிறது. அடியார்கள் பலர் தங்கள் நேர்த்தியாக நாகசாந்தி செய்வதற்கு நயினாதீவுக்கு வருகின்றார்கள். நாகதோஷத்தை நிவர்த்தி செய்து, பிள்ளைப் பேறடைந்தவர்கள் பலர், பிள்ளைப்பாக்கியம் பெற்றவர்கள் தங்கத்தால் தொட்டிலும், பிள்ளையும் செய்து அம்பாளுக்குக் காணிக்கை வழங்கி நேர்த்திக் கடன்களை நிறைவு செய்கின்றனர். தூய்மையான நாகவழிபாடு இந்த ஆலயத்தில் பண்டைக் காலத்திலிருந்தே நடைபெற்று வந்தது. வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே பழைமையும், தொன்மையும் பெற்ற ஆலயமாக ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் விளங்குகின்றது. பெருமையும் மகிமையும் கொண்டது. நாகபூஷணி அம்மனின் மூல விக்கிரகம் பூர்விகமான பழமை மிகுந்த சிறப்பைக் கொண்டது. ஆன்ம கோடிகளுக்கு அருள் பிரவாகத்தையும், அனுபூதி யையும் அருளவல்ல தனித்துவம் கொண்டது. இந்த மூல விக்கிரகத்தின் அமைப்பும், அற்புதமும் உலகிலே வேறெந்த திருத்தலங்களுக்கும் இல்லை எனலாம். மூலஸ்தானத்தில் அம்பாள் உருப்போல விளங்கு வது பழைய நாகப்பிரதிஷ்டையே, என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்றாகும். இதற்குப் பின் புறத்தில் ஐந்து தலை நாகப்பிரதிஷ்டை காணப் படுகின்றது. இதுவும் மிகவும் பழைமையானது. தூய்மையான நாக வழிபாடு இந்த ஆலயத்தில் மிகவும் பழைமையான காலத்திலிருந்து நடைபெற்று வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

நாகம் ஒன்று நயினாதீவுக்கு வடக்கேயுள்ள புளியந்தீவிலிருந்து நாள் தோறும் பூக்கள் கொண்டுவந்து நயினாதீவிலுள்ள அம்பிகையை வழிபட்டு வந்தது. ஒருநாள் நாகம் பூக்களைக் கொண்டு கடல்மார்க்கமாக வரும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்வதற்கு முனைந்தது. நாகம் பயத்தினால் கடல் நடுவில் இருந்த கல்லொன்றைச் சுற்றிக் கொண்டது. கருடன் மற் றொரு கல்லில் அமர்ந்தவண்ணம் நாகத்தைக் கொல்லச் சந்தர்ப்பம் பார்த்திருந்தது. இதன்போது கடல் வழியாக மரக்கலம் ஒன்றில் பண்டங்களை ஏற்றி வந்த வணிகன் ஒருவன் இந்தக் காட்சியைக் கண்டான். பாம்பின் மீது இரக்கம் கொண்டான். பாம்மைப் கொல்ல வேண்டாம் என்று கருடனை வேண்டினான். அதற்குக் கருடன் [illegible] தையும் கொண்டு வந்து அம்பிகைக்கு கோயில் அமைப்பதாக உறுதியளித்தால் நான் இந்த நாகத்தைக் கொல்லாது சென்று விடுகிறேன்" என்றது. அவனும் அவ்வாறே உறுதியளிக்க கருடனும் நாகத்தைக் கொல்லாது விலகிச் சென்றது.

வணிகனும் தனது நாட்டுக்குச் சென்று நடந்தவற்றைத் தன் மனைவியிடம் சொன்னான். இரவில் நித்திரைக்குச் செல்கையில் கணவன், மனைவி இருவரதும் கண்களைக் கூசவைக்கும் பேரொளி அவர்களது சயன அறையில் தோன்றியது.

அவர்கள் அவ் வொளி எதுவாய் இருக்கலாம் என்று ஆராய்ந்த போது, அது விலை மதிக்க முடியாத நாகரத்தினக் கற்களிலிருந்து வந்த ஒளி என்பதைக் கண்டு கொண்டார்கள். நாகபூஷணியின் நல்லருளை வியந்து நயினைக்கு வந்து அம்மைக்கு அழகியதோர் ஆலயம் அமைத்தார்கள். மேற்குறித்த வரலாற்றுக் கதைக்குச் சான்றாக நயினாதீவின் வடகடலில் இரண்டு கற்கள் இன்றும் காணப்படுகின்றன. அவை பாம்பு சுற்றியகல்", கருடன் இருந் தகல்" என்ற பெயர்கள் கொண்டு இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றன. அடியார்கள் இந்தக் கற்களை வழிபாடு செய்து சரித்திர சான்றுகளை நினைவுபடுத்துகின்றனர்.

அலைபாயும் ஆழ்கடலில் அடியார் கூட்டம் ஆர்ப்பரித்து, கரையேறி அம்பிகையின் கோபுரத்தின் முன் தாயே" என்று உள்ளம் நெக்குருகி நின்று கண்ணீர்மல்கி அம்பிகையை வழிபடும் காட்சி அருட்காட்சியாகும். அகிலாண்ட நாயகியின் திருவிளையாடல்கள் ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல" காலாதிகாலமாக அன்னையாம் நாகபூஷணி நிகழ்த்தி வந்த, வருகிற திருவிளையாடல்களும் ஒன்றல்ல; இரண்டல்ல எண்ணுக் கணக்கற்றவை. அம்பிகையின்பேரருளால்விளைந்து வரு கின்ற நன்னலங் களும், அந்த நன்ன லங்களை அடைந் தோரின் எண்ணிக் கையும் இவ்வளவு எனச் சொல்ல முடி யாது. இவற்றுள் நாக தோஷத்தை நேர்த்திக் கடன் வாயிலான நிவர்த்தி செய்து பிள்ளைப் பாக்கியம் பெற்றோர். நேர்த்திக் கடன் மூலம் நோய்கள், பிணிகளைப் போக்கியோர் பலவித இடர்கள், துன்ப துயரங்கள் எல்லாம் அவளின் அருளாலே சூரியனைக் கண்ட பனிபோல மறைந்திடப் பெற்றோர் எனப் பலரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

ஆண்டுதோறும் உற்சவ காலங்களில் அம்பிகையை வழிபட வருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுது வழங்குகின்ற பெரும்பணியை சிறந்த முறையில் "அமுதசுரபி அன்னதான சபை" செய்து வருகின்றது. அடியார்களுக்கு அருள் சுரந்து கொண்டு நயினையம்பதியில் வீற்றிருக்கும் அம்பிகை அமுதசுரபியில் அன்ன பூரணியாக நின்று அமுது சுரக்கின்றாள். அமுதசுரபியில் அள்ள, அள்ளக் குறையாமல் அமுது பெருகிக் கொண்டே இருக்கின்றது.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டி நிற்கும் அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணியின் இந்த ஆண்டுக்கான உயர்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற் றத்து டன் ஆரம்பமாகின்றது.

பின்னே திரிந்து உன் அடியாரைப்
பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்
டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்
னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மற
வாமல் நின்று ஏத்துவனே!"

## விடிவொன்று தா தாயே!

அலைகடல் நடுவினிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் தாயே!
அடியவர்கள் குறைகள் அனைத்தும் போக்கும் தாயே!
வன்புணர்வுக் கலாசாரம், வாள்வெட்டுக் கலாசாரம் புரியும்
வஞ்சகர்களையும் தாண்டி, உன் வாசலிலே
கொடியேற்றம் காண அலைகடல் தாண்டி வந்தோம் தாயே!
கொடியேற்றி விடிவொன்று தா தாயே!

நயினை விசு.இராசநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான எமில்நகர் வீதிக்கு விடிவுகாலம் பிறக்குமா?

மன்னார் எமில் நகர் 2 ஆம் குறுக்கு வீதி 5 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப் படாமல் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாக உள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள சிறு உள்ளக வீதிகள் கூட சிமெந்து வீதியாக புனரமைப்பு செய்யப் பட்டுள்ளது. பிரதான வீதியான 2 ஆம் குறுக்கு வீதி மட்டும் சிறிய அளவு சிமெந்து வீதியுடன் நிறுத்தப்பட்டு எஞ்சிய பகுதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளது.

இந்த வீதியின் அவலநிலையைக் கண்ட தனிநபரான லோகநாதன் என்பவர் கடந்த வருடம் தோறும். கிறவல் மண்ணைக் கொண்டு தற்காலிகமாக செப் பனிட்டுத் தந்தார். ஆனால் மழை பெய்த போது வீதி மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டது.

மழை காலங்களில் இந்த வீதியில் மழை நீர் ஓர் அடிக்கு மேல் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர் கள், வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் தொழிலுக்குச் செல்வோர் உட்பட அனைவரும் கடுமையான போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வரு கின்றனர். சில வேளைகளில் வீதி யூடாக செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது.

தற்போது பெய்துவரும் காலம் தப் பிய மழையினால் போக்குவரத் துச் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள் மாரிகாலம் ஆரம்பிக்கும் போது இந்த வீதியை முற்றாக பாவிக்க முடியாதநிலை ஏற்படும். நாம் இது தொடர்பாக பலமுறை நகரசபையிடம் முறையிட்டோம். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படாததனால் அரச அதிபரிடமும் மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி அமைச்சி டமும் எழுத்துமூலம் அறிவித் தோம். இதுவரை எந்தவிதமான பதிலோ நடவடிக்கையோ இல்லை. மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைப்பு என்ற வகையில் டெனிஸ்வரன் அவர் கள் இந்த விடயத்தை கவனத்தில் கொள்வது அவசர அவசிய தேவையாக உள்ளது. இந்தப் பகுதி மக்கள் சாரம், சேட்டோ, சைக்கிளோ கேட்டு நிற்கவில்லை. அவர்களின் போக்குவரத்துக்கு பாதிக்கப்பட்டுள்ள வீதியை கிற வல் மண்ணாலாவது புனரமைப்பு செய்து தருமாறு வேண்டி நிற்கின் றனர்.

எனவே இந்த மக்களின் அவல நிலையை அமைச்சு கவனத்தில் கொண்டு வீதியை புனரமைத்து தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**ராஜரட்ணம்**
*எமில் நகர், மன்னார்.*

# குடிதண்ணீரை ஒழுங்காக வழங்கவும்

ஏழாலை மேற்குப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிணற்று நீரில் ஒயில் மாசு காணப்படுவதால், பிரதேச சபையினர் இந்தப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின் றனர். ஆனால் இதில் சில குறைபாடுகள் உள்ளதால் இந்தப்பகுதி மக்கள் தமது குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு வேறு இடங்களை நாடிச் செல்ல வேண்டியுள்ளது.

தற்போதைய வெப்பமான சூழ் நிலையில் குடிதண்ணீரின் தேவை யும் அதிகரித்துக் காணப்படு கின்றது. இதனால் மக்கள் அதி கரித்த குடிதண்ணீர் விநியோ கத்தை எதிர்பார்க்கின்றனர். ஆகவே பிரதேச சபையினர் ஏனைய பிரதேசங்களைப் போன்று ஏழாலை மேற்குப் பகுதிக்கும் ஒழுங்கான குடிதண்ணீர் விநியோகத்தை மேற் கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஏழாலை என்பது நீண்ட பிரதேசத் தையும் அதிகளவு மக்கள் தொகை யையும் கொண்டுள்ளது. இதனால் குடிதண்ணீர் விநியோகத்தை மேற் கொள்வதில் பிரதேச சபையினருக்கு சிரமங்கள் இருக்கலாம். ஆனால் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியது அவர்களின் முக்கிய கடமையாகும்.

**த.பொன்னுத்துரை,**
ஏழாலை மேற்கு.





# ஓய்வு பெற்றவர்களைக் கவனியுங்கள்

கொடிய போர் நடந்த போதும் அதன் பின்னரும் மருத்துவ மனை களில் பணியாற்றி ஓய்வு பெற்று வீட்டிலே தங்கியிருக்கும் வயோதி பர்கள் தங்கள் கிளினிக்குகளுக்குச் செல்லும்போது மருத் துவ மனைகளில் முன் னுரிமை வழங்கப்படா தது ஏன்? யாழ். போதனா வைத்திய சாலையில் இந்த முன் னுரிமை வழங்கும் நடைமுறை பேணப் பட்டு வருகிறது. ஏனைய மருத்துவ மனைகளிலும் இதைக் கடைப் பிடிக்க வேண்டும்.

சாவகச்சேரி ஆதார மருத்துவ மனை சகல விதத்திலும் முன்னேற்ற மடைந்து காணப் படுகின்றது. இந்த விடயத்தையும் அங்கு நடைமுறைப் படுத்தினால் நாம் மகிழ்ச்சியடை வோம்.

**– நேசன்.**

## கேலிச் சித்திரம்




*நன்றி: லங்காதீப*

# புலம்பெயர் தமிழரையும் அரவணைத்தல் அவசியம்

தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்பர்மேஜன் இனியேட்டிவ் அமைப்பின் ஏற்பாட்டில் ஒரு வாரத்துக்கு முன்னர் லண்டனில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பு ஒன்றில் தென்னாபிரிக்காவின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம், இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் முன்னாள் சமாதானத்துக்கான ஆலோசகர் மார்டீன் சுஷேஞர், வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், உலகத் தமிழர் பேரவையின் மூலோபாய பயிற்சிப் பணிப்பாளர் சுரேன் சுரேந்திரன், நோர்வே ஈழத் தமிழர் அவை மற்றும் உலகத் தமிழர் பேரவையின் சிரேஷ்ட உறுப்பினர் டாக்டர் ரமணன், இலங்கை அமைதிப் பேச்சுகளில் அனுசரணையாளராகக் கடமையாற்றிய நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பிரதிநிதி ஒருவர், புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள், தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்பர் மேஜன் இனி யேட்டிவ் அமைப்பின் பிரதிநிதிகள் என்று பெரும் புள்ளிகள் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புக் குறித்த தகவல்கள் ஊடகங்கள் மூலம் வெளியாகியபோது வழமைபோன்று தென்னிலங்கையில் அதற்குப் புலிச்சாயம் பூசப்பட்டது; இனவாதம் பேசப்பட்டது; வடபகுதியிலும் இதுகுறித்து சிலர் கேள்வி எழுப்பினர். மைத்திரி தலைமையிலான இலங்கையின் புதிய அரசு, அரசியல் நெருக்கடிக்குள் சிக்கி, ஸ்திரத்தன்மையை இழந்துவரும் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் லண்டன் சந்திப்புக்கு என்ன அவசரம் வந்தது என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது.

லண்டன் சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இலங்கையில் நம்பிக்கையைக் கட்டமைத்தல், விரைவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல், வடக்கு, கிழக்குத் தமிழர் களின் உடனடித் தேவைகள் குறித்து லண்டனில் ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மக்களின் மீள்குடியேற்றம், விடுவிக்கப்பட்டுள்ள நிலங்களில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்தல், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக நீதி அமைச்சர் ஊடாக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள், தடை விதிக்கப்பட்ட புலம் பெயர் தமிழர் அமைப்புகள் குறித்தும் பேசப்பட்டதாகக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர லண்டனில் இருந்து நாடு திரும்பிய பின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், புலம் பெயர் தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் கொம்பு முளைத்த பிசாசுகளும் அல்லர். இந்த நாட்டின் நற்பெயருக்கு இலக்கணமாகத் திகழும் அவர்களை நாம் புறக்கணிக்க முடி யாது" என்று எவரும் எதிர்பாராத விதத்தில் கருத்து வெளியிட்டி ருந்தார். ஆகவே புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சுமுகமான உறவு ஏற்பட லண்டன் சந்திப்பு வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம் பெயர் தமிழர் அமைப்புகளும் மேலும் நெருங் கிச் செயற்படவும் இந்தச் சந்திப்பு வாய்ப்பு ஏற்படுத்த முடியும்.

மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1373 ஆவது பிரிவைக் காரணம் காட்டி விடுத லைப் புலிகள் இயக்கம் உட்பட 16 தமிழர் அமைப்புகளுக் குத் தடைவிதிக் கப்பட்டது. லண்டன் சந்திப்பு, இத்தடை நீக்கத்துக்கான சூழ் நிலையை உருவாக்கிவைத்துள்ளது.

2009இல் போர் முடிவடைந்த பின்னர் இலங்கை அரசுக்குப் பெரும் சவாலாக இருந்தவை இந்த புலம் பெயர் தமிழர் அமைப்புகள்தான். இவற்றின் கடும் எதிர்ப்புக் காரணமாகவும் வெளிநாடுகளில் இவை கொண்டுள்ள அரசியல் செல்வாக்குக் காரணமாகவும் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் நாடுகளுக்குச் சென்று நிகழ்வுகளில் கலந்துகொள்ள முடியாத நிலைமை மஹிந்தவுக்கு ஏற்பட்டது. ஜெனிவா மனித உரி மைகள் பேரவை இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றுவதில் புலம் பெயர் தமிழர் அமைப்புகளின் பங்களிப்பு பிரதானமானது. இவற்றின் பலத்தை உணர்ந்து ஒரு கட்டத்தில் இந்த அமைப்புகளுடன் பேச்சு நடத்தவும் அவற்றுடன் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் முயற்சி எடுக்கப்பட்டது. போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப் படவேண்டும், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்பதில் புலம் பெயர் தமிழர் அமைப்பு கள் மிகவும் உறுதியாகச் செயற்பட்டன.

லண்டனில் சந்திப்பு இடம்பெறமுன்னர் சிங்கப்பூரில் முதலாவது சந்திப்பு இடம்பெற்றதாகவும் அடுத்த சந்திப்பு கட்டாரில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இத்தகைய சந்திப்புகள் புலம் பெயர் தமிழர் அமைப்புகள் இலங்கைத் தமிழர்கள், இலங்கை அரசு தொடர்பாகக் கொண் டுள்ள நிலைப்பாடு களில் தளர்ச்சியை ஏற்படுத்தி விடக்கூடாது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கந்தறு நிலைக்குத் தள்ளப்படும் ஒவ்வாத நிலை வேண்டாமே..!

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில், நம்பகமான பொறிமுறைகளை உருவாக்கும் போது, அவை வெளிப்படைத்தன்மை கொண்டவையாக அமையவேண்டும்.

அது தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் சபை, இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடல்களில் ஈடுபடும்.

மேற்கண்ட தகவலை,கருத்தை வெளிப்படுத்தி உள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சயிட் அல்ஹுசைன்.

அத்தோடு அவர் தரிக்கவில்லை --

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர், அதாவது, குறித்த மனித உரிமைகள் தொடர்பில், ஐ.நாவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக, இந்த நாட்டு அரசு, பொறுப்புக் கூறலுக்கான தனது கடமையைப் பிசகின்றி நிறைவேற்ற வேண்டும் --

பாதிக்கப்பட்ட அனைவரதும், அவர்களது குடும்பங்களினதும் முழுமையான ஆதரவை உறுதிப்படுத்தும் விதத்திலும் உள்ளக விசாரணையின் செயன்முறை அமைவது அவசியம் -- என்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் வகுத்துப் பகுத்து தமது நிலைப்பாட்டை -- தமது முடிவை -- வெளிப்படுத்தி உள்ளார்.

இதேவேளை --

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து -- அவை தொடர்பில் -- அந்த நாட்டு அரசு, பொறுப்புக் கூறுவது மிக அத்தியாவசியம் -- என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் அழுத்தி, விரித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எடுத்து இயம்பி உள்ளது. அத்தோடு --

- ♦ இலங்கையின் இப்போதைய (புதிய) அரசு, தனது பொறுப்புக்கூறும் கடமையில் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதுடன், அதற்கான நியாயமான கலந்துரையாடல்களுக்கும் வழிவகுக்க வேண்டும்.
- ♦ ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு வழங்கிய உறுதி மொழியைக் காப்பாற்றும் பொருட்டு, பொறுப்புக் கூறல் தொடர்பான நம்பிக்கையைக் கட்டி எழுப்ப வேண்டும்.

அந்தப் பொறிமுறையில் அனைத்துலக நீதிபதிகளையும் சேர்த்துக் கொள்வது இன்றி அமையாதது என்றும் அது அழுத்திச் சுட்டிக்காட்டி உள்ளது.

எவர் எதனைக் கூறினாலும், இலங்கை அரசு அதனை உள்வாங்கிக் கொண்டு செயற்படுமா என்பது பென்னம் பெரிய வினாவாகவே வளைந்து, நெளிந்து, உயர்ந்து நிற்கிறது.

உள்ளக விசாரணை உரிய பயன்தராது என்பதை அனைத்துலக நாடுகளும், ஐ.நா. மனித உரிமைகள் சபையும் உய்த்து உணர வேண்டும். நாம் கடந்த காலங்களில் கற்றுக் கொண்ட பாடங்கள் அவற்றுக்குச் சான்று -- என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்தைப் புறம் தள்ள இயலாது.

போர்க் குற்றங்கள் குறித்து இந்த நாட்டு அரசு பொறுப்புக் கூறினால் மட்டும் போதாது. அனைத்துலக நாடுகளின் முழுமையான அனுசரணையுடன் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் குறித்த தீர்வை முன்வைக்க கொழும்பு அரசுக்கு அனைத்துலக நாடுகளும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையமும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கை அரசுகள், மாறி மாறித் தமிழ் மக்களுக்கு இழைத்த பென்னம் பெரும் கொடுமைகளுக்கு --

மனித நாகரிகத்தையும், மனிதாபிமானத்தையும் கடாசித் தள்ளிப் போர் என்ற போர்வையில் (பெயரில்), அரக்கத்தனமான ஆட்சிகளை கட்டவிழ்த்து, எங்கள் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்து, மனிதாபிமானம் என்றால் என்ன விலை என்ற நிலை நின்ற கொழும்பு அரசுகளின் கழிவிரக்கச் செயற்பாடுகளால் எங்கள் மக்களுக்கு எந்த வகை விமோசனமும் கிடைக்காதே! உள்ளக விசாரணைபோன்ற பம்மாத்துக்களில் எடுபட்டு, கந்தறு நிலைக்குத் தள்ளப்படும் ஒவ்வாத நிலை வேண்டாமே.....

# சபை அமர்வை ஒத்திப்போட ஜனாதிபதி சிறிசேன யோசனை?

## இரட்டை வாக்குச் சீட்டு – ஹக்கீம் வலியுறுத்து

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து
● ரெங்கன்

கடந்த வாரம் திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கடும் வாக்குவாதம் ஒன்றில் ஈடுபட்டிருந்தார். இந்த வாக்குவாதத்தின்போது அமைச்சர்கள் ராஜித சேனாரட்ண, எஸ்.பி. திஸாநாயக்க, சரத் அமுனுகம முதலியவர்களுடன் அவர் மோத வேண்டியிருந்தது.

வாக்காளர்களுக்கு இரண்டு வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். ஒன்று கட்சிக்கு மற்றது வேட்பாளருக்கு என்று ஹக்கீம் வாதிட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வெற்றிபெறச் செய்ததில் தமது கட்சிக்கும் பெரும் பங்குண்டு என்று வாதிட்ட அவர் சிறுபான்மையோருக்குப் பாதகமான எந்த ஒரு சட்ட முன் வரைவையும் தாங்கள் ஆதரிக்கப் போவதில்லை என்று கூறினார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் கருத்தை பதில் வெளியுறவு அமைச்சர் அஜித் பெரேரா ஆதரித்தார். இது ஜனநாயக அடிப்படையிலானது. எனவே அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்றார் அவர். இந்தச் சமயத்தில் ஜனாதிபதி சிறிசேன அவசரமாக ஒரு கருத்தை முன்வைக்கையில் முன்னைய அரசைப் போன்று தாம் சிறுபான்மை சமூகத்தினரை பாதிக்கும் விதத்தில் எதனையும் செய்யமாட்டார் என்று குறிப்பிட்டதுடன் அவர்கள் தம்மை நம்ப வேண்டும் என்றும் சொன்னார். ஹக்கீமின் கருத்தை அமைச்சர்கள் ரிசாத் பதியுதீன் மற்றும் பழனி திகாம்பரம் என்போர் ஆதரித்தனர்.

### இரண்டு வாக்குச் சீட்டுகள்

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோபமடைந்தவராக ஐ.தே.கவும் முஸ்லிம் காங்கிரஸும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறை வேறாமல் செய்ய சதிபுரிகிறார்கள் என்று கண்டித்தார்.

அவர் இதுபற்றி பத்திரிகையாளர்களிடம் கூறும்போது விக்கிரமசிங்கவும் ஹக்கீமும் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு முரண்பாடான நிலைப்பாடுகளை எடுக்கிறார்கள் என்று கூறினார்.

நாடாளுமன்றத் தேர்தல் முறையைத் திருத்தி அமைப்பது தொடர்பான அரசமைப்புக்குப்புறம்பான 20 ஆவது திருத்த முன்வரைவு என்ற தலைப்பிலான ஜனாதிபதி சிறிசேனவின் அறிக்கை மீது விவாதங்கள் சுழற்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. சிறிசேனவின் அறிக்கையில் நாடாளுமன்றத்துக்கு 237 உறுப்பி னர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதாக தெரிவித்திருந்தார். அது ஏற்றுக்கொள்ளப் பட்டது. இருந்த போதிலும் ஐ.தே.க. தனது நிலைப்பாட்டில் முடிவில்லாதிருப்பது வெளிப்பட்டது. நாடாளுமன் றத்தில் திருத்தத்தை ஆதரிக்க மாட்டாது என்றும் தெரியவந்தது.

அமைச்சரவைக் கூட்டம் முடிவுற்றதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஹக்கீமையும் அழைத்துக் கொண்டு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் அறையில் அவரை சந்தித்து ஒரு குறுகிய நேரக் கலந்துரையாடலை நடத்தினார். அப்போது அமைச்சரவையில் தாம் தாக்கல் செய்திருந்த அறிக்கையுடன் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுடன் நாடாளுமன்றத்தில் ஒரு வெள்ளை அறிக்கையாக சேர்த்து வெளியிட வேண்டும் என்று ஹக்கீம் கேட்டுக் கொண்டார். ஆசனங்களை 237 ஆக அதிகரிப்பதை சிறுபான்மைக் கட்சிகளும், ஜே.வி.பி. மற்றும் சிறிய கட்சிகளும் எதிர்ப்பதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள பெரும் அளவிலான ஏனையவர்கள் மத்தியிலும் இவ்வாறான எதிர்ப்பு நிலவுகின்றது. இதனால் திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையு டன் நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியம் இருக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஹக்கீம் அமைச்சரவையில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் இரண்டு வாக்குச்சீட்டுக்கள் வழங்கும் முறையை வலியுறுத்தியுள்ளார் என்று தெரிகின்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய விடயமும் கிளப்பப்பட்டது. பிரதமர் ஜனாதிபதி பக்கம் திரும்பி இது உங்கள் மீது காட்டப்படும் கீழ்த்தரமான ஒரு பிரதிபலிப்பு என்று குறிப்பிட்டார். உங்கள் பிரதமர் மீது அவமானம் ஏற்படுத்தும் முயற்சி. இது தார்மீக முறையிலும் ஒழுக்க முறையிலும் தவறான செயல். அரசு மீதும் ஜனாதி பதியின் மீதும் பிரதமர் மீதுமான ஒரு தீர்மானம் இது என்று சுட்டிக்காட்டினார். இந்தத் தீர்மானத்தை தடுத்து நிறுத்தவேண்டும் என்று அமைச்சர் கபீர் ஹசனும் வாதிட்டார். சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு ஐ.தே.கட்சியும் பெரும் பாடுபட்டுள்ளது என்று அவர் நினைவூட்டினார். அவரைக் கடுமையாக எதிர்த்து நின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் இப்போது அவருக்கு என்ன செய்யவேண்டும் என்ற முறையில் பணிப்புரைகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் அது ஏற்கனவே பட்டியல் இடப்பட்டு விட்டது என் றார். வேறு சில அமைச்சர்களும் குறிப்புகள் முன்வைக்க முன்வந்த போதிலும் அவர்களைத் தடுத்து தாம் ஏதோ முக்கியமாகக் கூறப்போவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### நாடாளுமன்ற அமர்வு பின்போடப் படுமா?

அந்தத் தீர்மானம் தாக்கல் செய்யப்படுவதை அனுமதிக்கப் போவதில்லையென்று முன்னர் கூறியிருந்த ஜனாதிபதி இப்பொழுது ஜனாதிபதித் தேர்தலின்போது ஐ.தே.கட்சி மேற்கொண்டிருந்த பங்களிப்புகள் குறித்து தாம் நன்றாக உணர்ந் திருப்பதாகக் குறிப்பிட்டார். ஐ.தே.கவினரை தாம் ஒதுபோதும் கைவிடமாட்டார் என்றும் சொன்னார். இதில் அரசமைப்பில் காணப்படும் சில பிரிவுகளும் அடங்கும் என்றார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து நாடாளுமன்ற அமர்வை ஒத்திப் போடுவதற்கு அவர் யோசிக்கி றார் போல் தோன்றுகிறது என ஐ.தே.க. உயர்வட்டாரங்களில் உடனடியாக கருத்துக்கள் அடிபடலாயின. பிரதமருக்கு எதிரான தீர்மானத்தைத் தடுத்து நிறுத்த முடியாது போகுமாகில் அவர் இந்த நடவடிக்கையில் இறங்கலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் தனது நிலைப்பாட்டை மேலும் இறுங்கமாக்கிக் கொள்ளத் தேவைப்படும் கால அவகாசத்தை நாடாளுமன்ற அமர்வை ஒத்திப்போடுவதன் மூலம் பெற்றுக்கொள்ள அவர் விரும்புவதாக அவர்கள் கருதுகிறார்கள்.

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 112 பேர் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்று முன்னர் கூறப்பட்டிருந்ததற்கு முரணாக இப்போது 105 நாடாளுமன்ற உறுப்பினர்களே கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. அவர்களிலும் ஆறு பேர் ஜனாதிபதியின் பக்கம் சாய்ந்து விட்டார்கள். அதனால் அந்த எண்ணிக்கை 99 ஆகக் குறைந்துவிட்டது. அவர்களில் நான்கு பேர் பிரதி அமைச்சர்களாக பதவி ஏற்றுள்ளனர். முன்னாள் பிரதமர்கள் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் டி.எம்.ஜயரட்ண ஆகியவர்கள் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளர்கள்.

ஜனாதிபதியின் தரப்புக்கு மேலும் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வதற்கான திரைமறைவு முயற்சிகள் கடந்த வாரம் முழுக்கவும் இடம்பெற்று வந்திருப்பது தெரியவந்துள்ளது. தீர்மானத்தில் கையெழுத் திட்டிருப்பவர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த ஆகியவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். முன்னாள் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தீர்மானத்தில் கையயழுத்திட மறுத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

### ஒத்துழையாமை பற்றி எதிர்த்தரப்பு ஆலோசனை

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக கடந்த வாரம் வியாழக்கிழமை நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வாக்குவாதம் இடம்பெற்றது. சபையில் பிரேரணை மீதான விவாதம் நடத்துவதற்கான திகதியொன்றை நிர்ணயிப்பதற்கு இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஆனால் முடிவு எதுவும் எடுக்காமலே கூட்டம் முடிவுற்றது. வரும் 16ஆம் திகதி கூட்டம் மீண்டும் நடைபெறும். இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்துள்ள பிரதானமானவர்களில் மகாஜன எக்சாத் பெரமுனையின் தலைவர் தினேஷ் குணவர்தனவும் ஒருவர். அவர் பத்திரிகையாளர்களிடம் கூறுகையில் அவர்கள் எமக்கு ஒரு திகதியை வழங்க மறுப்பார்களானால் நாங்கள் ஒத்துழையாமை என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டியதாய் இருக்கும். எம்மை எதிர்கொள்ள அவர்கள் ஏன் தயங்குகிறார்கள்? என்று கேட்டார். அடுத்து வரும் வாரங்களில் ஏற்படும் அரசியல் நிலைமைகளைப் பொறுத்துத்தான் விடயங்கள் எத்திசை நோக்கி நகர்கின்றன என்பதைத் தீர்மானிக்க முடியும். ஜனாதிபதிக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் இப்பொழுது உறவுகள் சற்று தளர்ந்த நிலையை எட்டியுள்ளன. தேர்தல் சீர்திருத்தங்களை அது எதிர்க்கும் நிலைக்கு வந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொறுத்தவரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெரும்பாலும் இழந்துவிட்ட நிலையில் மீண்டும் அவர்களின் ஆதரவைத் தன்பக்கம் ஈர்க்க வேண்டிய நிலைமையில் உள்ளார். எனவே அந்த ஆதரவுடன் தாம் பாதுகாப்பாய் இருக்கிறார் என்ற நிலைமை உருவாகும்வரை நாடாளுமன்றத்தை அவசரப்பட்டுக் கலைப்பதற்கு முயலமாட்டார். இதுதான் இன்றைய நாட்டின் அரசியல் நிலைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் கையாண்ட தந்திரத்தை மைத்திரிபால கையாளத் தயங்குவதேன்?


சிங்கள மூலம் :– உப்புல் யோசெப் பெர்னாண்டோ (மவ்பிம)
தமிழில்:– வீ.எஸ்.ரி.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை விமர்சித்து, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால குறித்து வெளிவந்த நூலொன்றைதரமற்ற நூலென எஸ்.பி.திஸநாயக்க குறிப்பிட்டிருந்தார். மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில், சந்திரிகாவை விமர்சித்து மஹிந்த குறித்து வெளிவந்த நூல் குறித்தும் எஸ்.பி. இதேபோன்று விமர்சித்தி ருந்தால், அவர் இன்று சிறையில் காலம் கழிக்க நேர்ந்திருக்கும். அவர் எங்கிருக்கிறார் என்று கூட அறிய இயலாது போயிருக்கும் என அண்மையில் சுதந்திரக் கட்சியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்திருந்தார்.

ஆனாலும் மைத்திரிபாலவோ இது குறித்து எந்தவொரு கருத்தையும் வெளியிட்டாரில்லை. அதுதான் அவரது ஜனநாயக வாதத்தை மதிக்கும் பண்பு.இதனைவாய்ப்பாகக்கொண்டே இன்று மஹிந்த சுதந்திரக்கட்சியின் வயிற்றில் குட்டிக்கரணம் போட்டு மைத்திரியின் அந்தப் பண்பை மலினப்படுத்தி வருகின்றார். தமது இந்த ஜனநாயக வாதப்போக்கின் மூலம் சுதந்திரக்கட்சியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள மைத்திரிபாலவால் இயலாது. ரணிலிடமிருந்துதான் அது குறித்துத் தெரிந்து கொள்ள இயலும்.

**கட்சியின் தலைமைத்துவத்தை விட்டுக் கொடுக்க மறுத்த ரணில்**

ரணிலின் தொடர்தேர்தல் தோல்விகள் வரிசையில் 2010 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் தோல்வியுடன் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களுக்கு ரணிலின் தலைமைத்துவம் வேண்டாத ஒன்றாகி விட்டிருந்தது. உள்ளூராட்சி மன்றங்களின் மட்டங்களி



லிருந்து கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரப்புக்கு அது குறித்த அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. மாற்றுத் தலைமைக்குத் தகுதியானவர் எவர் என்பது குறித்த கேள்வி எழுந்தபோது, உள்ளூராட்சி மன்றங்களின் தரப்பிலிருந்து சஜித் பிரேமதாஸவின் பெயர் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் ஐதேகட்சியின் இன்றைய பொதுச் செயலாளரான கபீர் ஹாசிமின் தலைமையில் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைவிடுமாறு ரணிலுக்கு அழுத்தம் கொடுத்தனர். இதன் காரணமாக ஐ.தே.கட்சிக்குள் ரணில் மற்றும் சஜித் தரப்புக்கள் என இரு தரப்புக்கள் தலை தூக்கின. ரணில் ஆரம் பத்தில் கரு ஜயசூரியாவை சஜித்துக்கு எதிராகப் பயன்படுத்திக் கொண்ட போதிலும், பின்னர் கரு ஜயசூரிய சஜித்துக்கு ஆதரவான தரப்புடன் இணைந்து கொண்டார்.

ஐ.தே.கட்சியின் இந்த இரு தரப்புக்களுடனும் நெருங்கிச் செயற்படாதிருந்து வந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், கட்சியின் தலைமைத்துவத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் அவ்விருவரும் தம்மிடையே பகிர்ந்து கொள்ளுமாறு மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக சஜித்தை கட்சியின் பிரதித்தலைவராக்கினார் ரணில். அதையடுத்து கருஜயசூரியவுக்கு கட்சியின் தலைமைத்துவப் பதவியொன்றை வழங்கி எதிர்க்கட்சித் தலைவராக்குவதென சஜித்தும் கருவும் இணங்கிக் கொண்டனர். இதனால் 2012 ஆம் ஆண்டில் கட்சித் தலைமைத்துவம் தொடர்பாக நிறைவேற்றுச் சபையில் தேர்தல் இடம்பெற்றது. தம்மால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களது ஆதரவினால் ரணில் மீண்டும் கட்சித் தலைமைப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் சஜித் தரப்பினர் கருஜெயசூரிய மற்றும் சஜித்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுமாறு ரணிலை வலியுறுத்தியின் நிறைவேற்றுச் சபையில் சஜித் தரப்பினரால் எதுவுமே செய்ய இயலாது போயிற்று . ஒரு சமயம் ஐ.தேகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ரணிலை கட்சித் தலை மைத்துவத்தினின்றும் நீக்க வேண்டும் என்ற யோசனை நிறைவேற்றப் பட்ட போதிலும், ரணிலோ அது கட்சியின் நிறைவேற்றுச் சபையில் விவாதிக்கப் பட வேண்டுமெனவற்புறுத்தினார். அவ்விதம் அதனை விவாதத்துக்கு எடுத்த கட்சியின் நிறைவேற்றுச் சபை அதனை நிராகரித்தது. தம்மால் நியமிக்கப் பட்ட உறுப்பினர்கள் அடங்கிய நிறைவேற்றுச் சபையால் அந்த யோசனை நிராகரிக்கப்பட்டதன் பின்னர் ரணில், சஜித்துக்குச் சிக்கல்களை ஏற்படுத்



## சுதந்திரக்கட்சி பிளவுபடுவதை மைத்திரி விரும்பப் போவதில்லை

தியபோதிலும்ரணில்அதற்கு உடன்படவில்லை. கட்சியின் தலைமைத்துவம் குறித்த இழுபறியில் தாம் இலாபம் ஈட்டிக்கொள்ள முயன்ற மஹிந்த வெளிப்படையாக ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து வந்தார். ஆனால் ஐ.தே.கட்சியை நாசப்படுத்தும் நோக்கிலேயே மஹிந்த தமக்கு ஆதரவளிக்க முயல்கிறார் என்பதை ரணில் உணர்ந்திருந்தும், தலைமைத்துவத்தை விட்டுக் கொடுக்கவோ பங்கு போட்டுக் கொள்ளவோ அவர் தயாராக இருக்கவில்லை. அதே வேளை சஜித்துடனோ அல்லது அவரது ஆதரவாளர்களுடனோ முரண்பட்டுக் கொள்ளவும் ரணில் முன்வரவில்லை.

**தீட்டம் தீட்டிச் செயற்படுத்துபவர் ரணில்**

கட்சி பிளவுபட்டா லும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டுடன் ரணில் முதலில் கரு ஜயசூரியாவை நிறைவேற்றுச் சபையிலிருந்து வெளியேற்றினார். கட்சித் தலை வரைத் தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பில் கட்சியின் பிரதித் தலைவராகச் செயற்பட சஜித் துக்கு இடமளித்து விட்டு, அவரது அதி காரங்களை மட்டுப்படுத்தி சஜித்தின் பிர பல்யத்தை மழுங் கடிக்க ரணில் திட்டமிட்டுச் செயற்பட்டார்.

கடைசியில் சஜித் தரப்பினர், கட்சியின் மத்தியில் பிரபல்யம் இழந்து நலிவுற நேர்ந்தது. உள்ளூ ராட்சி மன்ற மட்ட, மாகாண சபை மட்ட, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் ரணிலின் தலைமைத்துவத்துக்கு எதிரான செயற்பாடுகளில் சஜித் தரப்பினரால் வெற்றிபெற முடிந்த போதிலும், ரணிலால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய கட்சித் தினார். கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து சஜித்தை ரணில் விலக்கிய போதிலும், சஜித் ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேற முன்வரவில்லை. அதற்கு முன்னர் கரு ஜயசூரியவையும் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலக்கிய போதிலும் அவரும்கூட கட்சியை விட்டு வெளியேறவில்லை. மாறாக கடைசியில் கரு ஜயசூரிய கட்சியில் ரணிலின் தலைமையை ஏற்றுச்செயற்பட முன் வந்தார் ரணிலுடன் கருத்து முரண்பாடு கொண்டிருந்த ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துகோரள, ரோசி சேனநாயக மற்றும் திஸ்ஸ அத்தநாயக போன்றோருக்கு கட்சியின் முக்கிய பதவிகளை வழங்க ரணில் மறுத்த போதிலும் அவர்களில் எவரும் கட்சியை விட்டு வெளியேற முயன்றதில்லை. சஜித் கட்சியின் பிரதித் தலைவர் பதவியை மீண்டும் ஏற்று ரணிலின் வெற்றிக்காக உழைக்க முன்னின்றதும், கபீர் காசிம் கட்சியின் செயலாளர் பதவியை ஏற்றுச் செயற்பட்டதும் மேற் குறிப்பிட்ட தரப்பினர் ரணிலுக்கு ஆதரவளித்துச் செயற்பட்டதும், ரணில் மீதான அச்சம் காரண மாகவல்ல என்பதே உண்மை. மாறாக கட்சியிலிருந்து தாம் வெளியேறினால் தாம் அரசியல் அநாதைகள் ஆகிவிட நேரும் என்ற அச்சத்தின் காரணமாகவே அவர்கள் கட்சியில் தொடர்ந்தும் செயற்பட முனைந்தனர். இதனையே ஆயுதமாகப் பயன்படுத்தி ரணில் அவர்களைத் தொடர்ந்தும் கட்சியில் தக்க வைத்துக் கொள்வதில் வெற்றி கண்டார்.

அப்படியானால் தற்போது மஹிந்தவுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுவரும் சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்சன யாப்பா, போன்றோருக்கு எதிராக இந்த ஆயுதத்தைப் பயன்படுத்த மைத்திரிபால முய லாததேன் என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

உண்மையில் இன்று மைத்திரிபாலவுக்கு ரணிலாலோ அல்லது ஐ.தே.கட்சியாலோ எத்தகைய அச்சுறுத்தலும் கிடையாது. அது உண்மையில் மஹிந்தவால் ரணிலுக்கும், ரணிலால் மஹிந்தவுக்கும் எதுவித அச்சுறுத்தலும் இல்லாதிருந்ததைப் போன்ற ஒன்றாகும். உண்மையில் மஹிந்த அன்று ரணிலுடன் நெருக்கமாக இருந்துகொண்டு, அன்றைய மைத்திரிபால, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த தரப்பினரின் தமக்கெதிரான முயற்சிகளைத் தடுத்து வந்தார். தமக்கெதிராகக் குரலெழுப்பிய தரப்பினரை அதன் மூலம் அவரால் கட்டுப் படுத்த முடிந்தது. இன்று மைத்திரிபாலவும் அதே பாணியைப் பின்பற்றினால் அவரால் தமக்கெதிரான தரப்பினரை இலேசாகக் கட்டுப் படுத்திவிட இயலும். மஹிந்தவுக்கு ஆதரவாகச் செயற்படும் அந்தத் தரப்பினரைச் சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேற்றினால் அவர்கள் கட்சியை விட்டு வெளியேறி ரணிலுடன் ஒட்டிக் கொள்வர் எனக் கருத இயலாது. இவர்கள் அனைவருமே சுதந்திரக்கட்சியை விட்டு வெளியேற அஞ்சுகின்றனர்.

**மைத்திரிபால மென்மைப் போக்குடையவர்**

ஆனால் மைத்திரிபாலவோ, ரணிலைப் போன்றல்லாது இந்த எதிரிகளைக் கட்டுப் படுத்த 'பயம்' என்ற அந்த ஆயுதத்தைப் பயன்படுத்த அஞ்சுகிறார் என்பதே உண்மை. ஏனெனில் தாம் கடுமையான தீர்மானம் எடுக்க முயன்றால் சுதந்திரக்கட்சி உடைந்து போய்விடக் கூடுமென மைத்திரிபால எண்ணுகிறார். கட்சி நாசமடைந்து விடுமென அவர் எண்ணுகிறார். ஆனால் அவரது எதிரிகளோ அவரது இந்தத் தயக்கத்தை, அச்சத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர்.

சுதந்திரக்கட்சி என்னவானாலும் பரவாயில்லை. இவர்களுக்கு ஒரு பாடம் கற்பித்தேயாவேன் என மைத்திரிபால எண்ணிச் செயற்படுவாரேயானால் இன்று சிங்கம் போன்று கர்ஜிக்கும் அவரது எதிரிகள் பூனை போன்ற அடங்கிவிடுவர். ஆனால் மைத்திரிபாலவுக்கு அப்படிச் செய்ய அவரது மனம் இடம்கொடாது.

ரணில் மட்டுமல்லாது, மஹிந்தவும்கூட தனக்கு எதிராகத் தன்னுடன் இருந்து கொண்டே குழிபறிக்க முயன்றவர்களை அச்சமின்றி அரசதரப்பிலிருந்து அகற்றி பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்ததும் கொட்டம் போட்டவர்களெல்லாம் தாமாகவே அடங்கிப் போயினர்.

மைத்திரியின் மனது மென்மையானதென்பதால் அவர் அவ்விதம் நடந்துகொள்ளப் போவதில்லை. நல்ல மனது கொண்ட அவரைக் கெட்டவர் ஆக்காதிருக்க சுதந்திரக் கட்சிக் காரர்கள் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | 6 | | |
| | 8 | 3 | | | 4 | | | 9 |
| | | | | 1 | 7 | 8 | | |
| | 4 | | | | 2 | | | |
| 7 | | | | 4 | | | | 1 |
| | | | 6 | | | | 8 | |
| | | 6 | 4 | 2 | | | | |
| 4 | | | 9 | | | 1 | 5 | |
| | | 7 | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 3 | 6 | 8 |
| 4 | 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 5 | 9 |
| 9 | 7 | 8 | 6 | 3 | 5 | 2 | 4 | 1 |
| 6 | 8 | 4 | 9 | 5 | 7 | 1 | 3 | 2 |
| 3 | 5 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 | 6 |
| 7 | 2 | 1 | 3 | 6 | 4 | 9 | 8 | 5 |
| 1 | 6 | 7 | 5 | 2 | 3 | 8 | 9 | 4 |
| 5 | 4 | 3 | 1 | 9 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 9 | 2 | 7 | 4 | 6 | 5 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**ஆனி-03**
**வியாழக்கிழமை**
**18.06.2015**

**திதி:** துதியை மு.இ. 08.03 வரை
**நட்சத்திரம்:** திருவாதிரை மு.ப.07.08 வரை
**சுபநேரம்:** 7.23-8.53 வரை
**இராகுகாலம்:** 01.23-2.53 வரை

# அடிக்கடி தலைவலியா?

(நேற்றைய தொடர்ச்சி)

**தொலைக்காட்சித் திரை:**
கம்பியூட்டரைப் போன்று தான், தொடர்ச்சியாக தொலைக்காட்சியைப் பார்க்கும் போதும் கண்களுக்கு பெரும் எரிச்சல் ஏற்படுகிறது. மேலும் சிலர் தொலைக்காட்சிப் பெட்டியின் உள்ளே போய் பார்ப்பது போல், மிகவும் அருகில் உட்கார்ந்து பார்ப்பர். இதனால் கழுத்து வலி ஏற்படும். ஆகவே அவ்வாறு உட்காராமல், சற்று தொலைவில் உட்கார்ந்து பார்க்க வேண்டும். மேலும் தொலைக்காட்சிப் பெட்டியின் ஒளி மிகவும் பிரகாசமாக இருந்தால், அவற்றைக் கண்களுக்கு இதத்தை தரும் வகையில் சரியாக வைத்து பார்க்க வேண்டும்.

ஏனெனில் கண்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால், அவை தலையையும் நிச்சயம் பாதிக்கும்.

**படுக்கையில் படித்தல்:**
படுக்கும் போது புத்தகத்தைப் படிப்பது என்பது மிகவும் கெட்ட பழக்கம். ஏனெனில் இப்படிப் படித்தால், கண்கள் மிகவும் கஷ்டப்பட்டு எழுத்துக்களை பார்க் கும். ஆகவே எப்போது படிக்கும் போதும், உட்கார்ந்து படிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், வெளிச்சம் குறைவாக உள்ள இடத்தில் உட்கார்ந்து படிப்பதை தவிர்க்க வேண்டும்.

**அதிக குளிர்ச்சி:**
அனைவருக்கும் அளவுக்கு அதிகமாக குளிர்ச்சி உள்ள பானங்களை குடித்தாலோ அல்லது ஐஸ்கட் டிகளை சாப்பிட்டாலோ, தலை சற்று வலிப்பது போல் இருக்கும். ஏனெனில் அவை மூளையை உறைய வைத்து விடுகின்றன. ஆகவே அத்தகைய பொருள்களை சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். அதற்காக குளிர்ச்சியானவையைச் சாப்பிடக் கூடாது என்பதில்லை. ஓரளவு குளிர்ச்சி உள்ள பொருளை, அளவாக சாப்பிட்டால் நல்லது

**சரியான தூக்கம்:**
தூக்கம் குறைவாக இருந்தாலும், அதிகமான தலைவலி உண்டாகும். ஆகவே ஒருவருக்குக் குறைந்தது 6-7 மணிநேர உறக்கம் மிகவும் இன்றியமையாதது. இதனால் மூளை மற்றும் உடல் நன்கு புத்துணர்ச்சியுடன் இருக் கும்.

**நீண்ட தூர பயணம்:**
பைக்கில் மிகுந்த வேகத்தில் நீண்ட தூரப்பயணம் செய்வது என்பது மிகவும் அருமையாக இருக்கும். ஆனால் அதையே குளிர் காலத்தில் செய்தால், சளி, ஜலதோஷம், போன்றவை ஏற்படும். அதிலும் காலை மற்றும் இரவு நேரங்களில் செல்வதுதான் பெரும் பிரச்சினையை உண்டாக்கும். அவ்வாறு பிரச்சினைகள் ஏற்படும் போது நிச்சயம் வாதக வலிகள் அனைத்தும் வந்துவிடும்.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 120 | 60 | 80 | 80 | 60 | 30 |
| கத்தரி | 60 | 70 | 60 | 60 | 50–40 | 60 | 60 | 45–60 |
| கரட் | 180 | 160 | 200–280 | 160 | 240–260 | 260 | 220–240 | 240 |
| மரவள்ளி | 50 | 60 | 60 | 50 | 50–60 | 50 | 60 | 40 |
| பயிற்றை | 130 | 100 | 160 | 120 | 180–200 | 140 | 160 | 130 |
| பாகல் | 200 | 100 | 140 | 160 | 200 | 160 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 120 | 140 | 65 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 120 | 100 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100–140 | 140 | 140 | 200 | 160–200 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 25–30 | 40 | 35 | 15 |
| தக்காளி | 80 | 70 | 70 | 60 | 80 | 120 | 60–80 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 160 | 40–50 | 40 | 60 | 30 |
| கீரை | 15 | 10–20 | 40 | 10 | 10–20 | 40 | 40 | 35 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20–30 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 150 | 120 | 120 | 120–100 | 200 | 200 | 160 |
| புடோல் | 60 | 100 | 70 | 100 | 80–70 | 60 | 80 | 70 |
| கோவா | 120 | 100 | 100 | 90 | 100–80 | 120 | 90–100 | – |
| வெண்டி | 120 | 120 | 100 | 100 | 120 | 80 | 90 | 60 |
| போஞ்சி | 160 | 180 | 240 | 160 | 240 | 300 | 240 | 180 |
| லீக்ஸ் | 130 | 160 | 160 | 160 | 160–150 | 160 | 160 | 180 |
| தேங்காய் | 50 | 30–45 | 60 | 50 | 40–50 | 50 | 35–40 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 90 | 120 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 140 | 120 | 160 | 120 | 140–160 | 100 | 140 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30–40 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 150 | 140 | 180 | 220–240 | 200 | 200 | 180 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 120 | 80–100 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 200 | 300 | 150 | 300 | 200 | 260 | 170 |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 800 | 700 | 600 |
| நண்டு | 300 | 500 | 400 | 400 | 200 | 400 |
| கணவாய் | 600 | 650 | 600 | 500 | 700 | 500 |
| பாரை | 650 | 500 | – | 600 | 600 | 370 |
| சுறா | 650 | 500 | – | 600 | 800 | – |
| சீலா | 300 | 250 | 500 | 400 | 400 | – |
| விளை | 600 | 400 | 400 | 500 | 600 | 350 |
| முரல் | 300 | 400 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 350 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 400 | 400 | 500 | 500 |
| ஒரா | 400 | 400 | 300 | 300 | – | – |
| திரளி | 250 | 350 | 200 | 250 | 200 | 250 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 150 | 70 |
| ஒட்டி | 300 | 200 | 200 | 200 | – | 150 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | – | 140 |
| மதனம் | 150 | 300 | 300 | 250 | 400 | 250 |
| கொய் | 100 | 200 | – | 120 | 100 | – |
| பாலை | 400 | 350 | 100 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 250 | – |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உங்கள் விதி உங்கள் கைகளில்

உங்களுடைய சொந்த வினை தான் உங்களுக்காக இந்த உடம்பை உற்பத்தி செய்திருக்கிறது. உங்களுக்காக இதை வேறு யாரும் செய்யவில்லை . எங்கும் நிறைந்த கடவுள் உங்களது அறியாமை காரணமாக மறைந்துள்ளார். பொறுப்பு உங்களிடமே உங்கள் விருப்பம் இல்லாமல் இந்த உலகத்துக்கு கொண்டுவரப்பட்டு, இந்த பயங்கரமான இடத்தில் நீங்கள் விடப்பட்டு இருப்பதாக எண்ணாதீர்கள். நீங்களே உங்கள் உடம்பை உருவாக்கினீர்கள்; இப்போது உருவாக்கிக் கொண்டி ருப்பதைப் போலவே சிறிதுசிறிதாக உருவாக்கினீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்களே உண்கிறீர்கள், உங்களுக்காக வேறு யாரும் உண்ண முடியாது. உண்டதை நீங்களே செரிக்கிறீர்கள், வேறு யாரும் அதைச் செய்ய முடியாது. இரத்தம், தசை, உடம்பு முதலியவற்றை அந்த உணவிலிருந்து நீங்களே உருவாக்கிக் கொள்கிறீர்கள், வேறு யாரும் அதை உங்களுக்காகச் செய்ய முடியாது. நீங்கள் தான் இவற்றை எப்போதும் செய்து வருகிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை நேசியுங்கள்



கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்தவர்கள் பலரும் இன்றைக்கு கருத்துவேறுபாடுகளினால் தனித் தனி குடும்பமாய் மாறி வருகின்றனர். இதற்குக் காரணம் அவசர யுகத்தில் ஒருவருக்கொருவர் சரியாக தொடர்பு கொள்ளமுடியாததே. ஒரே வீட்டில் இருந்தாலும் ஒருவருக்கொருவர் சரியாகப் பேசிக்கொள்ளாத காரணத்தினால் இடைவெளிகள் ஏற்படுகின்றன. இந்த இடைவெளிகளே நாளடைவில் விரிசலுக்குக் காரணமாகின்றன. ஆனால் ஒருசில குடும்பங்களின் உறுப்பினர்கள் இன்றைக்கும் ஒற்றுமையுணர்வோடு ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர். அதற்குக் காரணம் விட்டுக்கொடுத்தல் என்ற மந்திரமே. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒன்றாக அமர்ந்து பேசினாலே உறவுகளில் விரிசல்கள் விழ வாய்ப்பில்லை என்கின்றனர் நிபுணர்கள். குடும்ப உறவுகளை தக்கவைத்துக்கொள்ள அவர்கள் கூறும் ஆலோசனைகளை படியுங்கள்.

**விட்டுக்கொடுங்கள்**

குடும்பம் என்றாலே ஏதாவது சண்டை சச்சரவுகளும் மனக்கசப்புகளும் இருக்கத்தான் செய்யும். அவ்வாறு குடும்பத்தில் ஏற்படும் மனக்கசப்புகளுக்கு அதிக இடம்தராமல் சமாதானமாகப் போவதுதான் விட்டுக் கொடுப்பதிலேயே தலையானதாய் இருக்கும்.அவ்வாறு விட்டுக் கொடுத்து விரோதம் பார்க்காமல் வாழ்வதும் ஒரு கலை தான்.

**சூழ்நிலையை சமாளிக்க**

குடும்பங்கள் கூடி மகிழ்கின்ற தருணங்களிலும் பிரச்சினைகள் எழலாம், இதை முன்கூட்டியே எதிர்பார்த்து அவ்வாறான சூழ்நிலைகளைச் சந்திக்கும் மனப்போக்கையும் வளர்த்து வருவது மிகவும் நல்லது. இதனால் யார் என்ன பேசினாலும் கேலி செய்தாலும் அவை எமது மனதை அதிகம் பாதிக்காது.

**பாசமான சந்திப்புகள்**

குடும்ப உறவுகள் எப்போதும் ஏதாவது விசேஷங்களில் மட்டும் கூடுவதற்கு பதிலாக எந்தக் காரண காரியமும் இல்லாமல் அடிக்கடி குடும்பத்தாரைப் பாசத்தோடு வீட்டுக்கு அழைப்பதும் அதேபோல் அவர்களைச் சந்திக்கச் செல்வதும் குடும்ப உறவுகளை மேலும் வலுவடையச் செய்யும். இதனால் பகைமையும் ஒழியும்.

**மனம் விட்டுப் பேசுங்கள்**

குடும்ப உறவுகளோடு அடிக்கடி ஒன்றாகக் கூடி சுற்றுலா பயணம் மேற்கொள்வது குடும்பங்களுக்குள் மகிழ்ச்சியைக் கூட்டும். மனக் கசப்புகளையும் மறக்கடிக்கச் செய்யும். அதைபோல் குடும்ப உறவுகள் அடிக்கடி உணவகங்களில்கூட விருந்துகள் ஏற்பாடு செய்து குடும்பமாகச் சென்று உண்டு மகிழலாம். அவ்வாறான தருணங்களில் ஒன்றாக அமர்ந்து பேசி அவரவர்களுக்கு இடையே தோன்றும் எண்ணங்களை மனம்விட்டுப் பேசலாம். இதனால் கசப்பான கருத்து வேறுபாடுகள் மறையும்.

இதனால் குடும்பங்களை மீண்டும் மீண்டும் சந்திக்கும் ஆவலை அதிகரிக்கும்.

**கோபத்தை மறக்கலாம்**

புதிதாய்க் குடும்பப்படம் வெளிவரும்போது தங்கள் பெற்றோர்கள் அல்லது உறவினர்களை, அவர்கள் எதிர்பாராத வகையில் அவர்களுக்கு அழைப்பு விடுத்து ஒன்றாகச் சென்று கண்டு களிப்பது குடும்பங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகளையும் கோபத்தையும் கூட மறையச் செய்து விடும்.

**உறவுகளுக்கு முதலிடம்**

குடும்பத்தில் எதிர்பாராமல் துன்பம் வந்தால் முதலில் உறவுகளைத் தான் தேடி ஓடவேண்டும். மற்றவரெல்லாம் அதன் பிறகுதான். ஆனால் சிலர் அதைத் தவிர்த்து நண்பர்களையும் இன்னும் தெரிந்தவர்களையும் தான் உதவிக்கு நாடுவார்கள். இது முற்றிலும் தவறானது. நண்பர்கள் வருவார்கள்; போவார்கள். ஆனால் வாழ் நாள் முழுவதும் கூடவே வருவது குடும்ப உறவுகளே, ஆகவே எப்போதும் முதலிடம் அவர்களுக்குத்தான் என்று கருத வேண்டும்.

**உறவுகளை நேசியுங்கள்**

குடும்பத்தில் பிரச்சினைகள் எழாமல் இருக்க முதலில் உறவுகளை நேசியுங்கள். அன்பும், நேசமும் இருந்தாலே சிக்கல்கள் எழ வாய்ப்பில்லை. அப்புறம் அவர்களின் கருத்தை நாம் புரிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளலாம். எமது சொந்த உடலுறுப்புகளே ஒன்றுபோல் மற்றொன்று இருப்பதில்லை. எமது கையின் விரல்கள் ஐந்தும் ஐந்துவிதமாய் இருக்கின்றன. அதே போல்தான் குடும்ப உறவுகளும். இதனை உணர்ந்து உறவுகளை மதிக்கத் தெரிந்தாலே அந்தக் குடும்பத்து உறவுகளில் பிணக்கம் ஏற்பட வாய்ப்பிருக்காது.

எனவே குடும்ப உறவுகளின் மகத்துவம் அறிந்து அவற்றைப் புதுப்பித்துக் கொண்டே வருவோமானால், உறவினர்களுக்குள் அவ்வப் போது உண்டாகும் மனக்கசப்புகள் நிச்சயம் மறையும். இவ்வாறான வாழ்க்கை முறையைக் கடைக் கொள்வதன் மூலம் நமது சந்ததியினருக்கும் குடும்ப உறவுகளின் பெருமை தெரியும். எமக்கும் வருங்காலத்து வாரிசுகளை ஒரு வலுவான குடும்பச் சூழ்நிலையில் தான் வளர்த்தோம் என்ற ஆத்ம திருப்தி கிடைக்கும்.




# ஜூன் மாத எண் சோதிடப் பலன்கள்

5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்த நீங்கள் இந்த மாதம் சவாலான காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். பேச்சில் முதிர்ச்சி தெரியும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பணபலம் உயரும். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். பிள்ளைகளால் மதிப்பு, மரியாதைக் கூடும். அரசு காரியங்கள் சுலபமாக முடியும். பழுதாகியிருந்த வாகனத்தை மாற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உறவினர்களின் ஆதரவு கிட்டும். அடகிலிருந்த நகையை மீட்டு புது டிசைனில் ஆபரணங்கள் வாங்குவீர்கள்.




புதியவர்கள் நண்பர்களாவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். புது வேலை அமையும். புதுச் சொத்து வாங்குவீர்கள். வேற்று மொழிக்காரர்கள் அறிமுகமாவார்கள். அவ்வப்போது குடும்பத்தில் சலசலப்பு, வீண் சந்தேகம் வந்து விலகும்.

6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்த நீங்கள் இந்த மாதம் மாறுபட்ட அணுகு முறையால் பழைய சிக்கல்கள், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். முக்கியஸ்தர்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். உங்கள் ரசனைக்கேற்ற சொத்து வாங்குவீர்கள். மகனின் கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். பழைய நண்பர்கள், உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். பழைய வீட்டைப் புனரமைப்பீர்கள். அயல்நாட்டிலிருக்கும் நண்பர்களால் ஆதாயம் உண்டு.



உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வழக்கு சாதகமாக அமையும். தாய்வழி உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். அவ்வப்போது உணர்ச்சி வசப்படுவீர்கள். பழைய கசப்பான சம்பங்கள் நினைவுக்கு வரும். கண் மற்றும் பல் வலி வந்து நீங்கும். மன இறுக்கம், தூக்கமின்மை, தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். கோவில் விழாவை முன்னின்று நடத்துவீர்கள். கடன் பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். அதிகாரப் பதவிகள் தேடி வரும்.



# நீங்களே உங்களை பக்குவப்படுத்த...

- பெண்களே, மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்
- பெண்களே, எழுதப் பழகுங்கள். கவலைகளை, எரிச்சல்களை, தோல்விகளை குறைக்க எழுத்து வடிகாலாகும்.
- குழப்பம், கவலைகளை உள்ளுக்குள் புதைக்காமல் நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- தினமும் உங்கள் மனதை மகிழச்செய்யும் செயல்கள் எதையேனும் ஒன்றைச் செய்யுங்கள். அதில் பொருளாதாரப் பயன் ஏதும் இல்லாவிட்டாலும் கூடப் பரவாயில்லை.
- பிறருக்காக எதையேனும் செய்யப் பழகுங்கள். செய்யும் அனைத்துச் செயல்களையும் ஆத்மார்த்தமான அன்போடு செய்யுங்கள்.
- என்னை யாரும் புரிந்துகொள்ளவில்லையே என்ற முனகல்களைத் தவிர்த்துப் பிறரைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.
- உங்கள் நடை உடை, பாவனைகளில் தன்னம்பிக்கை மிளிரட்டும். உடைகளை நன்றாக அணிவதே தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.
- நிறைய வேலைகளை ஒரே நாளில் முடிக்க நினைக்காதீர்கள். ஒவ்வொரு வேலைக்கும் இடையே சரியான இடைவெளி எடுத்துக் கொள்ளுங்கள்.
- வார இறுதிகள், விடுமுறை நாள்களை மிகச் சிறப்பாகச் செலவிடுங்கள். வெளியே செல்வது, கடற்கரைக்குச் செல்வது என மனதைப் புத்துணர்ச்சியாக்குங்கள்.
- இன்றைய பணிகளைச் செவ்வனே செய்தால் நாளைய பணிகள் செவ்வனே நடைபெறும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.
- பிடிக்காத வேலை இருந்தால் அதை முதலிலேயே முடித்து விடுங்கள். அப்போது தான் தொடர்ந்து செய்யும் பிடித்தமான வேலைகள் மனதை இலகுவாக்கும்.
- மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள், அடுத்தவர்களைக் காயப்படுத்தாமல் வாழப்பழகுங்கள். அது உங்களைப் பக்குவப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பக்கத்து வீட்டுக்காரியின் மோப்பம்



முல்லாவின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு பெண்மணி வசித்து வந்தாள். முல்லா வீட்டில் என்ன சமையல் செய்தாலும், அவள் அதை மோப்பம் பிடித்து தனது சிறிய மகளை அனுப்பி சமைத்த பொருளில் கொஞ்சம் கேட்டு வாங்கி வரச் சொல்வாள். அவளுடைய அந்த விரும்பத்தகாத வழக்கம் முல்லாவுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதை எப்படித் தடுப்பது என்றும் விளங்கவில்லை. ஒருநாள் முல்லாவுக்கு கோழிக்குஞ்சு சூப் தயாரிக்கச் செய்து சாப்பிட வேண்டும் என்று ஆசையாக இருந்தது. சூப் தயார் செய்யச் சொல்லலாம் என மனைவியை அழைத்தார். மனைவி அவர் முன்னால் வந்து நின்றபோது முல்லாவுக்கு அண்டை வீட்டுகாரியின் நினைவு வந்தது. வீட்டில் சூப் செய்யத் தொடங்கினால் அண்டை வீட்டுக்காரி மோப்பம் பிடித்துக் கொண்டு சூப் வாங்க ஆள் அனுப்பி விடுவாளே என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

சூப் இப்போது தயார் செய்ய வேண்டாம் என்று கூறி மனைவியை அனுப்பி விட்டார். சற்று நேரத்திற் கெல்லாம் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. முல்லா எழுந்து சென்று கதவைத் திறந்தார். அண்டை வீட்டுக்காரியின் சின்னப் பெண் கையில் ஒரு கிண்ணத்துடன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தாள். என்ன? என முல்லா விசாரித்தார். உங்கள் வீட்டில் கோழி சூப் தயாரித்தீர்களாமே! அம்மா கொஞ்சம் வாங்கிக் கொண்டு வரச்சொன்னாள் என்று சிறுமி கூறினாள். முல்லா உரத்த குரலில் ஒஹோஹோ என்று சிரித்தார். உள்ளேயிருந்த மனைவி ஓடிவந்து உங்களுக்கு என்ன வந்துவிட்டது? ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டாள். இந்த வினோதத்தைப் பார்? இத்தனை காலமாக நாம் சமையல் செய்யும்போதுதான் அண்டை வீட்டுக்காரி மோப்பம் பிடித்து நாம் சமைக்கும் பொருளில் கொஞ்சம் வாங்கி வரச் சொல்லுவாள். இப்போது நான் சூப் செய்யச் சொல்ல வேண்டும் என்று மனத்திலேதான் நினைத்தேன். இதைக்கூட அண்டை வீட்டுக்காரி மோப்பம் பிடித்து சூப் வாங்கி வரச் சொல்லி மகளை அனுப் பியிருக்கிறாள் பார், என்று கூறிவிட்டு முல்லா சிரிக்கலானார்.



## பொது அறிவுத் தகவல்கள்

- இந்தியாவின் தேசிய நீர்வாழ் உயிரினம் – திமிங்கலம்.
- விதையில்லாமல் முளைக்கும் தாவரம் – தர்ப்பைப்புல்.
- உலகின் வெண்தங்கம் – பருத்தி.
- ஆரிய இனத்தவர்களின் தாயகம், மத்திய ஆசியா.
- வினிகரில், அசிடிக் அமிலம் உள்ளது.
- தாவரங்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுப்பது– பொட்டாசியம்.
- சைக்கிளைக் கண்டுபிடித்தவர்–மாக்மில்லன்.
- திரவ நிலையில் உள்ள உலோகம்–பாதரசம்.
- இரத்தச் சிவப்பணுக்களின் ஆயுட்காலம் –120 நாள்கள்.
- இந்தியத் துணை ஜனாதிபதியின் பதவிக் காலம்– 5 ஆண்டுகள்.

# மரம் வளர்ப்போம் வாருங்கள்!

மரம் வளர்ப்போம் வாருங்கள்
மாமழை பெறுவோம் வாருங்கள்
யாகம் வளர்த்தால் மழை வரும் என்ற
மடமையைப் போக்குவோம் வாருங்கள்!

யாகம் வளர்ப்பது மூடத்தனம்
மரம் வளர்ப்பது மூலதனம்
செடி கொடி வளர்த்துப் பாருங்கள்
வெம்மை நீங்கி வாழலாம்!

மக்கள் தொகை பெருக்கத்தால்
காட்டு வளங்கள் அழிகின்றன
காட்டு வளங்கள் அழிவதால்
கானல் வெப்பம் அதிகரிக்கும்!

வெப்பம் உலகில் அதிகரித்தால்
வேண்டா விளைவுகள் ஏற்படுமே
மழை நீர் மறைந்து போகும்
மனித இனம் அழிந்து போகும்!

வனவிலங்குகள் மாண்டு போகும்
புல் பூண்டுகள் தொலைந்து போகும்
பூமிப் பந்து நெருப்பாகும்
வேண்டாம் இந்த விபரீதம்!

புவியின் வெப்பம் தணிக்கவே
பூமியெங்கும் மரம் நடுவோம்
மழைவளம் காக்கவும் மனித வளம் காக்கவும்
மரம் வளர்ப்போம் வாருங்கள்!



## தெரிந்து கொள்வோம்

- சிரிப்பதன் மூலம், மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் ஹார்மோனின் உற்பத்தி அளவு குறைகிறது.
- புகழ்பெற்ற "டைட்டானிக் கப்பலை" உருவாக்க சுமார் 70 லட்சம் டொலர்கள் செலவானது.
- எமது உடலில் 20 முதல் 30 லட்சம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.
- தீப்பெட்டியைக் கண்டு பிடிப்பதற்கு முன்னரே சிகரெட் லைட்டர்கள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன.
- தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக் சாண்டர் கிரகாம்பெல்லின் தாயும், மனைவியும் காது கேளாதவர்கள்.
- ஆந்தையால் மட்டுமே தன்னுடைய மேல் இமையை விரிக்க முடியும். மற்றப் பறவைகளாக் கீழ் இமையை மட்டுமே விரிக்க முடியும்.
- கடவுளின் பெயர் சூட்டப் படாத ஒரே கிரகம்– பூமி.
- கண்களைத் திறந்து கொண்டே உங்களால் தும்ம முடியாது.
- பன்றிகளின் நாக்கில் சுமார் 15 ஆயிரம் சுவை நரம்புகள் உள்ளன.
- கி.மு. 2737–ம் ஆண்டில் தேயிலை கண்டுபிடிக்கப் பட்டது.

# பெற்றோரை

## சமாளிப்பதற்கான சில வழிமுறைகள்!



(நேற்றைய தொடர்ச்சி)

**உணர்ச்சிவசமாகப் பேசுவார்கள்**

சில பெற்றோர்கள் உணர்ச்சிவசமாகப் பேசிக் காரியத்தைச் சாதிப்பார்கள். அப்போது மன அழுத்தம் கொண்டு பெற்றோர்களுக்காக எதையும் செய்யாமல், வெளிப்படையாக அவர்களிடம் 'இவ்வாறெல்லாம் செய்து காரியத்தை சாதிக்கலாம் என்று நினைக்க வேண்டாம்' என்று வெளிப்படையாகச் சொல்லி, அவர்களது யுத்தியை மாற்றுங்கள். இல்லாவிட்டால், அவர்கள் உணர்ச்சிவசமாகப் பேசியே அனைத்திலும் வெற்றி பெறுவார்கள்.

**வாழ்வில் முன்னேற்றம்**



வாழ்வில் முன்னேற்றம் அடைந்தாலே, பெற்றோர்கள் நமது பேச்சுக்கும் மதிப்பளித்து, எதையும் ஒப்புக்கொள்வார்கள். அதற்கு நாம் வாழ்வில் முன்னேறுவதற்கான முயற்சியில் கவனம் செலுத்த வேண்டும். தனியாக இருப்பதே சிறந்தது பெற்றோர்களுடன் எப்போதும் சந்தோஷமாகவும், ஆரோக்கியமான உறவுமுறையை பின்பற்ற வேண்டும் என்றும் நினைத்தால், வளர்ந்து பெரியவர்கள் ஆகும் போது, தனியாகச் சென்று விட வேண்டும். அது திருமணம் ஆனாலும் சரி, ஆகாவிட்டாலும் சரி. இதனால் எதையும் சுதந்திரமாகச் செய்யலாம்.

**பெற்றோரைக் கவனிக்க வேண்டும்**

என்ன தான் பெற்றோர்கள் கோபத்தை ஏற்படுத்தினாலும், அவர்கள் மீது இருக்கும் அக்கறையும் பாசமும் குறையக்கூடாது. எப்போதும் அவர்களை அனைத்து வகையிலும் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**மனம் விட்டு பேச வேண்டும்**

பெற்றோரிடம் மனம் விட்டு பேசினால், எதற்கும் ஒரு நல்ல முடிவு கிடைக்கும். எனவே அவர்கள் உங்கள் சொந்த உணர்ச்சிகளில் குறுக்கிடும்போது, அது எரிச்சலாகவோ அல்லது கோபமூட்டுவதாகவோ இருந்தால், அதனை வெளிப்படையாக சொல்லிவிட வேண்டும். இதனால் அதற்குப் பின்னர் பெற்றோர்கள் சரியாக நடந்துகொள் வார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரூ. 5,000 நாணயத் தாளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

*பந்துல குணவர்த்தன கூறுகிறார்*

கொழும்பு, ஜூன் 17

5,000 ரூபா நாணயத்தாள் தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச உத்தியோகத்தர் என்ற ரீதியில் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் 5,000 ரூபா நாணயத் தாளில் கையொப்பமிடவில்லை. எனவே இந்த நாணயத்தாள்கள் செல்லுபடியானவையா என்பது குறித்துச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் அரசமைப்புக்கு அமைவாக 165 ஆம் சரத்தின் அடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும். தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் ஓர் சிங்கப்பூர் பிரஜையாவார். அவர் இலங்கைப் பிரஜையாகப் பதவிப் பிரமாணம் செய்யவில்லை.

சிங்கப்பூரைத் தவிர்ந்த வேறு நாடுகளுக்குச் பக்கச்சார்பாக செயற்படப் போவதில்லை என்றே அர்ஜுன் மகேந்திரன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அரச உத்தியோகத்தராக இலங்கைச் சட்டத்தின் அடிப்படையில் பதவிப் பிரமாணம் செய்யாத ஒருவர் எவ்வாறு இலங்கையின் நாணயத் தாளில் கையொப்பமிட முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் நீதிமன்றின் உதவியை நாட முடியும், இந்த நாணயத் தாளைப் பயன்படுத்துவது குறித்து மக்கள் மிகுந்த கவனம் தேவை என பந்து குணவர்த்தன எச்சரிக்கை விடுத்துள்ளார். (த)

# ஹெரோயின் விற்பனை செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஜூன் 17

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பேலியகொட பொலிஸின் குற்றப்புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த கான்ஸ்டபிள் 120 சிறுபைகளில் போதைப் பொருள்களைவைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் ஒருவரும் அவருடைய மகனும் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி வத்தளையில் ஹெரோயின் கைப்பற்றப்பட்ட நிலையிலேயே இந்த பொலிஸ் கான்டஸ்டபிளின் விற்பனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (த)

# இந்த வருடத்தில் மாத்திரம் 200 இந்திய மீனவர் கைது

கொழும்பு, ஜூன் 17

இந்திய மீனவர்கள் படகுகள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையின் பேச்சாளர் இந்திக்க சில்வா இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து 200 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 30 படகுகளும் கைப்பற்றப்பட்டன. இதில் பெரும்பாலான படகுகள் நெடுந்தீவு கடற்பகுதியிலேயே கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
நேரடியான உரையாடற்பயிற்சியின் மூலம் உங்களாலும் மூன்றே மாதங்களில் ஆங்கிலம்பேச முடியும்.
யாழில் சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 20.06.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 | 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 | 4. மாலை 03.00-05.00
சங்கானையில் - 20.06.2015 சனிக்கிழமை மாலை 03.00மணி
நெல்லியடியில் - 20.06.2015 சனிக்கிழமை மாலை 03.00 மணி
பாடப்புத்தகங்கள் மற்றும் DVD என்பன இலவசமாக வழங்கப்படும்.
SAAMSON Experts in English Training
[illegible] யாழ்நகர். 021 320 3313 077 621 4567

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 12.02.1930 | உதிர்வு 20.05.2015

### அமரர் சிவக்கொழுந்து இரசத்தினசபாபதி
*(பதி மாஸ்ரர்)*

கடந்த 20.05.2015 புதன் கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் சிவக்கொழுந்து இரத்தினசபாபதி (பதி மாஸ்ரர்) அவர்களின் அந்தியேட்டிகிரியைகள் இன்று (17.06.2015) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் வெள்ளிக்கிழமை (19.06.2015) மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பத்தாருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த் தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

464, கே.கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கோடீஸ்வரி மயில்வாகனம்



திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோடீஸ்வரி மயில்வாகனம் நேற்று (16.06.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மயில்வாக னத் தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கோபாலசிங்கம், சண்முகலிங்கம், தில்லைநாதன், சறோஜினிதேவி, நடேசபிள்ளை, நவரத்தினராசா, கிருஸ்ணராஜா மற்றும் சதானந்தன், அருச்சுனராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2015) புதன்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சித்திரா துசாகரன்



கொக்குவில் மேற்கு, நாகலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திரா துசாகரன் நேற்று (16.06.2015) செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் தேவசுந்தரலிங்கம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், துசாகரனின் (லண்டன்) அன்பு மனைவியும், வினுஷனின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அரிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
சி.தேவசுந்தரலிங்கம் (தந்தை)
021 205 2024, 0776128424, 0779228739.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
(நயினாதீவு - கொக்குவில்)



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் நயினா தீவை வசிப்பிடமாகவும் கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கடந்த (14.06.2015) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் புதல்வரும், நயினா தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நீலாம் பிகையின் அன்புக் கணவரும், வசந் தன் (லண்டன்), வசந்தி (கனடா), வரதன் (லண்டன்), வரோதயன் (நோர்வே), வளவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விவேகானந்தன் (கனடா), விமலா (லண்டன்), சத்தியா (லண்டன்), மஞ்சு (கொழும்பு), கலாநிதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், சிந்துஜா, கரண்யா, பிரசினி, கௌசிகன் , நிருஷினி, சாயகன், சயானு, மனுஜா, டணன், டயன், அனோஜா, கோபிஷா, அபிநயன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சண்முகநாதன், பவளம்-காங்கேயன், ஆறுமுகம் பிள்ளை மற்றும் ராணி - நமசிவாயம், மலர் - அருணாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான காங்கேயன், நமச்சிவாயம் மற்றும் அருணாசலம், குலமணி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2015) வியாழக்கிழமை இல. 110, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படு ம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 110, அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.
021 520 2752

வசந்தன் - (208) 94273[illegible] வரதன் - (207) 99873[illegible]
வசந்தி - 0014162981817, வரோதயன் - [illegible]
வளவன் - 0014162822495, 077 5829559

### முத்து தங்கராசா



வவுனியா நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் அரியாலை முதலியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து தங்கராசா நேற்று (16.06.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து மற்றும் யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சோதிமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தேன்மொழியின் அன்புக் கணவரும், தர்ஷனா, உதயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசம்மா, கமலாதேவி, ஆனந்தன் ஆகியோரின் அன்புச் சகோ தர னும், தீபசோதி, கலாசோதி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (17.06.2015) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 45, முதலியார் லேன்,
நாவலர் றோட், அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி டெய்சி மேரி அக்னஸ் குமரையா

அரியாலை, சந்தான மாதா கோயில் ஒழுங்கையை இருப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற E.K. குமரையா அவர்களின் மனைவி திருமதி டெய்சிமேரி அக்னஸ் குமரையா நேற்று (16.06. 2015) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தான மாதா ஒழுங்கை,
அரியாலை.

தகவல்:
K. ரவீந்திரகுமார்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TV கள் மலிவு விற்பனை

SONY Wega Flat TVகள் 14"-6000/=, 21"-10000/=, DVD-3250/=, கசெற் ரேடியோ 3000/= Box வகைகள், குளிர்சாதனப் பெட்டிகள் 19, 500/=

தொடர்பு: 077 044 0570

சோனி ரேற் சென்டர், (கொமர்சியல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். (60807)

## தேவை

யாழ். நகருக்கு அருகில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (இரவு) தேவை. 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 2958009 (61020) (18.6.3)

## மேசன்மார் தேவை

சங்கென் ஸ்தாபனத்தின் கைதடி வேலைத் தளத்திற்கு திறமை மிகுந்த மேசன்மார்/ Tilers தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ரூபா2000 வரை. தங்குமிட வசதி உண்டு.(கொம்பனி நேரடி சம்பளம்)

விவரங்களுக்கு:
071 534 9942,071 238 7076

## தேங்காய் விற்பனை

தோலுடனும் , தோல் இல்லாமலும் தேங்காய் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. வெளி மாவட்ட வியாபாரிகளும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : சி.கரன்
புதியநகர்,
மாங்குளம்

தொலைபேசி இல. 077 581 7140
076 845 3164

(57129) (3.11)


## மனதார பாராட்டுகின்றோம்



கடந்த 18.04.2015 அரச அனுசரணையில் இயங்கும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் *சாமசிறி தேசமானிய* கௌரவப்பட்டங்கள் வழங்கிக். கௌரவிக்கப்பட்ட பஜனைப்பாவலர் ஆயுர்வேத வைத்தியர்

### சோமர் லோகநாதன்

அவர்களின் அளப்பரிய சமய , சமூக , கலை கலாசார சேவையை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

*வாழ்த்துவோர்:*
சிறி சித்திரா - குடும்பத்தினர்.
சி.சிவராசா
35/4, வில்லூன்றிப் பிள்ளையார் கேணி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

## Sri Lankan – German Development Cooperation

Ministry of Skills Development and Vocational Training

german cooperation

**Vocational Training in the North and East of Sri Lanka (VTN)**

### Vacancies for English teachers

The German International Cooperation (GIZ) supports vocational training in Sri Lanka. In order to improve training capacities at the National Vocational Qualification (NVQ) levels 1-4 and enable candidates from the region to obtain the required entrance qualification for further training, existing vocational training providers in the Northern and Eastern Province are promoted. To fulfil the requirements of the private sector and to permit the trainees to be further educated, English is an essential requirement. Therefore the VTN Project invites qualified candidates to apply as,

**ENGLISH TEACHERS for the VOCATIONAL TRAINING SECTOR**

English teachers are needed for all districts of the Northern and Eastern Provinces. Suitable applicants will get the possibility to receive a job in vocational training centres of Vocational Training Authority(VTA) and National Apprentice and Industrial Training Authority (NAITA) of Sri Lanka. To apply, the following requirements are demanded:

- Your English knowledge must be very good in speaking, reading and writing. You should have full operational command in English, and should be able to handle complex detailed argumentation.
- You must have experience or a background in teaching. You have practical experience in teaching groups in e.g. schools or universities or you have studied teaching.
- Women are given priority.

The required qualifications are:

- Bachelor's Degree (English / English Literature) CELTA or equivalent preferred. OR,
- ESOL (English for Speakers of other Languages) Trinity College London OR,
- Any other Diploma in English/ English Teaching, equivalent to the above OR,
- Very Good User in English - 7 according to scale International English Language Testing System (IELTS) OR,
- Retired, trained English teachers of Government schools or Teachers of registered schools of the Ministry of Education

If you fulfil the requirements, send us an envelope with the following documents all in English:

1. Application including the description of your English teaching experience. Please mention also where you live and whether you plan to move.
2. Curriculum Vitae
3. Copies of all relevant certificates.

*Please send your application to:*

Dr. SiddhikaSenarathne,
Director - Planning, Research & Development,
VTA, NipunathaPiyasa,
354/2, ElvitigalaMw., Colombo 05

**The deadline for the applications is June 28th**

Suitable applicants will be invited for a job interview.

National Apprentice and Industrial Training Authority — Vocational Training Authority — KFW


## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாத கங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மண மக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
T.P. NO: 077 138 7596, 021 222 9306
T.P. NO: 075 554 6000, 071 894 5692
Email: nakapoosanywedding@gmail.com
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.
(எமக்கு வேறு கிளைகள் எதுவுமில்லை)


## வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல் - 2015

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 2015.06.17 தொடக்கம் 2015.06.30 மு.ப. 10.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2015.07.02 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 2015.07.02 நண்பகல் 12.00 மணி (கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்'' என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ எதிர்வரும் 2015.07.02 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைப்பதுடன் இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| 1 | மனோன்மணி அம்மன் கோயில் வீதி திருத்தம், சிறுப்பிட்டி. | C9 | 20000.00 | 1000.00 |
| 2 | சேமப்புலம் வீதி திருத்தம், உரும்பிராய். | C8 | 24690.00 | 1000.00 |
| 3 | ஐயாவத்தை வீதி திருத்தம், நீர்வேலி. | C8 | 25000.00 | 1000.00 |
| 4 | செல்வநாயகபுரம் வீதி திருத்தம், அச்சுவேலி. | C9 | 20000.00 | 1000.00 |
| 5 | ஆச்சியடி வீதி திருத்தம், கோப்பாய். | C8 | 24200.00 | 1000.00 |
| 6 | வள்ளியம்மை வீதி திருத்தம், கோப்பாய். | C8 | 22200.00 | 1000.00 |
| 7 | கலைஒளி வீதி மேலதிக வேலை திருத்தம். | C10 | 3600.00 | 1000.00 |


மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**வலி கிழக்கு பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம்,**
**புத்தூர்.**
16.06.2015

(C/17691)(16.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15 . 04 . 1947



மறைவு: 17 . 06 . 2014

### அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.)

திதி: 06.07.2015

வசந்தம் எம் வாசல் வந்து போய் வருஷமாச்சு
தென்றல் சுமந்து வந்த தெம்மாங்கு இப்போ இங்கில்லை
கலங்கரை விளக்கின்றி நகர்கிறது நம் வாழ்க்கை
நிலம் வியக்க இங்கு நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

வரணி. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் சோதிடரிடம் 8 மணித்தியால விசாரணை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னாள் ஜோதிடரானசுமணதாசஅபயகுணவர்த்தனவிடம் எட்டு மணித்தியாலங்கள் பொலிஸார் நேற்று முன் தினம் விசாரணை நடத்தியுள்ளனர்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் இந்த விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

ராஜபக்ஷ குடும்பத்தின் வீடுகள், காணிகள், தோட்டங்கள், சொத்துக்கள் மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தினருடன் நெருக்கமானவர்களினால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தின் காணிகள் கொள்வனவு, வீடு அல்லது கட்டட நிர்மாணம் என்பனவற்றுக்கு சுமணதாசவின் சோதிட ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

காணிகள், வீடுகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பில் சுமணதாசவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.இந்த விசாரணைகளின் போது சுமணதாச பல்வேறு முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளதாக நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் காலை 9.00 மணி முதல் சுமணதாசவிடம் விசாரணை நடத்தப்பட்டது. பிறிதொரு நாளிலும் சுமணதாசவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (த)

# 20ஆவது திருத்தம் குறித்து ஐ.தே.க விசேட கூட்டம்

கொழும்பு, ஜூன் 17

20ஆவது திருத்தச் சட்டம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழு விசேட கூட்டமொன்றை நடத்த உள்ளது.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 225ற்கும் மேல் உயர்த்தப்பட்டால் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது குறித்து இதில் பேசப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 225ற்கும் மேல் அதிகரிக்கப்படக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானித்திருந்தது.

இவ்வாறான ஓர் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு எவ்வாறு அமையும் என கட்சியின்சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரிடம் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தபோது, இது குறித்து கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் கூடி ஆராய உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பேச்சு நடத்தி எடுக்கும் தீர்மானம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளனர் என்று கூறப்பட்டது. (த)

## மரண அறிவித்தல்



திருமதி

### நாகராஜேஸ்வரி இராசசிங்கம்

காரைநகரைச் சேர்ந்த கன்னாதிட்டி ஓழுங்கை, தெகிவளை வண்டவர்ட் பிளேஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இ.நாகராஜேஸ்வரி அவர்கள் 15.06.2015 திங்கட்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கதிரவேல் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற முருகேசு, தியாகராசா (அவுஸ்திரேலியா), புவனேஸ்வரி (அவுஸ்திரேலியா), நடராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், ஜீவகன் (அவுஸ்திரேலியா), ஜயந்தன் (அவுஸ்திரேலியா), ஜனகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவானி, சாந்தினி, பிருந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், வினோ, ஆரணி, ஸ்ரீசக்தி ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 17.06.2015 புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, 18.06.2015 வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை ஈமக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Tel: 011 2734383 / 077 3868525 – ஜீவகன் / 075 5227603 – ஜனகன்

## மரண அறிவித்தல்

பிறப்பு ★ 03 . 06 . 1931



இறப்பு ★ 16 . 06 . 2015

### திருமதி காந்திமதி (புனிதம்) நாகராஜா

"அப்பிலாக்கை" சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் "போர்ணியோ வாசா" தொட்டிலடி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட காந்திமதி நாகராஜா நேற்று (16.06.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இராசதுரை, பாலசுப்பிரமணியம், சிவானந்தன், இராலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லோகேஸ்வரி, சறோஜா, லோகேஸ்வரன், லோகநந்தினி, லோகநாகேஸ்வரன், வசந்தா ஆகியோரின் பாசமிகு தாயும், விஜயகாந்தன், கந்தசாமி, குமுதினி, செல்வராஜா, ஜெயராணி, நந்த குமார் ஆகியோரின் அன்பு மாமியும், கிரிஜா (Swiss), விஜிதரன், ரெனிஷா, காலஞ்சென்ற நித்தியகல்யாணி மற்றும் உதயறமணன், ஹேமமாலினி (UK), காயத்திரி (UK), பார்த்தீபன் (UK), ரிசிந்தன், தேனுகா, விஷ்ணுசாந், பஞ்சதீபன், சஞ்சீவன், சுஜீவன், கரிஜா, யருஷா, கஜலக்ஷா, டிலக்ஷா, நிலக்ஷன் (Nertharland), சுகிதரன் (UK), நந்தகுமார் (Swiss), விஜித்திரன் (UK), வசிகரன் (Nertharland), தர்ஷினி ஆகியோரின் பேர்த்தியும், யதுஷா, கரிஸ், கார்த்தீக், சுவீனன் (Swiss), லிபிகா (UK), பிறிஜீவ் (UK), லகின்ஜா (UK) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"போர்ணியோவாசா"
தொட்டிலடி, சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

தோற்றம்: 23 . 05 . 1974



மறைவு: 13 . 06 . 2015

### திருமதி வனிதா ராமச்சந்திரன்

பருத்தித்துறை, மாதனையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வனிதா ராமச்சந்திரன் கடந்த (13.06.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கோபாலராசா - விஜயலக்ஸ்மி (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நந்தம்மா தம்பதியரின் மருமகளும், ராமச்சந்திரனின் அன்பு மனைவியும், லோஜினி, சாதனா, அபிஷேக் (ஜேர்மனி), கிஷோர் ஆகியோரின் அன்புத் தாயும், சுதாகர் (பிரான்ஸ்), மாலினி (பிரான்ஸ்), நிரஞ்சலா (ஜேர்மனி), சர்மிளா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜி (பிரான்ஸ்), அருந்தவச்செல்வம் (பிரான்ஸ்), ரூபன் (ஜேர் மனி), இராசதுரை, இரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனியும், பிரதீஸ் (பிரான்ஸ்), சுரேகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், அர்ச்சனா (பிரான்ஸ்), ஆர்த்தீசன் (பிரான்ஸ்), அஸ்வினி (ஜேர்மனி), அமுதா (ஜேர்மனி), ரதுசன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2015) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவாது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத் தித்துறை கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதனை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி கணேசன்



காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாவும் மணியகாரன் வீதி,கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கணேசன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15.06.2015) காலமானார்.

அன்னார் ஆறுமுகம் கணேசன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஓவசியர் வீரசிங்கம்-நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற E.V ஆறுமுகம் -காமாச்சி (பிரபல வர்த்தகர் பசறை) அவர்களின் அன்பு மருமகளும் ஐங்கரன்,சிவசுதன், ஆனை முகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்சனாவின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தம்பிராசா, திருவாதுரை, இராமநாதன், சோமசுந்தரம்,தவமணி, சோதியா ம்பாள்,பராசக்தி,பவானி, ஜெகதீஸ்வரி, செல்வராசாஆகியோரின் அன்புமைத்துனியும் பரமசாமி, சிவானம், சதாசிவம் சிவபாலன் யோகேஸ்வரிஆகியோரின் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.06.2015 புதன்கிழமை காலை 7.30 மணியாளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவு ம்.

மணியகாரன் விதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்
T.P:021 300 8851

### வைத்திலிங்கம் சபாரெத்தினம்(காந்தி)

பிறப்பு 03 . 04 . 1931



இறப்பு 16 . 06 . 2015

வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சபாரெத்தினம்(காந்தி) 16.06.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

No.20,மனாற்தரைவிதி,
பரமேஸ்வராச்சந்தி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பாலா(கவிலா ரேற்சென்ரர் பரமேஸ்வராச்சந்தி.)

(61015)(9.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் விடுதலைக்காக பற்றுறுதியுடன் செயற்படுக

## தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் ஏதாவது நன்மை விளையலாம் என்ற எதிர்பார்ப்புடன் இந்தச் சந்தர்ப்பத்தை நோக்குவதால், எமது விடுதலைக்காக இன, மத பேதங்களைக் கடந்து நீதி, நியாயம் வேண்டி அனைத்துத் தரப்பினரும் மனிதநேயத்துடன் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் செயற்படவேண்டும்' என்று அனைத்து இலங்கைத் தமிழ் அரசியல் கைதிகள் அமைப்பு, அறிக்கையொன்றினூடாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது விடுதலை தொடர்பில் அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நியாயமற்ற முறையில் நீண்ட நெடும் சிறை வாழ்வை அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதியினராகிய நாம், எமது பெற்றோர், உறவினர்கள் ஊடாக விடுக்கும் பகிரங்க வேண்டுகோள்.

ஆண்டாண்டு காலமாக ஆட்சிபீடமேறும் அரசுகள் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் குழுக்கள் அமைத்து ஆராய்வதும், அவ்வப்போது எழும் கோஷங்களை அமைதிப்படுத்துவதற்கு வாக்குறுதிகளை வழங்குவதும் வாடிக்கையாகியுள்ளது. அரசியல் கைதிகள் விடயத்தில் நாளுக்கு நாள் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டுவரும் அரசியல் தலைவர்களின் போக்குகளால் நாம் இறுக்கமடைந்துள்ளோம்.

இந்நிலையில், இன, மத பேதங்களைக் கடந்து நீதி, நியாயம் வேண்டி விஜயகுமாரி, விபூசிகா ஆகியோரின் விடுதலைக்காகக் குரல் கொடுத்ததைப்போன்று, அனைத்து மதத் தலைவர்கள், மனித உரிமை அமைப்புகள், சிவில் சமூகங்கள், பிரஜைகள் குழுக்கள், மாணவர் ஒன்றியங்கள், அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்புகள், காணாமற்போனோர் தொடர்பாக குரல்கொடுக்கும் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் என்பன தமிழ் அரசியல் கைதிகளாகிய எமது விடுதலைக்கு பரந்துபட்ட ரீதியில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தற்போது நாட்டிலுள்ள அரசியல் சூழல் அடுத்துவரும் நாள்களில் எவ்வாறு மாற்றமடையும் என்பதைக் கணிப்பிடமுடியாத நிலைமை உள்ளதால், இன்றைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் எமக்கு ஏதாவது நன்மை விளையலாம் என்ற எதிர்பார்ப்புடன் இந்தச் சந்தர்ப்பத்தை நோக்குகின்றோம். ஆகவே, இந்த ஊடக அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, எமது விடுதலைக்காக அனைத்து தரப்பினரும் மனித நேயத்துடன் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் செயற்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-சி)

---

### மாற்றத்துக்காக

வலியுறுத் திக்கூறிய ஜனாதிபதி, முன்னைய அரசிலிருந்து வெளியேறிய தான், நாட்டுக்கும் மக்களுக்கும் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக 49 அமைப்புகளுடன் ஒரு உடன்படிக்கைக்கு வந்தார் எனவும் தெரிவித்தார்.

ஒரு பிரதமர் நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்படலாம். அதற்கு புதிய திட்டங்களும் சிந்தனைகளும் மக்களுக்கான அர்ப்பணிப்புமே உண்மையில் தேவையாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிரிவினை அரசியல் கலாசாரத்துக்கு முடிவுகட்டி ஒரு புதிய அரசியல் கலாசாரத்துடன் எல்லா புத்திஜீவிகளையும் ஒன்றிணைத்து மக்களின் நன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது சகலரதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அந்த நிகழ்வில் அமைச்சர். எஸ்.பி. நாவின்ன, வடமேல் மாகாண சபை முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர, பிரதி அமைச்சர் சாந்த பண்டார ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினர். பிரதி அமைச்சர் எரிக் வீரவர்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயரத்ன ஹேரத் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (உ-4)

### பீதியைக்

வழக்கமாக கறுப்பு நிற வௌவால்களே வடபகுதியில் காணப்படுகின்றன. அவையும் மாலையில் கிளம்பி, இரவில் நடமாடும் வழக்கமுள்ளவை. இதற்கு மாறாக கனகராயன்குளத்தில் சிவப்பு நிற வௌவால்கள் திடீரெனத் தோன்றின. மேற்பரப்பில் சிறிய கறுப்பு நிறத்தைக் கொண்டிருந்தபோதும் உடலின் அனேகமான பகுதிகள் சிவப்பு நிறமானதாக இருந்தது என்று அவற்றை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

மன்னகுளம் குடிமனைகள் ஊடாக இவை திடீரெனப் பறந்து திரிந்ததால் மக்கள் மத்தியில் பீதியேற்பட்டது. வௌவால் கடித்ததில் சிறுமிய ஒருவருடைய கையிலும் சிறிய காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

"வீட்டில் நின்ற மரங்களிலும் வேலிகளிலும் வந்தமர்ந்த இந்த வௌவால்கள் மனிதர்களின் நடமாட்டச் சத்தம் கேட்டதும் திக்குத் திசை தெரியாமல் பறந்தன. அப்படி பறக்கும்போதே சிறுமி ஒருவருடைய கையிலும் காயத்தை ஏற்படுத்தின" என நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு சிவப்பு நிறம் கொண்ட வௌவால்கள் இது வரை காலமும் அந்த பகுதியில் இல்லை எனவும் அவை எங்கிருந்து வந்தன என்பது சந்தேகமாக உள்ளது என்றும் மக்கள் கூறினர். (உ-21, 422)

### ஆண்டிறுதியில்

கொழும்பு உறவு, ஆட்சி மாற்றம் ஏற்பட் டதைஅடுத்து மீண்டும் இறுக்கமடைந்தது. அமெரிக்க இரா ஜாங்கச் செயலர் ஜோன் கெரி கடந்த மே மாதம் கொழும்புக்குப் வந்து திரும்பியிருந்தார்.

கெரியின் வருகையின்போது அமெரிக்க அதிபர் இலங்கைக்கு வருகை தரவேண்டும் என்று கொழும்பு அரசு சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இலங்கைக்கு அமெரிக்க அதிபர் வருகை தந்தால் அமெரிக்க அதிபர் ஒருவர் இந்த நாட்டுக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ பயணமாக அது இருக்கும்.

இதேவேளை, "அதிபர் ஒபாமாவின் இலங்கைப் பயணம் குறித்து இதுவரையில் எதுவும் முடிவு செய்யப்படவில்லை. இந்த வருட இறுதியில் ஒபாமா தெற்காசியாவுக்குப் பயணம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் அந்தப் பயணத்தின்போது அவர் இலங்கைக்கும் வருகை தருவது உறுதி செய்யப்படவில்லை" என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

### முதல்வரிடம்

சபை உறுப் பினர்களுக்கும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கூட்டத்தை உடனடியாக கூட்டுவது என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான கூட்டம், யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுக் காலை இரு மணி நேரம் இடம்பெற் றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தென்பகுதிக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இது கூட்டமைப்பை பிளவுபடுத்தும் நடவடிக்கையா? வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் வடக்கு மாகாண சபையின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடந்த வாரம் சந்தித்த போது மேற்கண்டவாறு தெரிவித்ததாக, ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது.

இது தவறான செய்தி என்று தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார். இந்த விவகாரம் சர்ச்சையாக உருவெடுத்துள்ள நிலையில், இது குறித்த உண்மை நிலைமையை முதலமைச்சரிடம் இருந்து பெற்றுக்கொள்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டதாகச் சொல்லப்படும் விடயத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பிலும், அதன் உண்மைத் தன்மையை நிரூபிப்பதற்காகவுமே முதலமைச்சரிடம் விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தி உண்மை நிலை மக்களுக்குத் தெரியப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் விரைவில் சந்திப்பு நடத்தவும் இணக்கம் காணப்பட்டது. (உ-5)

### இனிமேலும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையிலான கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவசக்தி ஆனந்தன், ரெலோ அமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஹென்றி மகேந்திரன், புளொட் அமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன் மற்றும் சதானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளாலும் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிடம் கையளிக்கப்பட்டது. குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று தமிழரசுக் கட்சி தெரிவித்திருந்தது. அதற்கமைய கட்சியினால் திருத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றைய தினம் ஏனைய கட்சிகளுக்கு வழங்கப்பட்டது.

அதில் இனிவரும் தேர்தல்களில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அங்கத்துவக் கட்சிகளிடையே அதிருப்தி நிலவுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியாகப் பதிவு செய்யப்படும் வரையில், தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது என்று குறித்த சரத்து திருத்தப்படவேண்டும் என்று மூன்று கட்சிகளும் அடுத்த கலந்துரையாடலில் வலியுறுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

### 49 மருத்துவர்கள்

களில் ஒரு வருடம் பயிற்சி பெற்று நிறைவு செய்த மருத்துவப் பட்டதாரிகளே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வைத் தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார். இவர்களுக்கான நிய மனங்களை கடந்த சனிக்கிழமை சுகாதார அமைச்சு வழங்கியிருந் தது.

புதிய மருத்துவர்களின் வருகையை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவி வந்த மருத்துவர் பற்றாக்குறை ஓரளவுக்கு நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதியவர்களில் 9 பேர் வெளிநோயாளர் பிரிவில் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய மருத்துவர்களில் தமிழ், சிங்கள ஆகிய இரு இனத்தவர்களுமே அடங்கி யுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-4)

### பொறுப்புக்கூறல்

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கியமை குறித்தே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித் தார்.

மேலும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின், இலங்கை தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறார் என்றும் ரிச்சட்சன் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை, அதற்கு முன்னதாக ஓகஸ்ட் மாதம் இராஜதந்திர பணிய கங்களுக்கு விநியோகிக்கப்படும். (உ-5)

### ஏமாற்றம்

தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா இதனைத் தெரிவித்தார்.

இராணுவத்தினர் கைவசப்படுத்திய காணிகளை விடுவிப்பது, அரசியல் காரணங்களுக்காக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பது, வடக்கு - கிழக்கில் உள்ள பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது ஆகிய விடங்களில் கொழும்பு அரசின் நடவடிக்கைகள் தமக்கு கவலையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

புதிய அரசு பதவியேற்றபின்னர் வளலாயில் 437 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. முன்னைய அரசே விடுவிப்பதற்குத் திட்டமிட்ட காணிதான் இது. வலிகாமம் கிழக்கைச் சேர்ந்த அந்தப் பகுதியில் 403 ஏக்கர் காணி இன்னமும் விடுவிக்கப்படவேண்டியிருக்கிறது. வலிகாமம் வடக்கிலே இராணுவம் கையகப்படுத்திய 6371 ஏக்கர் காணியில் 563 ஏக்கர் காணிதான் விடுவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய அரசு பதவியேற்று 6 மாதங்களை எட்டிவிட்டபோதும் இவ்வளவு சிறிய நிலப்பரப்புத்தான் விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்குக்கூட அடிப்படை வசதிகளை அரசு செய்து கொடுக்கவில்லை. போதிய நிதி இல்லை என்று மீள்குடியேற்ற அமைச்சு தெரிவிக்கிறது.

சம்பூரில் விடுவிக்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட 876 ஏக்கர் நிலத்தின் விடுவிப்பும் தாமதமடைந்திருக்கிறது. தடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு மீளக்குடியமர்ந்தவர்களைக் கூட பொலிஸார் வெளியேற்றி இருக்கிறார்கள். அந்த நிலத்தை விடுவிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி கையெழுத்திட்ட பின்னரும்கூட இவை நடந்துள்ளன. இவை எல்லாம் எமக்குக் கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுத் திருக்கின்றன.

### மஹிந்தவுக்கு

மஹிந்த ராஜபக்ஷ நாரஹேன்பிட்டிய அபயாராமயவிற்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரை அழைத்திருந்தார். அவர்களு டன் உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்கள் சிலரும் அழைக்கப் பட்டிருந்தனர். இந்தச் சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார்.

மாத்தறையில் உங்களுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட கூட்டத்தில் ஏன் பார்வையாளராக மாத்திரம் கலந்து கொண்டீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, எனக்காக நான் இன்னும் பார்வையாளன்தான் என்று குறிப்பிட்டார்.

மேலும், 20ஆவது அரசமைப்பின் கீழ் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் அது தமக்கு வசதியாக அமையும் என்றும் குறிப்பிட்டார். (உ-5)

### சொல்ஹெய்முக்கு

மேலும் கூறியதாவது:

லண்டனில் நடந்த முதல்நாள் கலந்துரையாடலில் எரிக் சொல் ஹெய்ம் குறுகிய நேரமே கலந்துகொண்டிருந்தார். புலம்பெயர் இலங்கையர்களுடனான தனது கடந்தகால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே அவரது நோக்கமாகும்.

அவர் தனிப்பட்ட முறையிலேயே இதில் பங்கேற்றார், நோர்வே அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளவில்லை. இலங்கையின் எல்லா விவகாரங்களிலும் எரிக் சொல் ஹெய்ம் நிச்சயமாக எந்தப் பங்கையும் வகிக்கவில்லை. எதிர்காலத்திலும் அவர் எந்தப் பங்கையும் வகிக் கமாட்டார்.

ஆனாலும், புலம்பெயர்ந்தோருடனான அவரது ஈடுபாடு மற்றும் கடந்தகால அனுபவங்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன, என்று மங்கள சமரவீர தெரிவித்தார். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்பு

கொழும்பு, ஜூன் 17

வத்தளை பிரதேசத்தில் மூன்று கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியுடையதெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாகவும், அவரிடமிருநது 2.4 மில்லியன் ரூபா பணம் மற்றும் இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (த)

### மஹிந்த அணியுடன் சம்பிக்க தொடர்பு

கொழும்பு, ஜூன் 17

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் ஜாதிக ஹெல உறுமயவும் இனவாதத்தைப் பேசி சுய அரசியல் இலாபத்தைத் தேடுவதாகவும், மஹிந்த ராஜபக்ஷ அணியுடன் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குமுது குசும் குமார குற்றம் சுமத்தியுள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அரசுக்கும் களங்கம் ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பிக்க ரணவக்க 2020ஆம் ஆண்டு ஜனாதிபதியாக வரவேண்டும் என்று அடிப்படையிலேயே ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதில் சில நிபந்தனைகளை விதித்திருந்தார். ஜாதிக ஹெல உறுமய, இராணுவ ஆட்சி ஒன்றையே விரும்புவதாக குமார சுட்டிக்காட்டினார். (த)

# ஐ.நா அறிக்கைக்கு முன்னர் தேர்தலை விரும்பும் ஐ.தே.க

## சாடுகிறது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

கொழும்பு, ஜூன் 17

எதிர்வரும் செப்ரெம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான அறிக்கை வெளியாவதற்கு முன்பாக தேர்தலொன்றுக்குச் செல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முனைகின்றது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

போர்க்களத்தில் வெற்றி வீரராகக் கருதிய எவரையும் காட்டிக்கொடுப்பதற்கு மக்கள் தயாராகவில்லை என்ற நிலையில் மக்களின் கருத்து நிலைப்பாட்டை கவனத்திற்கொண்டே ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான முடிவை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் பெரும் வீழ்ச்சிப் பாதையில் சென்றுகொண் டிருக்கும் நிலையில் அன்றாடம் நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டுசெல்வதற்குத் தடுமாறிக்கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, செப்ரெம்பரில் வெளிவரவுள்ள அறிக்கை தமக்குப் பாதகமாக அமையும் என்ற காரணத்தால் விரைவில் தேர்தலுக்குச் செல்வதற்கு முற் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு, அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்படி விடயங்களைக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் விரைந்து தேர்தலுக்குச் செல்வதற்கு வேண்டுகோள் விடுப்பதற்கான காரணம் என்ன? என எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த டலஸ் அழகப்பெரும,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அறிக்கை செப்ரெம்பரில் வெளிவரவுள்ளது. எமக்கு இது மிகவும் இரகசியமானது எனக் கூறப்பட்டபோதும் சொல்ஹெய்மின் கருத்துப்படி இதில் பல ஆச்சரியங்கள் உள்ளடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவ அதிகாரிகள் 40 பேரின் பெயர்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகச் சொல்ஹெய்ம் குறிப்பிட்டிருக்கின்றார். அத்தோடு, சிவில் நபர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதில் இடம்பெறக்கூடிய சிவில் நபர்கள் யார் என்பதை இந்த நாட்டிலுள்ள எவராலும் ஊகிக்க முடியும். இந்த அறிக்கை வெளியிடப்பட்டவுடன் இந்த நாட்டை ஆட்சிசெய்ய முடியாத வகையிலான மக்கள் கருத்து ஏற்படும் என்ற நியாயமான அச்சம் ஐக்கிய தேசியக் கட்சியினர் மத்தியில் உள்ளது. இந்த நாட்டின் போர்க்களத்தில் வெற்றி வீரராகக் கருதிய எவரையும் காட்டிக்கொடுப்பதற்கு மக்கள் தயாராகவில்லை என்ற விடயம் அனைவருக்கும் தெரிந்த விடயமா கும்–என்றார். (த)

# சு.கவை உடைப்பதற்கு சந்திரிகா முயற்சியாம்

கொழும்பு, ஜூன் 17

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவடையச் செய்வதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தீவிரம் காட்டி வருகின்றார். எனவே, சு.கவைப் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டாம் என்று சந்திரிகாவிடம் வேண்டிக்கொள்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவடையச் செய்வதில் சந்திரிகா தீவிரம் காட்டி வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான 100 நாள் உடன்படிக்கை முடிவுக்கு வந்திருக்கலாம். எனினும், மைத்திரி– சந்திரிகா உடன்படிக்கை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் நீடிக்கும் என எதிர் பார்க்கின்றோம்.

சந்திரிகா அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டால் அதன் அடிப்படையில் செயற்பட வேண்டுமே தவிர, அரசியல் விடயங்களில் தலையீடு செய்யக்கூடாது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன எவ்வாறு செயற்பட்டார் என்பதைப் பார்த்து, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நடந்து கொள்ள வேண்டும்–என்றார்.(த)

# சம்பள உயர்வு கண்துடைப்பா?

## தனியார்துறை தொழிற் சங்கம் கேள்வி

கொழும்பு, ஜூன் 17

இவ்வாண்டின் இடைக்கால வரவு –செலவுத் திட்டத்தில் தற்போதைய அரசு தனியார்துறை ஊழியர்களுக்கு உறுதியளித்த 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் மேலும் காலம் தாழ்த்தாமல் அந்த உயர்வை வழங்க அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் உள்நாட்டு தனியார்துறை ஊழியர்களின் தொழிற் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தனியார்துறை ஊழியர்களுக்கு வருடாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென வும், அதற்கான சட்டமூலம் நிறை வேற்றப்படும் எனவும் அரசு கூறியது. எனினும், அந்தச் சட்டமூலம் இதுவரை நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக உள் நாட்டு தனியார்துறை சங்கத் தலைவர் வசந்த சமரசிங்க குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

நாளாந்தம் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுகளுக்கு முகம் கொடுக்க அரசுதுறை ஊழியர்களுக்குப் பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு அச்சாணியாக விளங்கும் தனியார் துறை ஊழியர்கள் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடத்தப்படுகிறார் கள். தனியார்துறை முதலாளிகளைக் காப்பாற்றுவதற்காகவே அரசு குறிப்பிட்ட சட்ட மூலத்தை நிறை வேற்றாமல் இழுத்தடித்து வருகிறதோ என்ற நியாயமான சந்தேகம் எழு கிறது. எனவே, அந்தச் சட்டவரைவை உடனடியாக நிறைவேற்றி தனியார் துறை ஊழியர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென அரசை வலியுறுத்துகிறோம் என வசந்த சமரசிங்க கூறியுள்ளார். (த)

# சாவுத் தண்டனை தொடர்பில் ஜனாதிபதி விசேட அறிவிப்பு

## ஓரிரு தினங்களில் வெளிவரும் என்கிறார் அமைச்சர் ஜோன்

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்துவரும் ஓரிரு தினங்களில் விசேட அறிவிப்பொன்றை வெளியிடுவார் எனப் பொது அமைதிக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சாவுத் தண்டனையை நாட்டில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பின் போது 90 வீதமானவர்கள் அது தேவை எனப் பதிலளித்துள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பில் இந்தத் தண்டனையை நடைமுறைப்படுத்துமாறு பொது மக்கள் தமது கருத்துகளை வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி அறிவிப் பொன்றைச் செய்யவுள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார். (த)

# வாஸுக்குப் பிணை

கொழும்பு, ஜூன் 17

கோடீஸ்வர வர்த்தகர் சியாம் மொஹமட் கொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஏனைய ஐவருக்கும் நேற்று நீதிமன்று நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கியது.

வர்த்தகர் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஏனைய ஐவருக்கும் எதிரான வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான லலித் ஜயசூரிய, குசலா சரோஜினி, மற்றும் அமேந்திர சேனாரத்ன ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற விசாரணைகளை அடுத்து இவர்கள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் கேட்டுக்கொண்ட பிணை மனுவுக்கு அமைவாகவே இந்தப் பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வாஸ் குணவர்த்தன மற்றும் ஏனைய ஐவரும் தலா 5லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும்,10லட்சம் பெறுமதியான சரீரப் பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

இவர்கள் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் இரகசியப் பொலிஸில் சமூகமளிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஏனைய ஐவரும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

# மேல் மாகாண ஆளும் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது

கொழும்பு, ஜூன் 17

மேல் மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இரண்டாக பிளவு பட்ட நிலையில் வெவ்வேறு இடங்களில் செய்தியாளர் சந்திப்புக்களை நேற்று நடத்தியுள்ளனர்.

ஹிருணிகா தலைமையில் ஒரு குழுவினரும், மேல்மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் இன்னொரு குழுவினருமாக ஊடக சந்திப்புக்களை ஏற்பாடு செய்து ஒருவரை ஒருவர் விமர்சித்திருந்தனர்.

பத்தரமுல்ல றோயல் பிளாசாவில் ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, மாகாண சபை உறுப்பினர்களான மல்சா குமாரதுங்க, ரஞ்சித் சோமவன்ச, காமினி திலகசிறி, மஞ்சுள புத்ததாச, இசுர தேசப்பிரிய, உபாலி குணரட்ன, ஆகியோர் உடன் இருந்துள்ளனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மற்றும் மேல் மாகாணசபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்குச் சார்பாக செயற்படுவோரையும் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கியிருந்தனர்.

நேற்று மாலை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையிலான மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் ஊடக சந்திப்பு ஒன்றை முதலமைச்சர் காரியாலயத்தில் நடத்தியுள்ளனர்.

இந்த சந்திப்பின் போது மாகாண சபை உறுப்பினர்களான உதய கம்மன்பில, உபாலி கொடிகார, சுனில் ஜயமி, ரொஜர் செனவிரட்ன, பியால் நிசாந்த, ஜகத் அங்ககே, சமன்மலி கலங்சூரிய உள்ளிட்டோர் உடன் இருந்துள்ளனர்.

இவர்கள் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி அரசை விமர்சித்தனர். அத்துடன் மேல்மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் தம்மிடமே உள்ளதாகச் சந்திப்பின்போது தெரிவித்தனர். (த)

# சம்பூர் காணிகள் விடுவிப்பு இடைக்காலத் தடை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 17

சம்பூர் காணி விடுவிப்பு தொடர்பான இடைக்காலத் தடை நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு ஜூலை மாதம் 10ஆம் திகதி வரை உயர்நீதிமன்றத்தால் நேற்று முன் தினம் ஒத்திவைக்கப்பட்டது.

சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள காணியொன்றை தனியார் நிறுவனம் ஒன்றின் தொழிற்சாலைக்காக வழங்குவதற்கு கடந்த அரசால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவுக்கே உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

தொழிற்சாலையை அமைக்கவிருந்த சிறிலங்கா கேட்வே இன்டஸ்ட்ரீஸ் தனியார் நிறுவனம் தாக்கல் செய்திருந்த மனுவை ஆராய்ந்தபோதே நீதிமன்றம் கடந்த மாதம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இந்நிலையில், நேற்று முன் தினம் திங்கட்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தபோதும், விசாரணைகளின்றி எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பில் உயர்நீதி மன்றத்திற்கு நேற்று முன் தினம் சமுகமளித்திருந்ததுடன், சிறிலங்கா கேட்வே இன்டஸ்ட்ரீஸ் தனியார் நிறுவனம் சார்பில் அதன் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு கடந்த 2012ஆம் ஆண்டு தமக்கு தொழிற்சாலை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியிருந்ததாக அந்த நிறுவனம் தமது மனுவில் கூறியுள்ளது.

சம்பூர் மக்கள் சுமார் 9 ஆண்டுகளாகச் சொந்தக் காணிகளில் குடியேறமுடியாமல் இருக்கின்றனர். தொழிற்சாலை அமைக்கும் பணிகளுக்காக சுமார் 4 பில்லிய ரூபாவுக்கும் அதிக பணம் செ விடப்பட்டுள்ளதாகவும், ஜனாதிட மைத்திரிபால சிறிசேனவின் புதி வர்த்தமானி அறிவித்தல் கார மாக தமக்கு பெருநட்டம் ஏற்பட அபாயம் உள்ளதாகவும் சிறிலங் கேட்வே இன்டஸ்ட்ரீஸ் நிறுவன கூறியுள்ளது.

ஜனாதிபதி, சட்டத்துக்கு முரண குறித்த வர்த்தமானி அறிவித்தல வெளியிட்டுள்ளதாகவும், அ அறிவித்தலை ரத்துச் செய்யும் உ தரவைப் பிறப்பிக்குமாறும் ம தாரர்கள் தரப்பில் முன்னில யான வழக்குரைஞர்கள் உயர் மன்றத்திடம் கடந்த மாதம் கே யிருந்தனர்.

சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வல துக்குள் உள்ள காணிகளை ம ளின் மீள்குடியேற்றத்திற்காக மீ கையளிப்பதாக அரசு அண் யில் அறிவித்திருந்தமை குறிப் பி தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட சதுரங்கத் தொடர்

## பருத்தித்துறை மெதடிஸ், அருணோதய, ஹாட்லி, அணிகள் அபாரம்

மாங்குளம் ஜூன் 17

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கத் தொடரில் 15வயதுப் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், 19வயதுப் பிரிவில் அருணோதயக் கல்லூரி அணியும்– 15வயதுப்பிரிவு, 19 வயதுப்பிரிவு என்று இரு பிரிவிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிகளும் கிண்ணங்களைக் கைப்பற்றின.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த இறுதியாட்டங்களில் 15வயதுப்பிரிவு பெண்களுக்கான தொடரில் முதலாம் இடத்தை 27 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், இரண்டாம் 21 புள்ளிகளைப் பெற்று வேம்படி மகளிர் கல்லூரி அணியும், மூன்றாம் இடத்தை 20 புள்ளிகளைப் பெற்று அருணோதயக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

19வயதுப் பிரிவு பெண்களுக்கான தொடரில் முதலாம் இடத்தை 23 புள்ளிகளைப் பெற்று அருணோதய கல்லூரி அணியும், இரண்டாம் 21.5 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், மூன்றாம் இடத்தை வடஇந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

15வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் முதலாம் இடத்தை 27.5 புள்ளிகளைப்பெற்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், இரண்டாம் இடத்தை 23.5 புள்ளிகளைப்பெற்று யாழ். இந்துக் கல்லூரி அணியும், மூன்றாம் இடத்தை 20.5 புள்ளிகளைப்பெற்று நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

19வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் முதலாம் இடத்தை 25 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், இரண்டாம் 21புள்ளிகளைப் பெற்று யாழ் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாம் இடத்தை 20.5 புள்ளிகளைப் பெற்று கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

(ம–422)



ஹாட்லிக் கல்லூரி



அருணோதயக் கல்லூரி



ஹாட்லிக் கல்லூரி



பருத்தித்துறை மெதடிஸத பெண்கள்

# இன்றைய மோதல்கள்

***எவ்.ஏ.கிண்ணத்துக்கான தொடர்***

யாழ்ப்பாணம், ஜூன் 17

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் ஏவ்.ஏ.கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டம் ஒன்று இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் அணியை எதிர்த்து அநுராதபுரம் செலிட் அணி மோதவுள்ளது.

***யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்***

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்களில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:–

*13வயதுப்பிரிவு ஆண்கள்*

13வயதுப்பிரிவின் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மோத வுள்ளது.

*17வயதுப்பிரிவு ஆண்கள்*

17வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மாலை 4.15.மணிக்கு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

***யாழ். மாவட்ட தாச்சித் தொடர்***

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று புதன்கிழமை இரவு 6.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை அணி மோதவுள்ளது. (ம–23)

***அதிபர் தங்கராசா ஞாபகார்த்தக் கிண்ணத் தொடர்***

வித்தியானந்தாக்கல்லூரியின்பழைய மாணவர்களால் நடத்தப்படும் அதிபர் தங்கராசா ஞாபகார்த்த உதைபந்தாட்டத் தொடர் இன்று கல்லூரியின் மைதானத்தில் முதல் ஆரம்பமாகிறது.

இந்தத்தொடரில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு யங்கர்ஸ் அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் அணி மோதவுள்ளது. மாலை 4மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து மாத்தளன் ஒற்றுமை அணி மோதவுள்ளது.(ம–102)

***கொலின்ஸ் வி.க.தொடர்***

கரணவாய் கொலின்ஸ் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று பிற்பகல் 3மணிக்கு மணற்காடு சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் ஸ்ரீ அம்பாள் அணியை எதிர்த்து குறிஞ்சிப்பாடி கமரன் அணி மோதவுள்ளது.

***கலைவாணி வி.க.தொடர்***

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து மைக்கல் அணி மோதவுள்ளது.

மாலை 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தல் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதவுள்ளது. (ம–108)

# துடுப்பாட்டத் தொடரில் யாழ். மாவட்டம் சம்பியன்

கரணவாய், ஜூன் 16

மாகாண மட்ட ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் மன்னார் மாவட்ட அணியை 24 ஓட்டங்களால் வீழ்த்தி நடப்பு வருடத்துக்கான மாகாணச் சம்பியனாகியது யாழ் மாவட்ட அணி.

வட மாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 14.2 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அதிகபட்சமாக ஜெயரூபன் 21 ஓட்டங்களையும் அனுரதன் 21ஓட்டங்களையும் சுகந்தன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு 71 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய மன்னார் மாவட்ட அணி யாழ். மாவட்ட அணியின் பந்து வீச்சுக்களுக்கு முகம் கொடுத்து ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் ஆரம்பம் முதலே ஆட் டம் கண்டது. மன்னாரின் தடுமாற்றம் இறுதிவரை தொடரப்பட முடிவில் 46 ஓட்டங்களுக்குள் சுருண்டு 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக றோய் மட்டும் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் அனுரதன் 3 இலக்குகளையும் அருண், சேந்திரன் மற்றும் ஜெனார்த்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

(108)

# யாழ். மாவட்ட தாச்சித் தொடரில் காளிஅம்பாள், அறிவொளி அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் கைதடி வளர்மதி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி அணி மோதிக்கொண்டது. இந்த ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறி வொளி அணி 4:2என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் அணியை எதிர்த்து உடுவில் கலைஒளி அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளிஅம்பாள் அணி 12:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம–23)

# தேசியத்தில் தமிழ் மாணவர்கள் அசத்தல் ஒரு தங்கம், ஒரு வெள்ளி வடமாகாணத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17

தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான வேகநடைப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் மாணவர்களுக்கு பதக்கங்கள் கிடைத்துள்ளன. 2014 ஆம் ஆண்டு நடைபெறவேண்டிய தேசிய மட்டப்போட்டிகளின் சில போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இதில் 20வயதுப் பிரிவு ஆண்களுக்கான 10ஆயிரம் மீற்றர் வேகநடைப்போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரசிகரன் 57நிமிடம், 17செக்கனில் நடந்து முடித்து தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.


பெண்களுக்கான 5ஆயிரம் மீற்றர் வேகநடைப்போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கோகிலவாணி 29நிமிடம், 16செக்கனில் நடந்து முடித்து வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம–23)


கோகிலவாணி


ரசிகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லரை விரும்பும் குரேஷியா



குரேஷியாவின் ஸ்பிளிட் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற குரேஷியா–இத்தாலி அணிகளுக்கிடையிலான ஐரோப்பிய உதைபந்தாட்டத் தொடரின் தகுதியாட்டத்தில் மைதானத்தில் ஹிட்லருடைய சின்னமான ஸ்வஸ்திகா வரையப்பட்டிருந்தமை பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.
மேற்கத்திய நாடுகளில் இனவெறி தொடர்புடைய ஸ்வஸ்திகா சின்னத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
ஆனால் குறித்த ஆட்டத்தின் முதல் பாதிவரை மைதானத்தில் ஸ்வஸ்திகா சின்னம் வரையப்பட்டு இருந்தது. ஸ்வஸ்திகா சின்னம் வரையப்பட்டிருந்ததா அல்லது மைதானத்தில் இருந்த புற்களை வெட்டி அதுபோன்று வடிவமைத்திருந்தார்களா என்பது தெரியவில்லை. இரண்டாவது பாதியின்போது அதை அழிக்க முயற்சித்தனர். எனினும் அதை முழுமையாக அழிக்க முடியவில்லை. இந்த சம்பவத்துக்காக ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்திடம் குரேஷியா மன்னிப்புக் கேட்டுள்ளது. எனினும் இந்த விவகாரத்தில் குரேஷியாவுக்கு தண்டனை வழங்கப்படலாம் என்று தெரிகிறது.
கடந்த மாதம் நடைபெற்ற நோர்வே –குரேஷியா இடையிலான ஆட்டத்தின்போது குரேஷிய ரசிகர்கள் இனவெறியைத் தூண்டும் வகையில் நடந்து கொண்டனர். அதனால் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இத்தாலி–குரேஷியா இடையிலான ஆட்டத்தைக் காண ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
இதற்கு முன்னர் 2006இல் லிவர்னோவில் இத்தாலி–குரேஷியா இடையிலான நட்பு ரீதியிலான ஆட்டத்தில் மைதானத்தில் இருந்த 200 குரேஷிய ரசிகர்கள் ஸ்வஸ்திகா சின்னத்தைப் போன்ற வடிவில் அமர்ந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



கிறிஸ் கெய்ல்

# நான் எல்லாத்துக்கும் சரிவருவேன்

நான் அனைத்து விதமான ஆட்டங்களிலும் அதிரடி காட்டுவேன் என்று மேற்கிந்திய தீவுகளின் மிரட்டல் மன்னன் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.
ஐ.பி.எல்.தொடர்களில் அதிரடி காட்டிய மேற்கிந்திய தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல், தற்போது இங்கிலாந்தில் நடக்கும் கழகங்களுக்கிடையிலான ரி–20 தொடரிலும் விளாசித் தள்ளுகிறார். இதனால் கெய்ல் ரி–20 ஆட்டங்களுக்கு ஏற்ற வீரர் என்று அழைக்கப்படுகிறார்.
தனது அதிரடி தொடர்பாக கிறிஸ் கெய்ல் தெரிவித்ததாவது:– நான் ரி–20 ஆட்டங்களில் மட்டுமல்ல ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களிலும் அதிரடி காட்டுவேன். டெஸ்ட் ஆட்டங்களில் இரண்டு முச்சதங்கள் அடித்துள்ளேன். 21 ஒருநாள் சதங்களும் அடித்துள்ளேன். அதனால், சகல வகை கிரிக்கெட்டுக்கும் ஏற்ற வீரர் நான்– என்றார். (ம)

# றோயல், வீனஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி

கரணவாய், ஜூன் 17
கரணவாய் கொலின்ஸ் கழகத்தின் உதைப்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் கழகமும் புத்தூர் வீனஸ் கழகமும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.
கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் புத்தூர் வீனஸ் கழகமும் புதுத் தோட்டம் சுடர் ஒளி கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பித்து 9ஆவது நிமிடத்தில் வீனஸ் கழக வீரர் ஒருவர் தமது பிரதேசத்துக்குள் வைத்து விதிகளுக்கு முரணாக விளையாடியமையால் எதிரணியினருக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. வாய்ப்பை சரிவரப்பயன்படுத்திக் கொண்ட சுடர் ஒளி தனது முதல்கோலைப் பதிவு செய்தார். மேலதிக் கோல்கள் எது



வும் பதியப் படாமல் ஆட்டத்தின் முதல்பாதி முடிவடைந்தது.
ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் கோலொன்று பதிவாதற்கு இரு அணி வீரர்களும் படாதபாடு பட்டனர். ஆட்டம்நிறைவடைய 2 நிமிடங்கள் இருக்கும் போது வீனஸ் வீரர் கௌதம் அசத்தலான கோலொன்றை விளாசி எதிரணிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தார். இதனால் 1:1 என்று சமநிலையில் முடிவுக்கு வந்தது ஆட்டம். எனவே வெற்றி தோல்வியென்ற முடிவுகள் தண்டனை உதை யிடம் செல்ல 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த் சுற்றுக்கு முன்னேறியது புத்தூர் வீனஸ் கழகம்.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் கழகமும் சென். மைக்கல் கழகமும் மோதிக் கொண்டன. ஆட்டத்தில் முழு நேரத்திலும் ஆதிக்கம் செலுத்திய றோயல் அணி 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியது. (ம–108)



## உயிருக்கு பாதிப்பில்லை

இங்கிலாந்தின் கழகங்களுக்கிடையிலான ரி–20 தொடரில் நேருக்கு நேர் மோதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவீரர்களி னதும் உயிருக்கு பாதிப்பில்லை என்று குறித்த வைத்தியசாலை அறிவித்துள்ளது.
இங்கிலாந்தின் கழகங்களுக்கு இடையிலான ரி–20 தொடரில் சசக்ஸ் மற்றும் சர்ரே அணிகள் மோதிய ஆட்டத்தில் ரோரி பலன்ஸ் ஹென்றிக்ஸ் இருவரும் பிடிக்க முயன்றபோது நேருக்குநேர் மோதி பலத்த காயமடைந்து உயிருக்கு போராட்டமான நிலையில் வைத்திசாலையில் சேர்க்கப்பட்டனர்.
மைதானத்தில் வைத்து முதலுதவி கொடுக்கப்பட்டதாலும் நிலைமையப் புரிந்துகொண்ட பொலிஸார் அம்புலன்ஸ் மிக விரைவாகப் பயணிக்கும் வகையில் வீதியை ஏற்பாடு செய்த காரணத்தினாலும் இவர்கள் இருவரினதும் உயிர் காப்பாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது பாதுகாப்பான கட்டத்தை அடைந்துள்ள இருவரும் தொடர்ந்தும் வைத்திசாலையில் தீவிர கண்காணிப்பின் கீழேயே வைக்கப்பட்டுள்ளனர். அருகருகில் உள்ள படுக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள இருவரும் ஒருவர் கையை மற்றவர் பிடித்த வாறு புகைப்படத்தை எடுத்து தத்தமது டுவிட்டரில் பதிவிட்டுள்ளனர். (ம)

# சங்காவின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டினார் சிமித்



சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களின் துடுப்பாட்ட தரப்படுத்தலில் பல மாதங்களாக முதலிடத்தில் நீடித்து வந்த சங்காவின் ஆதிக்கத்தைத் தகர்த்து முதலிடம் பிடித்துள்ளார் ஆஸ்திரேலியாவின் சிமித்.
நியூஸிலாந்து – இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர்கள் நிறைவடைந்துள்ள நிலையில் டெஸ்ட் ஆட்டங்களில் வீரர்களின் தரப்படுத்தலை வெளியிட்டுள்ளது சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.
சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல் – சிமித், சங்கக்காரா, வில்லியர்ஸ், அம்லா, மத்தியூஸ், யூனிஸ்கான், ரூட், கேன் வில்லியம்சன், மிஸ்பா உல் ஹக், டேவிட் வோர்னர்.
சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தல் – டேல் ஸ்ரெயின், ஜேம்ஸ் அண்டர்சன், போல்ட், ஹேரிஸ், ஹெரத், ஜோன்சன், பிரோட், பிலாண்டர், மோர்கல், சௌத்தி
சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தல் – ஷகிப் அல் ஹசன், பிலாண்டர், அஸ்வின், ஜோன்சன், பிரோட். (ம)

# கொக்குவில் இந்து, சென்.பற்றிக்ஸ் அபார ஆட்டம்



15வயதுப்பிரிவு



17 வயதுப்பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன், 17
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் 15வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் வெற்றி பெற்றன.

*15வயதுப்பிரிவு ஆண்கள்*

பிற்பகல் 3மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்ற 15வயதுப்பிரிவு ஆண்களுக்கான லீக் ஆட்டமொன்றில் சென்.பற்றிக்ஸ்கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரிஅணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 86:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அபார வெற்றிபெற்றது.

*17 வயதுப்பிரிவு ஆண்கள்*

சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 48:44 புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம–23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**PREMS REST HOUSE**

உயர்தரத்திலான தங்குமிட வசதிகள் நாள், மாத வாடகைக்கு உண்டு. A/C, Non A/C Rooms, ரூறிஸ் (Tourist) ஆக வருபவர்கள், அலுவலர்கள் போன்றோருக்கு உகந்தது.

கே.கே.எஸ். றோட், கொக்குவில், யாழ்ப்பாணம். (Jaffna.) (61029) (10.6.3)

தொடர்பு: 0774735004, 0771256472.



**மயில் அக்கடமி**

(Hair & Beauty)



**அழகுக்கலைப் பயிற்சியகம் புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

Certificate in Basic Beauty Course
Advance Beauty Course
Diploma in Beauty Course

அனைத்து பயிற்சிகளும் செய்முறை விளக்கத்துடன் பயிற்சிகள் வழங்கப்பட்டு பயிற்சிகள் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

புதிய பிரிவுகள்: 19.06.2015 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

மேலதிக விவரங்களுக்கு: அலுவலக நேரத்தில் வருகை தரவும்

இல. 07, தாவடி வீதி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய் (மானிப்பாய் சந்தி அருகில்)



புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**External Degree**

பேராதனை பல்கலைக்கழகம்

20-06-2015 (சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் பேராதனை பல்கலைக்கழக புதிய மாணவர்களுக்கான "அறிமுக வைபவம்" நடைபெறவுள்ளது

பதிவுகளை மேற்கொள்ள சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1.பிறப்பு சான்றிதழ் 2.N.I.C copy
3.G.C.E A/L சான்றிதழ் 4. புகைப்படம்

**aat (srilanka)**

**Foundation,intermediate,final**

**AA1, AA2, AA3**

Qualification:- GCE O/L 6 PASSES
MEDIUM – TAMIL & ENGLISH

Further Details: **JAFFNA COLLEGE**

**UNDERGRADUATE Dept**

464, Hospital Road, Jaffna.
0212223382



**WOT மென்பொருள் நிறுவனம்**

சர்வதேச தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவையாகிய தமிழ்ப்பாவை FM, தமிழ்ப் பாவை TV மற்றும் தமிழ்ப்பாவை WEB நிறுவனத்தினர் ஆகிய நாம் எமது அலுவலகத்தை யாழ். மண்ணில் ஆரம்பித்து இயங்கி வருகின்றோம்.

எமது நிறுவனத்தில் பின்வரும் பணிகளுக்கு குறிப்பிட்ட துறைகளில் தேர்ச்சியுடையோர் வேண்டப்படுகின்றீர்கள்.



- அலுவலக வரவேற்பாளர்.
- நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள்.
- நாடகப்பிரதி எழுத்தாளர்கள்.
- தொடர் நாடக கலைஞர்கள்.
- குறுநாடகக் கலைஞர்கள்.
- நாடக இயக்குநர்கள்.
- செய்தியாசிரியர்கள்.
- ஒளிப்பதிவாளர்கள்.
- ஒப்பனைக்கலைஞர்கள்.
- கலை இயக்குநர்கள்.
- சந்தைப்படுத்தல் முகாமையாளர்.
- சந்தைப்படுத்தல் அதிகாரி.
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்.
- Mobile Application Developer
- Software Developer
- Web Developer
- Graphic Designers

தொடர்புகளுக்கு:

**இல. 44/16, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

Email: info@wot.lk
Tel: 021 221 6433
Mobile: 0772344550,077 2487861

Links:
www.tamilpavai.fm www.tamilpavai.tv
www.tamilpavai.com www.wot.lk


# பிதாமகனாவாரா சங்கா?

## இலங்கை பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் இன்று



கிரிக்கெட் பல தசாப்தகால வரலாற்றைக் கொண்டிருந்தாலும் கிரிக்கெட் உலகம் விறுவிறுப்போடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த சில சாதனைகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். முரளியின் 800 ஆவது இலக்கு, முதல் ஹற்றிக், சச்சினின் நூறாவது சதம்,ஆசியின்ஹற்றிக்உலகக்கிண்ணவேட்டை இவை அவற்றுள்சில.

இந்த வகையில் ஆஸ்திரேலியாவையே நடுங்க வைக்கப்போகும் மற்றொரு சாதனை சங்காவின் கரங்களால் படைக்கப்படுமா? என்று தற்பொழுது வீரர்கள் முதல் ரசிகர்கள் வரையில் எதிர்பார்த்துக்காத்துக் கொண்டிருக்கிறார்கள். அச்சாதனை சங்காவின் 12ஆவது இரட்டைச் சதம்தான். இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகின்ற நிலையில் இன்று சங்கா மற்றுமொரு இரட்டைச்சதம் விளாசும் பட்சத்தில் கிரிக்கெட் வரலாற்றில் அதிக இரட்டைச்சதங்களை விளாசியவராக 11 இரட்டைச்சதங்களுடன் முதலிடத்தில் இருக்கும் கிரிக்கெட்டின் பிதாமகன் பிராட்மனை முந்திச் செல்லலாம். மட்டுமல்லாது கிரிக்கெட்டின் கடவுள் சச்சின், ஆஸியின் தங்க மகன் பொண்டிங் இவர்களால் செய்யமுடியாததை சாத்தியமாக்கிக் காட்டிய பெருமை அடைமொழியே இல்லாத சங்காவை வந்துசேரும். சாதனையுடன் விடைபெறுவாரா சங்கா? ஆட்டம் இன்று ஆரம்பம். (ம)

## மல்யுத்தத்தில் யாழ். மாவட்டம் அசத்தல்

கரணவாய், ஜூன் 17

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட மல்யுத்தப் போட்டியில் யாழ். மாவட்டம் சம்பியனாகியது.

யாழ் மாவட்ட அணிசார்பாகப் பங்குபற்றிய வீரர்களில் அ.விமலதாஸ், ப.செல்வகுலராஜா, கே.றிமீஸ், எம். றொபேட்கெனடி, ரி.தயாளன், ப.ஜெயந்தன், க.நிராஜ், க.அகிலராஜ் ஆகியோர் முதலாமிடங்களையும் க.புனிதராஜ் 2ஆம் இடத்தையும் பெற்றுக் கொள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை வீழ்த்தி நடப்பு வருட மாகாண சம்பியனாகியது யாழ். மாவட்டம். (ம-108)


**FRENCH LANGUAGE CENTRE**
**REGISTERED FRENCH CENTRE.**

**FRENCH CLASSES**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்..
938 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்.

Register now : 0779 789 456 / 021 221 7781

| | | |
|---|---|---|
| ஆரம்பம்: 27.06 சனி 2pm No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்: 29.06 Mon 4pm. No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. | ஆரம்பம்: 24.06 Wed 4pm கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி. |



**தோட்ட மணல் விற்பனைக்குண்டு**

பள்ள நிலங்களைச் சீர் செய்வதற்கும், வீட்டு நில அத்தி பாரங்கள் நிரப்புவதற்கும், உகந்த சிவப்பு மணல் குறைந்த விலையில் எம்மிடம் விற்பனைக் குண்டு. இது டிப்பர் மூலம் (4 டிரக்டர் லோட்) உரிய இடத்தில் எம்மால் வழங்க முடியும்.

தொடர்புகளுக்கு:

077 6491027, 077 9400963



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். French Embassy: www.ambafrance-lk.org

ஆரம்பம் 20.06.15 8.30am உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,



**பொருளியல் கருத்தரங்கு**

**2015 A/L பரீட்சை எதிர்பார்ப்புக்கள்**
10 நாள்கள் நடை பெறும்
**ஆரம்பம் : 22.06.2015 திங்கள் 1.00 P.M**

30 வருடத்திற்கு மேல் ஆசிரிய சேவை விடைத்தாள் மதிப்பீட்டு அனுபவம் வாய்ந்த 35 பொருளியல் நூல்களின் பிரபல பேராசான்

**வளவாளர் : வே.கருணாகரன்**

25 வருடத்திற்கு மேல் ஆசிரிய அனுபவம் வாய்ந்த யாழ், வன்னிப்பிரதேசங்களின் பிரபல பொருளியல் பேராசான்

**வளவாளர் : சி.மகேந்திரன்**

இப் பேராசான்களினால் இணைந்து நடத்தப்படும் மாபெரும் பொருளியல் கருத்தரங்கு.

* மல்ரி மீடியா படக்காட்சிகள் மூலமான விளக்கங்கள்.
* கைபேடுகளும் வழங்கப்படும்.

பேராசான் வே.கருணாகரன் ஆசிரியரின் நூல்கள் விற்பனைக்குண்டு

* மாணவர்கள் உங்கள் பதிவுகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
* முற்பதிவு செய்வோருக்கு மட்டுமே கைபேடுகள் வழங்கப்படும்.

**பொருளியல் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



**Maths Gr 6-O/L GROUP CLASSES**

(மெல்ல கற்போருக்கான விசேட வகுப்புகள்)

கற்பித்தலில் 27 வருட கால அனுபவம் கொண்ட யாழ். நகரின் முன்னைநாள் முன்னணி ஆசிரியர் மீண்டும் யாழ். நகரில்.

திரு. C.K.B. தயாளன்

(0777 492794) (Tamil, English Medium)

O/L repeat Class
Paper Class

இடம்: 85, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(PIZZA கடைக்கு அருகில்)



**Vacancies**

**English Instructor**

A reputed English College in Jaffna ,needs female assistants to assist senior lecturer in teaching activities Ideal candidate should be a female under 25 years, have good interpersonal skills ,personality, obtained A for English in O/L or educated in English medium . and able to converse in English.

Call : 0767302881


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

உதயன்

17 ஜூன் 2015 புதன்கிழமை


இன்பமும், துன்பமும்
எவனிடம் ஏற்கனவே
அபரிமிதமாக
இருக்கின்றனவோ
அவனையே நாடிச்
செல்லுகின்றன.

— ராச் போகால்டு



# மனிதம் தொலைத்த மனிதர்கள்

■ ராஜராஜன்

மனிதர்களுக்கென தனியான சில பண்புகள் உள்ளன. மிருகங்களிடமிருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுபவை இந்தப் பண்புகள்தான். ஆனால் இன்றைய மனிதர்களில் அனேகம் பேர் இவற்றை இழந்து நிற்கின்றனர்.

புங்குடுதீவு மாணவி படுகொலை தொடர்பான சம்பவத்தில் ஈடுபட்டவர்களை மனிதப் பிறவிகள் என்று கூறமுடியுமா? மிருகங்களிடம் காணப்படுகின்ற இரக்க உணர்வு கூடச் சிறிதும் இல்லாத இவர்கள் மனித சமுதாயத்தில் வாழ்வதற்குத் தகுதியற்றவர்கள்.

> அயல் வீட்டான் பசியால் வாடித் துடிதுடித்துக் கொண்டிருக்க நாம் அறுசுவை உணவை உண்டுகளிப்பது எந்தவிதத்திலும் நியாயமான செயலாகத் தோன்றவில்லை?

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் வாள் வெட்டுக்கலாசாரம் தற்போது உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. அந்தக் காலத்தில் மன்னர்கள் வாள் கொண்டு போரிடுவார்கள். எதிரிகளை வீழ்த்துவார்கள். இன்று கடைகெட்டவர்களின் கரங்களில் இந்த வாள்கள் வீற்றிருந்து அப்பாவிகளையும் வெட்டிச் சரிக்கின்றன. காலையில் எழுந்து பத்திரிகைகளைப்புரட்டினால்வாளேந்திய சூரர்களின் அட்டகாசம் தொடர்பான செய்திகள் ஏதோவொரு பக்கத்தை அலங்கரிப்பதைப் படிக்க முடிகின்றது.

குடாநாட்டில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருமாத கால அவகாசத்தை யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி பொலிஸாருக்கு வழங்கும் அளவுக்கு இங்கு குற்றச்செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பண்பாடு, கலாசாரம், சமய விழுமியங்கள், பெண்களை மதிக்கும் பண்பு, விருந்தோம்பல், கல்வி ஆகியவற்றைத் தனது அடையாளமாகக் கொண்டிருந்த யாழ்ப்பாணச் சமூகத்தில் இழிநிலையாளர்கள் பெருகி விட்டமைக்கான காரணத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. எங்கோ ஒரு பெரிய குறைபாடு ஏற்பட்டுள்ளது.

இதை உடனடியாகக் கண்டுபிடித்து சரிசெய்தாக வேண் டும்.

கௌரவமான தோற்றத்துடன், கனவான்களைப் போன்று ஆடை அணிந்து உயர் பதவியில் அமர்ந்துள்ள ஒரு சிலரின் செயல்கள் முகத்தைச் சுளிக்க வைக்கின்றன. சமுதாயத்துக்கு வழிகாட்ட வேண்டிய இவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதை ஒருபோதுமே மன்னிக்க முடியாது. அதிலும் ஆசான் என்ற உயர் ஸ்தானத்தில் பல்கலையும் கற்று புனிதமான இடத்தில் தமது கீழ்த்தரமான செயல்களை அரங்கேற்றும் இவர்கள் மனிதப் பிறவிகளே அல்ல.

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து தாலி கட்டிய மனைவி, அவருடன் நடத்திய இல்லறத்தின் பயனாக விளைந்த நல்முத்துக்களாகிய பிள்ளைகள் இவர்களெல்லோரையும் தூக்கி எறிந்து விட்டு கவர்ச்சியின் மயக்கத்தில் பிறபெண்களை நாடும் ஆண்களை மனிதர்கள் என்று அழைக்கலாமா? கட்டிய மனைவிக்கும், பெற்ற பிள்ளைகளுக்கும் துரோகம் செய்கின்ற இவர்கள் மன்னிக்க முடியாத துரோகிகள் அல்லவா? மாதா, பிதா, குரு, தெய்வம் எனப்படுவோர் முதன்மை நிலையில் வைத்து வணங்குதலுக்குரியவர்கள். அதிலும் குரு எனப்படுவோர் தெய்வத்துக்கும் முன்னால் வைத்து வணங்குதலுக்குரியவர்கள்.

மிகவும் உயர்ந்த சொத்தாகிய கல்விச் செல்வத்தை தன்னகத்தே கொண்டுள்ள இவர்கள் தாம் பெற்ற செல்வத்தைப் பிறருக்கும் வழங்கிப் பெருமை சேர்ப்பவர்கள். இத்தகைய பெருமை வாய்ந்த இவர்களில் சிலரின் தவறான நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் வெளிவந்து அருவருப்பையும், வேதனையையும் ஏற்படுத்தி வருகின்றன. அதிலும் தம்மிடம் கல்வி கற்கின்ற மாணவிகளிடம் சில ஆசான்கள் தவறான அணுகுமுறையில் ஈடுபடுவதை ஒருபோதுமே மன்னிக்க முடியாது.

ஒழுக்கத்தையும், சரியான சமூக விழுமியங்களையும் கற்பிக்க வேண்டிய இவர்கள், தமது நிலை [illegible] இழக்கும் வகையில் நடந்து கொள்வதற்கு எவ்வாறு துணிகின்றனர் என்பதும் புரியவில்லை. இத்தகையவர்கள் இந்தச் சமுதாயத்தில் ஒரு போதுமே தலை நிமிர்ந்து நிற்கமுடியாது.

பிறரின் சொத்துக்களுக்கு ஆசைப்படுவதும் அவற்றை திருட்டின் மூல மாக அபகரிக்க முயல்வதும் இழி குணங் களாகும். தமது சொந்த முயற்சியினால் முன்னேறுவதற்கு சோம்பல்படும் சிலர் பிறரை ஏமாற்றியோ அல்லது அச்சுறுத்தியோ அவர்களது சொத்துக்களை அபகரித்துத் தாம் ஆடம்பரமாக வாழ்வதற்குத் துணிகின்றனர். இத்தகையவர்கள் இந்தச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு சிலரைப் பார்த்து எச்சில் கையாலும் காகத்தை துரத்த விரும்பாத கருமி என்று கூறுகின்றோம். சிக்கனம் மனிதர்களுக்குத் தேவையான ஒன்றுதான். ஆனால் சிக்கனம் வேறு, கருமித்தனம் வேறு என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அயல் வீட்டான் பசியால் வாடித் துடிதுடித்துக் கொண்டிருக்க நாம் அறுசுவை உணவை உண்டுகளிப்பது எந்தவிதத்திலும் நியாயமான செயலாகத் தோன்றவில்லை? நாம் உண்ணும் உணவில் ஒரு சிறிய பகுதியையாவது பசித்திருக்கும் சிலருக்கு வழங்குவதில் கிடைக்கின்ற ஆத்மதிருப்தி எங்குமே கிடைக்காது. ஆகவே கருமித்தனத்தை எமது மனதிலிருந்து முற்றாகவே ஒழிப்போம்.

மனிதர்களாகப் பிறப்பதற்கு நாம் மாதவம் செய்திடல் வேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த உயர்ந்த பிறவியை நாம் பயனுள்ளதாக மாற்றிக் காட்டுவோம். உலகில் உயர்ந்து நிற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவும் சுடும்

செ.மகேஸ்

## சிறுகதைத் தொகுப்பால் முன்னணிக்கு வந்துள்ள பெண் எழுத்தாளர்

### இராஜினிதேவி சிவலிங்கம்



உதயன் வளர்த்தெடுத்த பெண் சிறுகதையெழுத்தாளர் வரிசையில் இராஜினிதேவி சிவலிங்கம் அவர்களின் இடம் சிறப்பானது. 'நிலவும் சுடும்' என்ற நமது சிறுகதைத் தொகுப்பின் மூலம் அவர் தனது எழுத்தாக்கங்களை நூலுருவிற் தந்துள்ளார். இவரது எழுத்தாக்க வலிமையை மதித்து நல்ல சிறுகதைகளை உதயன் பத்திரிகை தனது பக்கங்களில் பிரசுரித்தமையைப் பெருமிதத்தோடு எடுத்துரைக்கும் எழுத்தாளர், வாசிப்பின் மகத்துவத்தைத் தனது முதலாவது தொகுப்பான 'நிலவும் சுடும்' நூலிலே தன்னுரையில் விபரித்துள்ளார்.

சுன்னாகம் நூலகத்தில் இரவல் வாங்கி சிறுகதை நூல்களில் ப்ரந்திருந்த தமிழ் மொழி இலக்கிய இரசனையை அனுபவித்து வாசித்தமையே எழுத்துலகில் தாம் காலடியெடுத்துவைக்கக் காரணமானது என்பதைச் சொல்லி ஆனந்தமடைகின்றார். 'நிலவும் சுடும்' என்ற அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பிலே பன்னிரண்டு சிறுகதைகள் உள்ளன. போர்க்காலப் பாதிப்புகளையும், சமகால சமூக முரண்பாடுகளையும் கதைகள் கற்பனைவழி காட்சிப்படுத்துகின்றன.

இப்படித்தான் சிறுகதை எழுத வேண்டும் என்று சொல்லுவோர் மத்தியிலே எப்படியும் கதை எழுதலாம். இலக்கிய இரசனை விரிந்ததும், கற்பனை வளம் செறிந்ததுமாக அந்தக் கதை அமைந்திருத்தல் வேண்டும்




என்று கூறுவோரும் யதார்த்தமாக வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளில் ஒருவன் வாழும் சூழலில் நிகழும் – நிகழ்த்தும் சிறியதோர் சம்பவமும் சிறுகதைகளாகும் என்போரும் உள்ளனர்.

இந்த நிலையில் மானிடநேயம் மனித ஆளுமையின் மேன்மை என்பவை பற்றி விரியும் வாழ்வில் நிகழ்பவை, நிகழ்த்துபவை குறித்து ஆழ்ந்து சிந்தித்து ஒரேவகையான உத்தியைக் கைக்கொண்டு இவரது கதைகள் எழுதப்பட்டுள்ளன. சிறுகதை மூலம் சொல்ல வந்த கருத்தும், கதையை நகர்த்திச் செல்லும் மொழிநடையும் அவரது எண்ணங்களை வெளிப்படுத்தப் போதுமாதென எண்ணியவாறு முன்னேற முயன்றுள்ளார். வாழ்வியல் யதார்த்தங்களின் வெற்றிதோல்விகளை மனதைத் தொடும் விதம் உணர்த்தி வாசிப்பவரின் சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் உத்தி மாற்றங்கள் மேலும் விரிவடையின் புதிய நல்ல சிறுகதைகளை இவர் படைத்தொளிர்வார் என நம்பலாம்.

புதுமைப்பித்தன் கையாண்ட சில கதைக்கருக்களை இராஜினிதேவியும் கையாள வேண்டுமென்பதல்ல எனது வாதம். நவீன மனிதனின் பலத்தையும் பலவீனத்தையும் புரிந்து கொண்டு, அமைப்பு ரீதியான அதிகார மையங்களால் அவன் பல்வேறு நெருக்குதல்களுக்கும் அழுத்தங்களுக்கும் உட்பட்டுக் கந்தற் சேலையாகி விட்டான் என்பதை அறிந்து கொண்டு தரிசன வீச்சுடன் அத்தகைய மனிதர்களில் ஒருவரையேனும் தனது கதைகளில் சிறைப்பிடிக்க இராஜினி எத்தனித்திருக்கலாம். எனது இந்த ஆதங்கம் நியாயமானதாகவே எனக்குப் படுகிறது. என்னுரைக்கு பிரபல சிறுகதை எழுத்தாளர் க.சட்டநாதன் அவர்களின் கருத்தை அணிந்துரையிலிருந்து மீண்டும் நினைவிலிருத்துவது நலமானதென எண்ணுகிறேன்.

நிலவும் சுடும் சிறுகதைத் தொகுப்பை முழுவதுமாக வாசிக்கத் தூண்டும் சம்பவக் கோவைகள், கதைகளின் பிணைப்பு, வாசகனை முடிவு வரை வாசிக்கவே வைக்கிறது. மேலும் எழுதும் துலங்கலால் நல்ல சிறுகதை கள் அவரிடமிருந்து வரவேண் டும் எனஎதிர்பார்க்கின்றோம்

மாணவர்களின் எழுத்தாற்றலை வளப்படுத்தும் பணியில் ஆசிரியராக இருக்கும் இராஜினிதேவி சிவலிங்கம் அவர்கள் மேலும் பலகதைகளுடன் அடுத்தும் ஒரு கதைத் தொகுதியை வெளியிட முயல்வார் என நம்புகிறோம்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் எழுத்தாளர், தமது மாணவர்கள் எழுத்துலகில் பிரகாசிக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்களை வாசிப்பிலும் எழுதுதலிலும் ஈடுபடுத்துவதோடு தமிழ்த்தின எழுத்தாக்கத் திறனாய்வுகளில் அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு செயலாற்றுகின்றார். அவரது எழுத்தாற்றல் மேலும் வளம்பெறவும் அவரது இலக்கிய முயற்சிகள் ஈழத்து இலக்கிய உலகில் ஒளிரவும் வாழ்த்துகிறோம்.

---

ஆரணி
மானிப்பாய்

# இயல், இசை, நாடக விழா

## 2015 ஒரு பார்வை

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி இரண்டாவது முறையாக நடத்திய இயல், இசை, நாடக விழா அண்மையில் (கடந்த ஏப்ரல் மாதம் 30 முதல் மே மாதம் 5 வரை) கல்லூரியின் கலையரங்கத்தில் சிறப்பாக நடந்தேறியது.

யாழ்ப்பாணத்துக் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருமுகமாக இந்த விழா நடைபெற்றது. இந்த விழாவை ஒழுங்கமைத்த பெருமை திரு. திருமதி இராதாகிருஷ்ணன் குடும்பத்தாரையே சாரும். கடந்த வருடம் மூன்று நாள்கள் நடைபெற்ற இந்த விழா இவர்களது அயராத முயற்சியாலும், பேராவலாலும் இந்த முறை ஐந்து நாள்கள் நடைபெற்றமை யாழ். மண்ணைப் பெருமைக்குரியதாக்குகிறது.

ஐந்து நாள்களிலும் ஐவர் தலைமை தாங்கி நிகழ்வை நடத்தியவிதம் மெச் சத்தக்கது. பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டவர்களும் இந்த விழாவை ஏற்று சிறப்பித்து கருத் துக்கள் வழங்கியமை சிறப்பானது. தினமும் மங்கல இசையை வழங்கிய பிரபல கலைஞர்களுக்கு என்றுமே நாம் தலை வணங்க வேண்டும். அத்தோடு வளர்ந்து வரும்கலை உள்ளங்களை அழைத்து தேவாரம் பண்ணுடன் இசைக்கப்பட்டமை பாராட்டத்தக்கது. ஆசியுரை, வாழ்த்துரையை வழங்குவதற்கு வருகை தந்திருந்த மத குருமார்கள், பெரியோர்கள் என்றுமே மெச்சத் தக்கவர்கள் என்ற வகையில் தத் தமது உரையை ஆற்றியிருந்தனர்.

தினமும் இசை, இயல், நாடக விருந்துகள் கண்ணுக்கு குளிர்ச்சியாக அமைந்ததோடு மனதில் பூரிப்பை ஏற்படுத்தின என்றால் [illegible]காது. அதுமட்டுமல்ல[illegible] பற்றி வழிநடத்திய கலைஞர்களுக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர் கௌரவம் வழங்கியமை அவர்களது தன்னலமற்ற சேவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

இவற்றிலும் சிறப்பாக அனுசரணையாளர்களுக்கு என்றுமே கலைஞர்களாகிய நாம் கடமையுணர்வுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்த விழாவில் இரண்டு நாள்கள் கலந்து கொள்ள எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இரண்டாம் நாள் அரங்கில் ஹம்சத்வனி அவர்களு[illegible] இருப்பினும் வழமைபோன்று பார்வையாளர்கள், கலை ஆர்வலர்களது வருகை வீழ்ச்சியடைந்திருந் தமை மனம் வருந்தக்கூடிய ஒரு விடயம். அதற்கு அடுத்த நிகழ்வாக பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவிகள் வழங்கிய நாட்டியாஞ் சலி சிறப்பாக அமைந்தது. இந்த இரண்டு நிகழ்வுகளிலும் பங்குபற்ற மட்டுமே சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு வருத்தமடைகிறேன்.

இறுதிநாள் நிகழ்வுகளை ஆரம்பித்திலிருந்து இறுதிவரை ரசிக்கக் கிடைத்தமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. எனது மனதைக் கொள்ளை கொண்ட நிகழ்வு களாக, நாச்சிமார் கோயிலடி இசைக் குழுவினர் வழங்கிய மங்கலஇசை செவிக்கு இன்பத்தை அளித்தது. வாத்திய விருந்து நிகழ்வை ஒழுங் கமைத்து சிறப்பாக நடத்திய பெருமை வயலின்வித்துவான் பத்மநாதன் குழுவினரையே சாரும். அடுத்த நிகழ் வாக அரங்கத்தையே அதிரவைத்த யாழ். இந்து மாணவர்களின் வில் லிசை அவர்களது திறமையையும், பெருமையையும் வெளிக்காட்டி யது. நர்த்தன ஷேந்திரா வழங்கிய அக்கினி உதயம் சிறப்பாக அமைந் தது. இறுதியாக எனது மனதை கொள்ளை கொண்ட சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் சொல்லிடங்காத சிறப்பானது.

சிறப்பான அறிவிப்பையும், காத்திரமான கருத்துக்களையும் வழங்கிய சர்வேஸ்வரா போற்றத்தக்கவர். ஆசியுரை வழங்கிய சபா.வாசுதேவக்குருக்களின் வேண்டுதல்கள் பற்பல. அவற்றைச் செவிசாய்க்க எம் சமுதாயம் முன்வரவேண்டும்.


குறிப்பாக நாம் அரங்கில் நிகழ்வை வெளிப்படுத்தும் போது ஆர்வலர்கள், பார்வையாளர்கள் பெருமளவில் சமூகமளிக்க வேண்டுமென விரும்புகிறோம். ஆனால், எமது எதிர்பார்ப்புக்கு ஏற்ற விதத்தில் பார்வையாளர்கள், ரசிகர்கள் நிகழ்வில் கலந்து கொள்ளாதமை வருத்தத்துக்கு உரியதொன்றே என அவர் தெரிவித்திருந்தார்.

(E பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# ஐயோ மெத்தக் கடினம்



இசையரசு, எம்.எம். தண்டபாணி தேசிகரின் வெண்கலக் குரலில் ஐயோ மெத்தக் கடினம் என்ற பாடலை அடிக்கடி, திரைகடலாடி வரும் தமிழ் நாத ஒலிபரப்பில் சுவைக்கும் எனக்கு, இதை எங்கு கேட்டாலும், யார் பாடினாலும் அலாதியான விருப்பம். அப்படியான சொல்வளம், பொருள் நயம், இராகவார்ப்பு, இராக பாவம் அருமை. அற்புதம். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னதாகவே கொடிகட்டிப் பறந்த பாடல் இது. என்ன செய்வது? தற்போதைய உலகம் இந்தப் பாடலைக் கேட்டிருக் கவே வாய்ப்பில்லை. கிடைத்தாலும் பொறுமையாகக் கேட்டு இரசிப் பதற்கு மெத்தக் கடினம் பாருங்கோ! இப்படியான பாடல்கள் பலருக்குச் சகிக்குதில்லை. ஏன் என்றால் வேகமான உலக பந்தத்தில் ஓய்வுக்குரிய நாள் என்று ஒரு கிழமையில் ஒரு நாளும் கிடைப்பதில்லை. அப்பா, அம்மா, பிள்ளைகள் எல்லோருமே வீட்டுக்கு வெளியிலேயே காலத்தைக் கழிக்கக் கூடியதாக முக்கியமாகக் கல்வி, வைத்தியம், தேவைப்பாடுகள், சாப்பாடுகள், பொழுதுபோக்குகள் அமைந்துவிட் டன. அடுக்களைக்கு வேலைகள் குறைந்தே விட்டன.

மகாவலி கங்கையை யாழ்ப்பாணம் கொண்டு வருவோம் என்ற சிந்தனை மெத்தச் சரியாகவே இருக்கிறது. பாருங்கள், எத்தனையெத்தனை கங்கைகள் தினமும் குடிதண்ணீராகப் போத்தல்களிலும், கொள்கலன்களிலும் பெரிய பெரிய வாகனங்களில் கொண்டுவரப்படுகின்றன.

கங்கைகளை நிலத்தினூடாகத் தான் கொண்டு வரவேண்டுமென்றில்லை. இந்த வேகத்தில் எமது வாழ்க்கை எங்கே போய் முடியப்போகின்றது என்று அந்தப் பரம்பொருளுக்குத் தான் தெரியும்? இந்தப் பின்னணியில் தனித்தனி அழைப்புக்கள் வீட்டுக்கு வீடு கொண்டு சென்று கொடுத்தாலே குடும்பமாக வரமுடியும் என்ற தோரணை நிலவுகின்ற எமது பாரம்பரியத்தில், பொதுவான ஓர் அறிவித்தலோடு ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்கு ஆர்வலர்கள் வருவதென்பது, ஐயோ மெத்தக்கடினம்!

திருமண வீட்டுக்குத் தனித்தனி வீட்டுக்கு வீடு அழைப்பிதழ். பூப்புனித நீராட்டு விழாவுக்கு தனித்தனி அழைப்பிதழ். அரங்கேற்றம்! இது கட்டாயம் வரவேண்டுமென்ற அழைப்பிதழ், புத்தக வெளியீடு! இதற்கும் தனித்தனி அழைப்பிதழ், அத்திவாரம் போட ஓர் அழைப்பிதழ். விடுவோமா? திறப்பு விழாவுக்கு தனித்தனி அழைப்பிதழ். இடையில் ஒரு பிறந்தநாள் அழைப்பிதழ். இன்னுமொரு சிறப்பான ஒரு கைங்கரியம் என்னவென்றால், சிறப்புப் பிரதி வாங்குதல்! சிறப்புப் பிரதி வாங்குவோருக்குத் தொலைபேசியிலேதான் அழைப்பு வரும். எப்படி?

ஹலோ! வணக்கம் ஐயா!

சேர் எப்படிச் சுகமாக இருக்கிறியளா?

யார் தம்பி நீங்கள் கதைக்கிறது?

நான்தான் கவிஞர் குஞ்சிதபாதம். குஞ்சி என்ற புனைபெயரில் எழுதுவது நான்தான்.

கனகாலத்துக்குப் பிறகு உன்ரை குரல் கேட்கச் சந்தோஷமாக இருக்கப்பா.சொல்லு என்ன விஷயம். ஆசிச் செய்தி வேணுமே?

இல்லை இல்லை! ஆசிச் செய்திக்கு ஆயிரம் பேர் இருக்கினம். நான் ஒரு கவிதைப்புத்தகம் வெளியிடப் போறன். உங்களையும் சிறப்புப் பிரதி வாங்க போட்டிருக்கிறன் சேர்.

தம்பி புத்தகம் என்ன விலை?

ஆயிரம் ரூபாய் சேர்!

தம்பி நீ கெட்டிக்காரன். அடுத்த வருஷமும் ஏதாவது ஒரு புத்தகத்தை வெளியிடப்பா. ஆனால், முதல் பிரதி வாங்க மட்டும் போட்டிடாதை.

சேர்! ஆசிக்குக் கூப்பிட்டால் நாங்கள் உங்களுக்குப் புத்தகம் தர வேண்டும். அதனாலை ஆசியுரை, வாழ்த்துரை என்று யாரையும் போடவில்லை.

தம்பி! மங்கல விளக்கேற்றலுக்குப் போடாதையேன்?

சேர்! 16 பேரைப்போட்டிருக்கிறன். அந்தப் 16 பேரையும் புத்தகம் வாங்கவும் போட்டிருக்கிறன். இதுவும் ஒரு கௌரவம் தானே!

தம்பி என்னட்டை படிச்ச குற்றத்துக்காக ஏதோ கௌரவம் செய்யிறாய் போலகிடக்கு. சரி சரி! சந்தோஷம் வாழ்த்துக்கள்.

ஐயோ மெத்தக் கடினம்

எங்களின்ரை சுகநலத்திலை ஏதோ அக்கறை என்ற மாதிரி மிச்சம் நல்ல பிள்ளைகளாக எங்களையோ விட்டபாடில்லை. நாங்கள் விட்டாலும் அவர்களோ இப்படியான பண விடயத்தில் எங்களை விட்ட பாடில்லை. கல்வியின் இலக்கும் இதுவாகிப்போனதோ! ஐயே(ா) மெத்தக் கடினம். ஒரு மனுசனைத் தேவையென்றால், நேரடியாக வந்து கதைக்க வேணும் பாருங்கோ. அவருடைய சம்மதம் கேட்கவேணும் ஹலோ விலை விளாசித் தள்ளக் கூடாது. புலுடாக் காரரும், டூஸ்காரரும், சோடாக்காஸ் (GAS) காரரும் பூமியிலை விளைஞ்சு இருக்கினம்! என்னத்தைச் சொல்ல? இறைவா! சரி ஒரு பொதுப்பணி தொடர்பான விழாவுக்கு அழைப்பு வருகிறதென்றால், அந்த விழாவுக்குப் போகிற நாங்கள் ஏதாவது பொருளோ அல்லது பணமோ கொடுத்து அந்தப் பணி சிறக்க வாழ்த்திவிட்டு வருவது தான் மனிதப்பண்பு. நாம் என்ன செய்கிறோமென்றால் நேரத்தோடு போய் தேநீர், வடை, சோறு, கறி, பாயாசம், ஐஸ்கிறீம் வரை ஒரு பிடிச்சு என்னத்துக்குப்போனம் எண்ட சங்கதியையும் மறந்து பாவங்களைச் சுமந்து கொண்டல்லவா வருகின்றோம்? வங்கிக் கணக்கும் போட்ட படியால் பணம் தேவை என்று தானே அர்த்தம் இது தெரிந்தும் நாம் இலவசமாய்ப் போய், இலவசமாய் சாப்பிட்டு, இலவசமாய் வாழ்த் திப் போட்டு இலவசமாய் நித்திரை கொள்ள எப்படித்தான் மனம் வரும் பாருங்கோ? குறை நினைக்காதையுங்கோ! பொதுப் பணி, தர்மகாரியம் என்று யாராவது அழைப்பு விடுத்த சந்தர்ப்பம் உங்களுக்கும் இருந்திருக்கும்! குறைந்தது ஆயிரம் ரூபாவாவது கொடுத்திருக்கிறீர்களா? பத்துத் தடவை போயிருந்தால் பொதுப் பணிக்குப் பத்தாயிரமாவது கொடுத்திருந்தால், அது சிறப்புத்தான். அதுதான் பெரிய மனுசருக்கு அழகும் பாருங்கோ. நான் கிட்டத்தட்ட இதுவரை ஆயிரம் வாழ்த்துக்களை மடலாக வழங்கியிருக்கிறேன். எந்தவொரு சன் மானமும் இல்லாமல் பாடியிருக்கின்றேன். இத்தனைக்கும் எவரிடமிருந்தும் பலனை யான் எதிர் பார்த்தது கிடையாது. கிராமிய மட்டங்களில் இருந்து தேசியமட்டம் வரை பலபோட்டிகளுக்கு நடுவராகப் பணியாற்றியிருக்கின்றேன். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. அது என்ன? இலவசம் என்றாலும் பாத்திரமறிந்துதான் செய்ய வேண்டும். இல்லாவிடின் எங்களுடைய பாத்திரம், மெத்தக்கடினமாகப் போய்விடும்.

ஒரு சம்பவம்; கூப்பிடு தூரத்தில் எனது நண்பருடைய வீடு. எனது தாயார் இறந்த செய்தி அந்த ஊர் முழுக்கத் தெரியும். இது எனது நண்பருக்கும், நண்பரின் மனைவிக்கும் தெரியும். ஆனால் தெரியாதது போல் நடந்துகொண்டார்கள். காரணம் இரண்டு பேரும் பெரிய படிப்பாளிகள். நோகாமல் வாழ்பவர்கள். இன்றுவரை அடுக்களைப்பக்கமே போகாதவர்கள். இல்லற தர்மம் பிசகியவர்கள். மேசையில் எல்லாம் இருக்கும். அவரவர் போட்டுச் சாப்பிட வேண்டியதுதான். இதுவும் ஒருவகையில் நல்லதுதான். விவாகரத்துப் பெற்ற கௌரவமான குடும்பம் என்றும் சொல்லலாம். இருவரும் ஒருமித்துப் பயணித்துப்போன சம்பவம் இதுவரை இல்லை. விடயம் என்னவென்றால், இருவருமே எனது தாயாரின் [illegible] அந்தியேட்டி [illegible] இருவரையும் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் விதிவழி வந்துவிட்டது. அப்போது அவர்கள் கேட்டார்கள் உங்கள் வீட்டிலே என்ன நடந்தது? நான் சொன்னேன் தாயார் இறந்துவிட்டார் அதுதான் என்றேன். அதுதான் உங்களுக்கு அந்தியேட்டி அழைப்பு என்றேன். அசடு வழிந்தது. அந்தியேட்டிக்கு வரவேயில்லை. இவைபோன்று நாலைந்து குடும்பம் ஊருக்குள் இருந்தால் கிராமங்கள் என்னவாகும்? ஐயோ மெத்தக் கடினம்! இவர்களைப்போன்று இல்லறத்தில் வாழும் பிரம்மச்சாரிகள் ஏராளம். இவ்வாறான ஏட்டுச்சுரக்காய்களுக்கு மத்தியில் வாழ்வது என்பது மெத்தக் கடினம்.



**தண்ட பாணி தேசிகரின் வெண்கலக் குரலில் ஐயோ மெத்தக் கடினம் என்ற பாடலை அடிக்கடி, திரைகடலாடி வரும் தமிழ்நாத ஒலிபரப்பில் சுவைக்கும் எனக்கு, இதை எங்கு கேட்டாலும், யார் பாடினாலும் அலாதியான விருப்பம். அப்படியான சொல் வளம், பொருள் நயம், இராக வார்ப்பு, இராக பாவம் அருமை. அற்புதம்.**

ஒருவர் இறந்து போனால், பிரேதம் (Body) 'பொடி' என்று பெயர் வைத்து' விடுவோம். இறந்தால் சுடலைதான் வீடு. பிறகென்ன சாம்பல்தான். இறக்க முதல் ஒரு மனிதனைப் பார்த்துப் பேசிப் பசியாறிவிட வேண்டும். இறந்த பின்னர் தான் வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள் ஓடி வருவார்கள். அவர்கள் வரும் வரைக்கும், பிரேதத்தை பதப்படுத்தி வைப்பார்கள். ஒரு நாளல்ல ஒரு கிழமை. சாகமுந்தியும் அந்த மனு சன்பட்டபாடு அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம் ஓர் உயிர் உடலை விட்டு பிரியாவிடை பெற்ற பின்னர் அது இறைவனுக்கே சொந்தமாகி விடுகிறது. உடல் மண்ணுக்குச் சொந்த மாகிவிடுகிறது. செத்த உடலை இரு பத்து நான்கு மணித்தியாலயங்கள் கழிய முன்னர் மேற்படா மல், ஒன்றில் எரிக்க வேண்டும். இல்லையென்றால் புதைக்க வேண் டும் அதைவிடுத்து உடலை வைத்திருப்போமாயின் அதை வைத்திருப் போருக்கு உடல் தண்டனை கொடுத்தே தீரும். செத்த உடலை வைத்திருந்து கொண்டாடுவதைப் போல பாவமான கொடுஞ்செயல் வேறொன்றுமே இருக்க முடியாது. அல்லாமலும் பிரேதத்தை வைத்துக் கொண்டு ஒரு பத்துப் பேரை அழைத்துப் பேசவைப்பார்கள். பேச்சுக்கென்றே நேரம் ஒதுக்கி பிரேதத்தை வைத்து தங்களைப் பற்றி விலாசம் எழுப்புவார்கள். ஒலி வாங்கியும் இருந்து விட்டால், இறந்தவருக்குக் கொஞ்சம் காது கேட்குமாக இருந்தால், அந்த வாயும் பேசுமாக இருந்தால் என்ன சொல்லும்? "நிப்பாட்டுங்கோடா பேச்சை! எல்லோரும் ஓடுங்கோடா! என்னை ஒரு தருமே சுமந்து கொண்டு போகக் கூடாது! நானே எழும்பி நடந்து சுடலைக்குப் போவனடா. உயிரோடை இருந்து கஷ்டப்பட்டபோது ஒரு தருமே வந்து பார்க்க வில்லை. இப்ப வெடி சுடுறியளோ? சோடா வேறை. எல்லாத்தையும் நிற்பாட்டுங்கோ. எங்கேயடா கொள்ளிச்சட்டி, நானே எனக்குக் கொள்ளி வைக்கப் போறேன். எல்லோரும் வீட்டுக்குப் போய்த் தோயுங்கோ! முப்பத்தொன்றுக்குச் சாப்பாடு உங்களுக்கில்லை. அம்மா, அப்பா இல்லாத பிள்ளையளுக்கு மட்டும். வங்கியிலை இருக்கின்ற காசு, அந்த ஒவ்வொருவருக்கும் ஐம்பதாயிரம் ரூபா போடப் போறன். வந்ததுக்கு நன்றி" என்று இப்படிச் சொல்லும் அந்தப் பிரேதம். எரிந்து முடியும் வரை அந்தப் பிரேதத்துக்கு எல்லாமே தெரியும். செத்த பிறகும் உடம்பை வெட்டிக் குத்தி தைத்து, படாதபாடு படுத்த வேண்டுமா?

ஐயே(ா) மெத்தக் கடினம்! வயோதிபம், நோய், துன்பம், வறுமை, அம்மா, அப்பா, குடும்பம், பிள்ளைகள், அயலவர், பணம், நீர், உணவு, நாகரிகம் எல்லாமே மெத்த மெத்த கடினமாகவே போய்ச்சுது.

நிறைவாக ஒரு பெரிய நிறுவனத்தில் மாதாந்த கலை நிகழ்வு சிறப்பாக நடைபெற்று வருகிறது. வைகாசி மாதம் வழமைபோல மூன்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செல்வி ச.விஜயருக்ஷாயினி, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக இசை விரிவுரையாளர் சி.ஜி.சுந்தரம் தீட்சதர் இருவரினதும் இசைக் கச்சேரியும், தமிழினி ஜோசப்பின் தயாரிப்பில் உருவான நாட்டியாஞ்சலியும் மிகவும் பெறுமதியாக நடைபெற்றன. ஆனால், நிகழ்ச்சி செய்தவர்கள் உட்பட ஐம்பது ஆர்வலர்கள் மட்டுமே கலந்துகொண்டார்கள். வேறோன்றுமில்லை, கலைத் தெய்வம் சரஸ்வதி யாழ்ப்பாணத்தில் வாக்கினிலே இல்லை என்பதனால் இனிமேல் ஐயோ மெத்தக் கடினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் கொட்டடியில் சிறப்பானதோர் புத்தாண்டு விழா

லக்ஸ்மன்

இந்தப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களது மகிழ்ச்சியான வாழ்க்கைக்குக் கைகொடுக்கும் வகையில் சேவைகளை மேற்கொள்ளக் கூடியதாகவே இங்கு எமது தூதரகம் அமைக்கப்பட்டது. இந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு கொட்டடி சனசமூக நிலையம் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதும், கலாசாரப் பண்பாடுகளைப் பேணிக்காப்பதில் கவனம் செலுத்துவதுடன் மக்கள் சேவைக்காகத் தம்மை அர்ப்பணிப் போரது சேவையைப் பாராட்டி அவர்களைக் கௌரவிப்பதும் எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது. உங்கள் சேவையால் உங்கள் கிராமம் எழுச்சி பெறும் என்பது எனது நம்பிக்கை என்ற யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜனின் பாராட்டுரை சன சமூக நிலையத்தின் சேவைக்கு மகுடம் சூட்டுவதுபோல் இருந்தது.

யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும், மலையக கலை,கலாசார சங்கமும் இணைந்து நடத்திய 2015 புத்தாண்டு விழா கடந்த 7 ஆம் திகதி சீனிவாசகம் வீதியில் உள்ள கொட்டடி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும், சனசமூக நிலையத்தினதும் தலைவர் நா.தனேந்திரன் தலைமையுரை நிகழ்த்தும் போது இந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு மட்டு மன்றி ஏனைய பிரதேசங்களினதும் நலனில் அக்கறை கொண்டுள்ள சிறந்த சமூக சேவையாளர்களாகத் தெரிவு செய்து சமூக திலகம் பட்டம் வழங்கி அவர்களைக் கௌரவிப்பதுடன் இரத்தின தீபம் விருது வழங்கியும் பெரியோர்களைக் கௌரவிக்கின்றோம். இது எமது சங்கத்துக்குப் பெருமை சேர்க்கும் விடயம், என பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.



கொட்டடி சனசமூக நிலையம் நீண்டகாலமாக இது போன்ற சேவையாளர்களுக்கான கௌரவங்களையும், விருதுகளையும் வழங்கி இளைஞர்களுக்கு தமது கிராமத்தின் மீது பற்றும் சேவை மனப்பாங்கும் உருவாக வழியமைத்துக் கொடுக்கின்றது என்பது குறித்து அந்தப் பிரதேச மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். ஆண்டு தோறும் இது போன்ற விழாக்களின் ஊடாக எமது இளைஞர்களுக்கு நல்ல சிந்தனைகளைத் தோற்றுவிக்க உதவுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கிராமத்தில் உள்ள ஒரு சிறிய சனசமூக நிலையம் தனது கிராமத்தின் வளர்ச்சியில் சேவை மனப்பாங்கை இளம் தலைமுறையினரிடம் ஏற்படுத்தும் வகையில் சிறப்பான பல அரிய பணிகளை முன்னெடுத்துச் செல்வதும், இங்குள்ள மக்களினதும் சனசமூக நிலையத்தினதும் கிராமத்தின் மீதுள்ள பற்றை எடுத்துக் காட்டுவதாக விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் தி.வேல்நம்பி குறிப்பிட்டார். விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து சமூக திலகம், இரத்தினதீபம் விருதுகள் வழங்கலும் கௌரவங்களும் இடம்பெற்றன.

சமூக திலகம் விருதை பதின்மூன்று பேரும் இரத்தினதீபம் விருதை இருபத்தியொரு பேரும் என 34 சேவையாளர்களுக்கான விருதையும், கௌரவத்தையும் பிரதம, மற்றும் சிறப்பு விருந்தினர்களும் நிலையத்தின் தலைவரும் வழங்கிக் கௌரவித்தனர். இந்தியத்துணைத்தூதுவர் ந.நடராஜனுக்கு தலைவர் தனேந்திரன் நினைவுக் கேடயம் ஒன்றைப் பரிசளித்தார்.

கணவனை இழந்த சிறு பிள்ளைகளைக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டதுடன், பொது அறிவுப்போட்டி, புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரம், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் மரதன் ஓட்டம், கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. முன்னதாக மங்கல வாத்திய சகிதம் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன், நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. விருந்தினர்கள் மங்கல வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட மையும் பெருந்திரளான மக்கள் நிகழ்வில் கலந்து கொண்டமையும் தனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளதாகவும் உங்களது தேவைகள் குறித்து என்னால் முடிந்த உதவிகளை வழங்குவேன் எனவும் இந்தியத் துணைத்தூதுவர் தெரிவித்தார்.



மிருசுவில் தமிழ்த்தாஸன் எழுதிய "மனிதர்கள்" சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில் நூலின் முதற்பிரதியை கிருபா லேணேர்ஸ் பணிப்பாளர் அன்பரசன் வெளியிட, சாவகச்சேரி அபிஷா ரெக்ஸ் உரிமையாளர் இ.கோகுலன் பெற்றுக் கொள்கின்றார். அருகில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் அ.கயிலாய பிள்ளை, நூலாசிரியர் தமிழ்த் தாசன் ஆகியோர் காணப்படுகின்றனர். (9)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

● ராஜராஜன்

நம்பிக்கைதான் வாழ்க்கை. நாம் வாழ்கின்ற பூமிகூட ஏதோவொரு நம்பிக்கையில்தான் அந்தரத்தில் சுழன்று கொண்டிருக்கின்றது. பூமி தவறி விழுந்து விட்டால் எமது கதி என்னாகும் என எம்மில் யாராவது நினைத்துப் பார்க் கின்றோமா? அது வீழ்ந்துவிடாது என்ற நம்பிக்கைதான் இதற்குக் காரணம்.

கற்சிலையென்றாலும் கற்பனை என்றா லும் கந்தனே உனை மறவேன்! என்று அமரர் டி.எம். சௌந்தரராஜன் பாடிய பாடல் வரிகள் இன்றும் காதுகளில் தேனாக ஒலிக்கின்றன. இறைவன் இருக்கின்றாரோ இல்லையோ அவர் மீது மக்கள் வைத் துள்ள நம்பிக்கை மட்டும் குறையவில்லை. எமது துயரங்களையெல்லாம் இறை வனிடத்தில்தான் நாம் முறையிடுகின் றோம். இறைவன் எல்லாவற்றையும் பார்த் துக் கொள்வார் என்ற நம்பிக்கைதான் இவ்வாறு செய்யத் தூண்டுகின்றது.



எமது குடும்ப வாழ்க்கைகூட நம்பிக்கை யின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட் டுள்ளது. கணவனும், மனைவியும் ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கை கொள்ளும்போதுதான் அந்தக் குடும் பம் சீராக இயங்க முடியும். மாறாக அவ நம்பிக்கை தலைதூக்கி விடுமாயின், அந்தக் குடும்பம் நரகமாகவே மாறிவிடும். சந்தே கமே நம்பிக்கையை இழப்பதற்கான முக்கியமான காரணமாக அமைந்துவிடுகின்றது. இதனால்தான் தன்னைத்தானே நம் பாதது சந்தேகம் என கவியரசு கண்ணதாசன் பாடினார்.

எம்மில் சிலர் எதிலும் நம்பிக்கை வைக்க மாட்டார்கள். எதை யும் சந்தேகம் கண்ணுடனேயே பார்ப்பார்கள். கடவுள் இல்லை என்பார்கள். மனைவியின் நடத்தை சரியில்லை என்று முறை யிடுவார்கள். பிள்ளைகளிடத்தில் கூட இவர்களுக்கு நம்பிக்கை இருக்காது. இறுதியில் தம்மீது நம் பிக்கை கொள்வதற்குக்கூட இவர்கள் தயங்குவார்கள். இத் தகையவர்கள் இந்த உலகில் வாழ்வதற்கே தகுதியில்லாதவர்கள். முதலில் இவர்கள் நம்பிக்கைதான் வாழ்க்கையின் அத்திபாரம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் இவர்களாலும் இந்தச் சமுதாயத்தில் இணைந்து வாழ முடியும்.

தமக்கென தனியான கூடு கட்டத் தெரியாத குயில்கள் காகத்தின் கூட்டில் களவாக முட்டைகளை இட்டுவிட்டு தமது குஞ்சுகள் வெளியே வரும் நாளுக்காகக் காத்திருக்கும். அவற்றின் நம்பிக்கை வீண் போவதில்லை.

வடமராட்சிப் பகுதியில் வசிக்கும் ஒருவர் தமது கைகளில் ஒன்றை இழந்த நிலையிலும் சைக்கிளில் மீன்கள் நிறைந்த பெட்டியைக் கட்டிக்கொண்டு வியாபாரத்தில் ஈடுபடுவதைக் காணமுடியும். இரண்டு கரங்களும் உள்ளவர்களே சில வேலைகளைச் செய்வதற்குச் சிரமப்படுகின்ற நிலையில் இவரது இந்தச் செயற்பாடானது அவரது மனதில் உறுதியாக நிற்கும் என்னா லும் முடியும் என்ற நம்பிக்கையைக் காட்டுகின்றது. இவர் மன தளவில் நம்பிக்கையை இழந்த ஒரு மனிதராக இருந்திருந் தால் மற்றவர்களுக்குப் பாரமாகவே இருந் திருப்பார்.

எமது உடலுக்கும், மனதுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன. உட லின் இயக்கங்கள் யாவுமே மனதின் கட்டளையின் பிரகாரமே இடம்பெறுகின் றன. குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கு என்னால் முடியாது என மனம் மறுத்து விட்டால் உடலும் அதன்படியே நடந்து கொள்கின்றது. என்னாலும் முடியுமென மனம் நினைத்துவிட்டால் உடல் அதனை மேற்கொள்வதற்கான முயற்சியிலாவது ஈடுபடுகின்றது. முதலில் எம்மாலும் முடி யும் என்ற நம்பிக்கையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கையே எமது சகல செயற்பாடுகளுக்கும் எம் மைத் தூண்டி விடுகின்றது. நம்பினார் கெடுவதில்லை என்பது ஆன்றோர் வாக்கு. நம்புவது என்பது நம்பிக்கை கொள் வதைத்தான் குறிப்பிடுகின்றது.

ஆகவே வாழ்க்கையில் நம்பிக்கை கொள் வோம். முயற்சிகளில் வெல்வோம்.

## இயல், இசை, நாடக விழா 2015 ஒரு பார்வை

(B பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறானதுதான் எம்முடைய யாழ். கலைச் சமூகம் என்ப தும். நுண்கலைப் பீடத்தில் பயிலும் மாணவ, மாணவிகள் தமது நேரத்தை ஒதுக்கி இவ்வாறான கலைநிகழ்வுகளுக்குச் சென்று தம்மை வளர்த்து கலையை மெருகூட்டி யாழ். கலைச் சமூ கத்தை வளர்ச்சியுற வைக்க வேண்டும் என்பதும் எனது அபிப் பிராயம்.

தொலைக்காட் சித் தொடர் நாடகங்களில் மூழ்கியிருக்கும் சமுதாயம் அதிலிருந்து வெளிவர வேண்டும் எனவும், இயல், இசை, நாடகம் போன்றவை இறைவனுக்கு செய்யும் அர்ப் பணம் எனவும், இலங்கை வேந்தன் கல்லூரியினர் தமக் கென்று கலைஞர் வலைய மைப்பை உருவாக்க வேண்டுமெனவும் கூறி ஆசியுரை வழங்கினார்.

பிரதம விருந்தினராக நிகழ்வை அலங்கரித்த வடமாகாணக் கல்வித் திணைக்கள அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பா ளர் மதிவாணி விக்னராஜா தமது உரையில், இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு மாணவர்கள் முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் அது பல்கலைக்கழக அனுமதிக்கு உதவும் வகை யில் அமைந்த சந்தர்ப்பங்களும் உண்டு எனக்கூறி வைத்தார்.

இவ்வாறாக பொன்னான ஐந்து நாள்களும் சிறப்பாக நிகழ்வு கள் அமைந்தன. இவற்றை ஒழுங்கமைத்த கலைக்கல்லூரியி னர் என்றுமே நன்றிக்குரியவர்கள். அவர்கள் அழைப்பிதழ் களைக் கூட அனைவரையும் சென்றடையும் வகையில் செய்தமை மெச்சத்தக்கது.

ஏனைய நாள்களின் விமர்சனத்தை எழுத முடியாமை இட்டு மனம் வருந்துவதோடு கடந்தமுறை ஒரு வளர்ந்துவரும் மாணவியாக இந்த விழாவில் நான் பங்குபற்றியமையையிட்டு மகிழ்வடைவதோடு இந்தமுறை சந்தர்ப்பத்தை நழுவ விட் டமையை நினைந்து மனம் வருந்துகிறேன். கலைகளை மென் மேலும் வளர்க்க எமது இளைய சமுதாயத்தவர்கள் முன்வர வேண்டும் என தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 'முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய்' கவிதை நூல் வெளியீடு





கடந்த காலப் போரின் பின்னர் வன்னி நிலப் பரப்பில் கவிஞர்களும், புதுப்புதுக் கவிதைகளும் உருவாகிக்கொண்டிருக்கும் நிலையில் செல்லமுத்து வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்ட விசுவமடு கரீஸ் எழுதிய 'முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய்' கவிதை நூல் வெளியீடானது, வன்னியின் விசுவமடு சுண்டிக்குளம் புல்வெளியில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. வழமையான நூல் வெளியீட்டு அம்சங்களுக்கு அப்பால் புதுமையான அம்சங்களை வெளிப்படுத்தும் நூல் வெளியீடாக இதனைக் கொள்ள முடிந்தது.

கரீஸ் வன்னியின் விசுவமடுப் பகுதியில் வசிக்கும் சிறந்ததொரு கவிஞர். இவரது முதலாவது கவிநூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. புல்வெளியில் ஒரு புத்தக வெளியீடு என்னும் தலைப்பில் வாழை மரத்தில் வைக்கப்பட்டு மங்கலச் சுடர்கள் ஏற்றப்பட்டன. நிகழ்வுக்கு பண் பலை வேந்தன் ரி.எஸ் முகுந்தன் தலைமை தாங்கினார். ஆசியுரையை நாகதம்பிரான் ஆலய குருக்கள் சிவஸ்ரீ சிதம்பரேஸ்வரக் குருக்கள் வழங்கினார். வரவேற்புரையை செல்லமுத்து வெளியீட்டக இயக்குனர் யோ.புரட்சி வழங்கினார். வாழ்த்துரைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் வழங்கினர். கனடா படைப் பாளிகள் உலகம் நிறுவுனர் ஐங்கரன் கதிர்காமநாதன் வழங்கிய வாழ்த்துச் செய்தியை செல்வி சங்கீதா வாசித்தார்.

இந்த நூலை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்; வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை மக்கள் வங்கி பரந்தன் கிளை முகாமையாளர் கணபதி சிறீதரன் வழங்கினார். வாழ்த்துக் கவிதைகளை பிள்ளைக்கவி ஜொய்சி, கவிஞர் முல்லைத் தீபன் ஆகியோர் வழங்கினர். நடனங்களை யாழ்ப்பானத்திலிருந்து வருகை தந்த வினிதா, விசுவமடு சுபேதா, சுதந்திரபுரம் மோகனப்பிரியா ஆகியோர் வழங்கினர். இலண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவுனர் வவுனியூர் உதயணன் அவர்களும் வாழ்த்துச் செய்தியை வழங்கி இருந்தார்.

நூல் வெளியீட்டு விழாவில் புதிய பரிணாமமாக நூல் தொடர்பான கவியரங்க வடிவ விமர்சனம், மற்றும் பட்டிமன்றம் என்பனவும் இடம்பெற்றன. கவியரங்கில் கவிஞர்கள் நெடுந்தீவு தனு, சிவமணி, ஆர்.எஸ் கலா, ஆரதி, தனுஜா, புலவூரான் ரிஷி, கவிதாயினி, ஜோதிமலர், மருத்துவர் மாதவராஜா, பண்டத்தரிப்பு வினேஸ் ஆகியோரும், பட்டிமன்றத்தில் கம்பீரக்குரலோன் நாகேந்திரராசா,சைவப்புலவர் திலகானந்தம், பிருந்தாவனம் ஆசிரியர் சிவராணி, ஆர்.ஜே.பிரகலாதன் (உடுவில்) விக்ரர், கவிஞர் முல்லைத்தீபன் ஆகியோரும் பங்கெடுத்தனர். கவிஞர் கரீஸ், மற்றும் யோ.புரட்சி ஆகியோருக்கு கனடா படைப்பாளிகள் உலகம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.

நிறைந்த உறவுகள் கூடிய இந்த நிகழ்வில் ஏற்புரையை நூலாசிரியர் விசுவமடு கரீஸ் நிகழ்த்தினார். இந்த நிகழ்வானது நிறைவு பெறும் வரை பெருந்திரளானவர்கள் கூடி இருந்தமை இந்த நூல் வெளியீட் டுக்கு கிடைத்த நல்லதொரு வரவேற்பாகும். நடன நிகழ்வை வழங்கிய மோகனப்பிரியா இரு கண்களும் பார்வையற்றவர். இவரது நடனம் எல்லோருக்குள்ளும் பல சிந்தனைகளை ஏற்படுத்தியது. (21)



# ஐரோப்பாவில் தமிழர்கள் சமய மாற்றம்

பூமியின் ஒரு துண்டில். இலங்கைத்தீவில் தமிழீழ தேசத்தில் பிறந்தவர்கள் தமிழர்கள். தமிழர்கள் தங்கள் இன விடுதலைப் போராட்டம் காரணமாக அகதிகளாக எல்லாவற்றையும் இழந்து தங்கள் உயிரைக் காப்பாற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தவர்கள். தமிழர்களின் பூர்வீக சமயம் சைவம். அன்று காலனித்துவத்தில் ஐரோப்பிய நாடுகளால் ஆக்கிர மிக்கப்பட்ட போது தமிழீழ மண் சமயம் மாறியது. இன்று அதே ஐரோப்பிய நாடுகள் இங்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழீழத்தைப் பூர்வீக மாகக்கொண்ட தமிழர்களின் சமய அடையாளத்தை திட்டமிட்டு அழித்து வருகின்றன. அவர்களின் சமயத்தை ஐரோப்பாவில் ஒரு சமயமாகவே ஏற்றுக்கொள்ளாமல் மிக மிக சிறுபான்மை இன இந்துக்கள் திட்டமிட்டு மதம் மாற்றப்படுகின்றனர். தேசிய சிறுபான்மை இன மக்களின் சமயங்கள், கலாசாரங்கள், பண்பாடு போன்றவற்றை கிறிஸ்தவசமயம் படுகொலை செய்கின்றது. அழிக்க நினைக்கின்றது.

அன்று எங்கள் மண்ணுக்கு வந்த ஐரோப்பியர் எங்கள் கோயில்களைத் தகர்த்து எங்கள் சமயத்தை அழித்தார்கள். அதே ஐரோப்பிய கிறிஸ்தவ சமூகம் புலம்பெயர்ந்த மிக மிக சிறுபான்மை தமிழ் மக்களது சமயமான சைவ சமயத்தை அழிக்க நினைக்கின்றது. இவர்களின் தமிழையும் அவர்களின் வழி வந்த சைவ சமயத்தையும் ஐரோப்பிய நாடுகள் அங்கீக்ரிக்க வேண்டும். சிறுபான்மை சமய இன மக்களுக்கு இங்கு வாழும் உரிமையை, தங்கள் மொழி, சமம் என்பவற்றைத் தக்கவைக்க ஆவன செய்யவேண் டும். பூமியில் பெரிய சமயமாகிய நான்கு சமயங்கள் கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், இந்து, இவைகளை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாற்றுக் கொள்கை சமயம் உடைய வர்களும் வாழும் உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஐரோப்பாவில் கடந்த கால் நூற்றாண்டாக வாழ்ந்துவரும் தமிழர்கள் ஏறக்குறைய ஒரு மில்லியன் வரையினராவர். அவர்கள் நிறத்தால், மொழியால், சமயத்தால், இனத்தால் வேறுபட்டவர்கள். அவர்கள் இன்று ஐரோப்பிய நாடுகளில் குடியுரிமை பெற்று இந்த நாடுகளுக்காக உழைக்கிறார்கள் பொருளாதார வலுச் சேர்க்கிறார்கள். இந்த நிலையில் அந்த ஐரோப்பிய நாடுகள் ஏன் தமிழர்களின் மொழி சமயத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது? இன்று வரை புலம்பெயர்ந்த தமிழர்களில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டவர்களை கிறிஸ்தவ சமயம் திட்டமிட்டு மதம் மாற்றியுள்ளது. நாங்கள் சிறுபான்மை சமூகம் என்று இங்கு விட்டு வைக்கவில்லை. இலங்கையில் கிறிஸ்தவர்கள் மதம் மாற்றத் தடைச் சட்டத்துக்கு எதிராக பெரும் எதிர்ப்பு ஊர்வலத்தை யாழ்ப்பாணத்தில் தமிழ் கிறிஸ்தவர்கள் நடத்தினார்கள். தாங்கள் சிறுபான்மையினரை மதம் மாற்றுவோம், மத மாற்றத் தடைச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கபட நாடகம் ஆடுகிறார்கள்.

இலங்கைத்தீவில் மதமாற்றத்தைத் தூண்டும் கிறிஸ்தவ தலைமை அவர்களுக்காக குரல் கொடுக்கும் சிறுபான்மை என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் மனித உரிமை அமைப்புக்கள் தமிழர்கள் ஐரோப்பாவில் சிறுபான்மை மத ரீதியாக துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? இது தானா நியாயம், தர்மம்? ஏன் இந்தத் தமிழர்கள் ஐரோப் பாவுக்கு வந்தார்கள்? தாங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற இலங்கைத்தீவில் தங்கள் மொழி சமய அடையாளங்களை தக்கவைக்க முடியாமல் இங்கு வந்தவர்கள் இங்கும் அதே பிரச் சினையை எதிர்நோக்குகிறார்கள். சிறுபான்மை இனம் என்றால் அடிமைப்பட்டு வாழ வேண்டும் என்பது தான் உலக நியதியா?

**தமிழ் எங்கள் மொழி**
**சைவம் எங்கள் வழி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பாரிப் பாடல்கள்

■ பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

தமிழ்மொழியில் வழங்கிவரும் நாட்டார் பாடல்களுள் ஒப்பாரிப் பாடல்களுக்கு நீண்டதோர் பாரம்பரியம் உண்டு. நாட்டுப் பாடல்கள் தாலாட்டிலே தொடங்கி ஒப்பாரியில் முடியும் என்பர். ஒப்பாரிப் பாடல்கள் மக்களின் வாழ்வியலைப் பெருமளவு வெளிப்படுத்துவனவாகவே அமைகின்றன. தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமையும் ஒப்பாரிப் பாடல்கள் தனிமனித உணர்வுகளை மாத்திரமன்றிச் சமூக, பொருளாதார,பண்பாட்டுப் கோலங்களையும் புலப்படுத்தி நிற்பதை அவதானிக்கலாம்.

எழுத்தறிவற்ற – படிப்பு வாசனையற்ற – பெண்கள் தமது உள்ளத்து உணர்வுகளை, எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தும் ஒரு களமாகச் சாவீட்டைப் பயன்படுத்திக் கொள்வதும் உண்டு. எமது பண்பாட்டிலே சொல்லி அழுதல், சொல்லி அழ ஆளில்லை – முதலான தொடர்கள் கிராமிய மட்டத்திலே வழங்கி வருவதையும் அவதானிக்கலாம். ஒப்பாரிப் பாடல்களும் "சொல்லி அழுதல்" என்ற வகைக்குள்ளேயே அடங்குகின்றன எனலாம்.

உறவினரிடையே நிலவும் பிரச்சினைகள், குடும்பப் பிணக்குகள் முதலானவற்றை நேரடியாகச் சொல்ல முடியாத – சொல்ல விரும்பாத பல பெண்கள் ஒப்பாரியினூடாக இந்தப் பிரச்சினைகளைச் சமத்காரமாகச் சொல்லிவிடுவதும் உண்டு.

கிராமத்துப் பெண்களிடம் இயல்பாக அமைந்திருக்கும் கற்பனைத் திறனும், கவித்துவமும் ஒருங்கே வெளிப்படும் பாடல்களாக ஒப்பாரிப் பாடல்கள் காணப்படுகின்றன. ஒப்பாரிப் பாடல்களுக்கென தனித்துவமானதோர் ஓசை ஒழுங்கும் (இசை) உண்டு. உள்ளத்து உணர்வுகளை, துயரத்தை எடுத்துச் சொல்லிக் கேட்போரையும் தமது உணர்வுகளுக்கு உட்படுத்தும் இசையமைதி ஒப்பாரிப் பாடல்களுக்கு உண்டு. இழவில் அழுதிடும் பெண் கூட இசையோடழுவது கண்கூடு என்று பாரதி பாடியதையும் இந்த இடத்திலே நினைவு கூரலாம். இறந்தவரை விளித்து (என்ரை அப்பு, என்ரை ராசா, என்ரை ராசாத்தி) தமது துயரத்தை மாத்திரமன்றிப் பிரச்சினைகளையும் ஒப்பாரியாகச் சொல்லி அழுவார்கள். பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வந்த ஒப்பாரிப் பாடல்கள் காலத்துக்கேற்ற வகையில் சமூகச் செல்நெறியை அனுசரித்து மாற்றம் பெறுவதையும் கண்டுகொள்ள முடிகின்றது.

கூத்துக்கள், இசை, நாடகங்கள் முதலியவற்றிலேயும் ஒப்பாரிப்பாடல்கள் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன. பொதுமக்களிடமிருந்து கூத்து, இசை, நாடகங்களுக்குச் சென்ற ஒப்பாரிப் பாடல்கள் திரும்பவும் சில மாற்றங்களுடன் பொதுமக்களிடம் வந்து சேர்ந்ததும் உண்டு. பொதுமக்களிடமிருந்து கூத்து – நாடகக் கலைக்கும், கூத்து – நாடகக் கலையிலிருந்து பொதுமக்களிடமும் பரஸ்பரம் பரிமாறப்பட்டு இருவழிப் பாதையாகச் சில ஒப்பாரிகள் பயணிக்கின்றன.

**நிலவோ நிலவுதவி – என்ரை ராசா**
**எனக்கு**
**நிலவுபட்டால் ஆருதவி**
**பொழுதோ பொழுதுதவி – என்ரை ராசா**
**எனக்குப்**
**பொழுதுபட்டால் ஆருதவி**

மேற்காட்டியவாறான ஒப்பாரிப் பாடல்கள் கூத்திலும் இடம்பெறுகின்றன. மக்களிடமிருந்து கூத்துக்குச் சென்ற இந்தப் பாடல்கள் கூத்தினூடு நின்று நிலைத்துவிட்டன எனக் கொள்ளலாம். வாய்மொழியாக வழங்கி வந்த ஒப்பாரிப் பாடல்கள் கூத்து, இசைநாடகம் முதலியவற்றிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. செந்நெறி இலக்கியங்களில் வரும் புலம்பல்களுக்கும் ஒப்பாரிப் பாடல்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கருதலாம். மண்டோதரி புலம்பல், தசரதன் புலம்பல், வீடணன் புலம்பல் முதலானவைகளை நோக்குவோர்க்கு இந்தப் புலம்பல்களுக்கும் ஒப்பாரிப் பாடல்களுக்கும் இடையேயுள்ள உறவு புலனாகும். சோமசுந்தரப் புலவரின் ஆடு கதறியது – என்ற கவிதையும் ஒப்பாரிப் பாடல்களிலிருந்து ஊற்றெடுத்ததே எனலாம்.

வாய்மொழி இலக்கிய மரபிலே வாய்ப்பாட்டுத் தன்மை மேலோங்கிக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். திரும்பத் திரும்ப இடம்பெறும் சொற்களும் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ற வகையிலே மாற்றம் பெறுவதை ஒப்பாரிப் பாடல்களில் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் வழங்கும் ஒப்பாரிப் பாடல்களை உறவுமுறை பற்றியவை, பொருளாதாரப் பண்புகள் கொண்டவை, சமூக விழுமியங்களைப் புலப்படுத்துபவை எனப் பகுத்து நோக்கலாம். இவை அனைத்தும் சேர்ந்து ஒரே ஒப்பாரிப் பாடலில் இடம்பெறுவதும் உண்டு.

இளவயது ஆண்பிள்ளையொருத்தர் இறந்தபோது அந்தப் பிள்ளையின் தாயார் பின்வருமாறு ஒப்பாரி வைத்து (சொல்லி) அழுதார்:

**கொத்த வேண்டாம் வெட்ட வேண்டாம்**
**என்ரை நீல நயினார் – நீ**
**எனக்கொரு**
**கொள்ளி வைச்சால் காணுமடா**
**பார்க்க வேண்டாம் எடுக்க வேண்டாம்**
**என்ரை நீல நயினார் – நீ எனக்குப்**
**பால்வர்த்தால் காணுமடா**
**நான் பெத்தேன் பிலாப்பழத்தை**
**இப்ப**
**பிச்சுவைச்சேன் சந்தியிலை**
**பள்ளிக்கூடம் தூரமெண்டு**
**என்ரை ராசாவை**
**நான் பக்கத்தே வைச்சிருந்தேன்**
**தோட்டம் தொலை தூரமெண்டு**
**என்ரை ராசாவை நான்**
**தொட்டிலிலே வைச்சிருந்தேன்**

(தகவல்: சின்னம்மா – கரவெட்டி, வயது – 80)

மேற்காட்டிய ஒப்பாரியில் நீல நயினார் என்ற தொடர் அந்தப் பிள்ளை நல்ல கறுப்பு நிறம் என்பதையே சுட்டியது. யாழ்ப்பாணத்து இந்துக்களிடையே வழங்கும் கொள்ளி வைக்கும், பால் வார்க்கும் பண்பாட்டு அம்சங்களை மேற்காட்டிய ஒப்பாரிப் பாடல்கள் பதிவு செய்துள்ளமையைச் சுட்டிக் காட்டலாம்.



தாய் சந்தையிலே மரக்கறி வியாபாரம் செய்து பிள்ளைகளை வளர்த்த வந்தார். அந்தத் தாய் இறந்தபோது அவரது மகள் பின்வருமாறு ஒப்பாரி வைத்துப் புலம்பினாள்:

**என்ரை ஆத்தை – நீ**
**வாரிவரத் திண்டிருந்தன் – என்ரை**
**வண்டி வாடுதணை**
**என்ரை ஆத்தை – நீ**
**கோலிவரத் திண்டிருந்தன்**
**என்ரை கோலவண்டி வாடுதணை**

(தகவல்: செல்லம்மா – கரவெட்டி, வயது – 67)

குடும்பப் பொருளாதாரத்தைப் பெண்களே பேணி வந்த நடைமுறையை மேலே சுட்டிய ஒப்பாரிப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. இந்தப் பாடல்கள் இடத்துக்கு இடம் தேவைக்கேற்ப மாறி வழங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. பொதுவாக என்ரை ஆத்தை என்ற தொடர்களுக்குப் பதிலா என்ரை அப்பு, என்ரை ராசா என்ற தொடர்களைப் பயன்படுத்திப் பால்வேறுபாட்டைப் புலப்படுத்திப் பாடுவதுமுண்டு. இந்தப் பண்பு ஒப்பாரிப் பாடல்களின் பொதுத் தன்மையாகக் காணப்படுகின்றது.

கிராமத்தில் இருந்த ஒருவர் அந்தக் கிராமத்தை விட்டு வேறு ஊரிலே திருமணம் செய்திருந்தார். அவருக்கும் மனைவிக்கும் இடையே தகராறு ஏற்பட்டுக் குடும்பம் பிரிந்திருந்த காலத்திலே அவர் இறந்துவிட்டார். அவரது சாவீட்டுக்கு அவரது மனைவி வரவில்லை. அந்தச் சாவீட்டிலே இறந்தவரின் உறவுப் பெண் ஒருவர் பின்வருமாறு ஒப்பாரி வைத்துப் புலம்பினார்.

**ஊரெல்லாம் பெண்ணிருக்க**
**என்ரை ராசா – நீ**
**ஊர்விட்டுப் போனாயோ....**
**பக்கத்தே பெண்ணிருக்க**
**என்ரை ராசா – நீ**
**பரதேசம் போனாயோ.....**
**பாழ்படுவாள் வாசலிலே**
**என்ரை ராசா – நீ**
**பவுணாக் குவிச்சாயே.....**

(தகவல்: செல்லம்மா – கரவெட்டி, வயது – 67)

கிராமத்துக் கட்டமைப்புக்குள்ளேயே – உறவுக்குள்ளேயே திருமணம் செய்ய வேண்டுமென்று கிராம மக்கள் விரும்பியதன் வெளிப்பாடாகவே மேலே சுட்டிய ஒப்பாரிப் பாடல்கள் அமைகின்றன. இந்தக் கருத்தைப் புலப்படுத்தும் பழமொழிகளும் பல உண்டு. அவை தனித்த ஆய்வுக்குரியவை. தமது குடும்பப் பிரச்சினைகளை, உறவு முறைகளை இறந்தவருக்குச் சொல்லி அழுவதும், அவ்வாறு சொல்பவைகளை ஒப்பாரி மூலம் வெளிப்படுத்துவதும் கிராமத்துப் பெண்களின் வழக்கமாகும். ஒன்றுவிட்ட சகோதரர்களிடையே நீண்டகாலமாக நிலவிவந்த பகைமையுணர்வைத் தமது பெரியதாயார் இறந்தபோது ஒரு கிராமத்துப் பெண் இவ்வாறு ஒப்பாரி மூலம் புலப்படுத்துகின்றார்.

**என்ரை ராசாத்தி – நீ பெத்தவை**
**சீனத்துவக்கெடுத்து என்னைச்**
**சிதற வெடி வைக்கினமே.....**
**என்ரை ராசாத்தி**
**நீ பெத்தவை**
**பாரத்துவக்கெடுத்து என்னைப்**
**பதற வெடி வைக்கினமே**

(தகவல்: செல்லம்மா – கரவெட்டி, வயது – 67)

இவ்வாறு தமது குடும்பத்தில் தான் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பின்வருமாறு ஒப்பாரியாக ஒரு கிராமத்துப் பெண் பாடுகிறாள்.

**படலையிலே ஆமணக்கு**
**என்ரை ராசாத்தி**
**நீ பெத்தவைக்கு – நான்**
**பாவக்காய் ஆகினேன்**
**வேலியில ஆமணக்கு**
**என்ரை ராசாத்தி**
**நீ பெத்தவைக்கு**
**நான் வேப்பங்காய் ஆகினனே**

(தகவல்: பொன்னம்மா, வயது – 75)

தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி, உளவியல் ரீதியானதோர் ஆறுதலைத் தேடுவதற்கு ஒப்பாரிப்பாடல்கள் உதவியிருக்கின்றன என்று கருதலாம்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பண் அமுதூட்டிய ஆனித்திங்கள் பொற்தூறல்

எஸ்.யேசுதாஸ் – கொழும்புத்துறை

திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழா ஆண்டையொட்டி (1965–2015) மாதாந்தம் இடம்பெற்று வரும் நிகழ்வுகளின் வரிசையில் ஆனித்திங்கள் பொற்தூறல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14.06.2015) மாலை கலைத்தூது கலையகத்தில் பா.ஜஸ்ரின் தலைமையில் நடைபெற்றது.



கலைஇலக்கியப் பேரவை உத்தியோகத்தர் சோ.தேவராஜா கலந்து கொண்டார். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து பொற்தூறல் தமிழ் மணம் கமழும் வண்ணம் மரபிசை ஆர்வலகளுக்கு விருந்தளித்தது.

இறைவனையே வசப்படுத்தும் தமிழிசை வடிவமான பண்ணிசைக் கச்சேரி ரசிகர்கள் அனைவரையும் இசை அர்ச்சனையில் மூழ்கவைத்தது. இந்த நிகழ்வை அது பல தசாப்தங்களாக பண்ணிசைவேள்வியில் முன்னணிக் கலைஞராக விளங்கும் கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் குழுவினர் நிகழ்த்தினர்.

பண்ணிசை முதல்வன் திருஞானசம்பந்தனுடன் அணிசேர் கலைஞர்களாக வயலின், கி.பத்மநாதன், மிருதங்கம், எஸ்.துரைராஜா, தபேலா, சதா.வேல்மாறன், கடம் அ.செல்வரத்தினம், முகர்சிங், எஸ். செந்தூரன், ஆர்மோனியம், என்.செல்வச்சந்திரன் ஆகியோர் பண்ணிசையைச் சிறப்பித்தனர்.



பிரதம விருந்தினராக உரையாற்றும்போது கலை வழி இறைபணி என்னும் மகுடவாக்கைக் கொண்டு 50 ஆண்டுகளாக இயங்கிவரும் திருமறைக் கலாமன்றம் என்னும் பெரிய கலைத்தோப்பை மரியசேவியர் அடிகள் கட்டி வளர்த்து வருகிறார். பலகலை அமைப்புக்களை ஸ்தாபித்து சர்வதேசம் முழுவதும் வியாபித்துள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்ட மரிய சேவியார் அடிகளார்.



"கீழைத்தேச பண்பாட்டின் பிறப்பிடம் கூட்டுவாழ்க்கை. தற்போது கூட்டுவாழ்க்கை அருகிவருகிறது. இதனால் சமூகம் என்பது இல்லாததாகி விடும் நிலை காணப்படுகிறது. சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டால் மனிதன் தனிமனிதனாகி விடுவான். மனிதனைக் கூட்டிணைக்கும் சக்தி கொண்டது கலையாகும். இந்தப் பண்பாட்டைப் பாதுகாத்து வருகிறது இந்தக் கலை அமைப்பு.



தற்போது நாடகம் நலிந்த கலையாகி விட்டது. சினிமாவையே பண்பாடாக்கி நச்சு வழிமுறைகள் உள்வாங்கப்படுகின்றன. போர் முடிவுற்றசூழலிலும்அன்பை, மனிதத்தை, கருணையை, பாசத்தை மனிதரிடம் காண முடியாதுள்ளமை எமது பண்பாட்டு விழுமியங்களை கேள்விக்குள்ளாக்குகிறது. குவலயத்தின் கண் போன்ற யாழ்ப்பாணத்தின் பெருமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்.



தொடர்ந்து ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம் வழங்கிய நாட்டிய நிகழ்வு இடம் பெற்றது. புஸ்பாஞ்சலி அமிர்தம், தில்லானா போன்ற உருப்படிகளை வெகுசிறப்பாகத் தமது துல்லியமான நர்த்தன அசைவுகளால் நாட்டிய மணிகள் வெளிப்படுத்தி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இந்நிகழ்வுக்கு குயிலிசைக் கலைஞர்களாக பாட்டுதவ நாதன் றொபேட், மிருதங்கம், நல்லை கண்ணதாஸ், வயலின், அ.ஜெயராமன், நட்டுவாங்கம் திருமதி பாலினி கண்ணதாஸ் ஆகியோர் அணி செய்தனர்.

மொத்தத்தில் தமிழிசை அமுதை சுவைக்க விழையும் ரசிகர்களுக்கு நல்ல விருந்து படைத்த நிகழ்வாக ஆனித்திங்கள் பொறதூறல் அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம், கல்வி, பண்பாடு, ஆசிரியர்கள்

## தமிழரின் கலையும் பண்பாடும் – ஒரு பார்வை (2)

அறியாயான்

**1950** களில், நாட்டின் கலை, கலாசார செயற்பாடுகளில், சனசமூக நிலையங்களின் பங்களிப்புக்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. பின்தங்கிய சமூகங்கள் தம்மைப் பற்றியும் தமது வருங்காலம் பற்றியும் பிரக்ஞை பூர்வமாகச் சிந்திக்கத் தலைப்பட்டன. அதன்வெளிப்பாடே சனசமூக நிலையங்களின் உருவாக்கமாக அமைந்தன. மறுவளமாக இத்தகைய சனசமூக நிலையங்களின் உருவாக்கமே, சமூகம் செல்லவேண்டிய திசையைத் தீர்மானிப்பவையாய் அமைந்தன.

இந்தக் காலப்பகுதியில், சனசமூக நிலையத்தின் ஊடான கல்வி, கலாசார, சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளை சமூகத்தில் முன்னிலைப்படுத்தி செயற்படுத்துவதில் அந்தந்தப் பகுதி ஆசிரியர்கள் முதன்மை பெற்றிருந்தனர். அல்லது அவ்வாறான செயற்பாடுகளுக்கு அந்தப் பிரதேச அல்லது சமூக ஆசிரியர்கள் தலைமை தாங்கினர். அதனால் ஆரோக்கியமான சமூகமொன்று தலையயடுத்தது எனக் கடந்த கட்டுரையில் குறிப்பிட்டி ருந்தேன்.

இன்றைய நிலையில் அத்தகைய போக்கு அருகி வருகின்றது. தலைமைப்பண்பு கொண்ட ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அல்லது தலைமை தாங்க ஆசிரியர்கள் தயங்குகின்றனர். அல்லாமலும் போட்டியுலகில் ஆசிரியர்கள் தமது தகைமைகளையும், தகுதிகளையும் உயர்த்தக் கணிசமான அளவு நேரம் ஒதுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதனால் ஆசிரியர்களுக்கு, நேரப்பற்றாக் குறையும் உள்ளமை மறுக்க முடி யாதது. தேவைகள் அதிகரிக்க வருமானம் குறைந்துவிட, வருமானம் தருகின்ற பணிகளில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஆசிரிய சமூகத்துக்கு ஏற்பட்டமையும் மறுக்க முடியாத உண்மையாகும். எனவே கிடைக்கின்ற நேரங்களில் பெரும்பாலான ஆசிரியர்கள் தனிப்பட்ட வகுப்புக்கள் எடுத்து – தனியார் நிலையங்களில் கல்வி கற்பித்து வழங்கி – சம்பாதிப்பதில் நாட்டங் காட்டுகின்றனர். ஒழுங்கான வகுப்பறைச் செயற்பாடுகளை உதாசீனம் செய்து, தமது வகுப்புப் பிள்ளைகளையே, பிரத்தியேக வகுப்புக்கு அழைக்கின்ற நிகழ்வுகளும் ஆசிரியர்கள் ஒரு சிலரது பண்பாடாயிற்று. இந்த நிலையில் அவர்களால் சமூகத் தலைவர்களாக தலை நிமிர முடியாமல் போய்விட்டது.

தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறும்மாணவர்கள்பெறும்கௌரவத்தையும், கவனிப்பையும் பாராட்டுதல்களையும் அரிய பெரிய கலை நிகழ்த்துகைகளை ஆற்றும் மாணவர் பெறுவது கிடையாது. எனவே இயல்பாகவே போட்டித்தேர்வில் காட்டும் அக்கறையை கலை, பண்பாட்டு ஆற்றுகைகளில் மாணவர்கள் காட்டுவதில்லை. இதனைப் பெற்றோர் ஊக்குவிப்பதும் இல்லை. இதனால் அடுத்த சந்ததிக்கு பெறுமதி மிக்க கலை பண்பாட்டை கையளிக்கும் நிலைமை தறுக்கணித்த நிலையிலேயே உள்ளமை குறிப்பிடப்பட வேண்டும்.

தற்போது, பிரத்தியேக வகுப்பிலுள்ள ஆரோக்கியமான விடயங்களில் ஒன்று என்னவென்றால், பெற்றோர் பலர் தமது பிள்ளைகள், சித்திரம், சங்கீதம், நடன பாடங்களிலும் முன்னுக்கு வர வேண்டும் என்பதற்காக அத்தகைய கவின் கலைப் பாடங்களுக்கான தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்புகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றமையாகும். அதுவே ஒரு கலாசாரமாகவும் மாறி வருகின்றது. அதனால் கலை, கலாசாரம் பற்றிய ஒரு தேடல், இயல்பாகவே எழுந்துள்ளதையும் புறந் தள்ளிவிட முடியாது.

உண்மையில் கவின் கலைகளது நோக்கமான மனதைப் பண்படுத்தி நல் மனப் பாங்கை, பண்பாட்டை ஏற்றம் காணச் செய்வதை நோக்காகக் கொண்டு இத்தகைய வகுப்புக்களுக்கு அனுப்புகின்றார்களா என்றால், அது ஒரு கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது.

சித்திரம், சங்கீதம், நடனம் போன்ற கலைப்பாடங்களினது புள்ளிகளும், மாணவர் ஒருவர் வகுப்பறையில் முதலாம் பிள்ளையாக வருவதைத் தீர்மானிக்கின்ற ஒரு காரணியாக – சக்தியாக இருப்பதனால், அந்தப் பாடங்களிலும் பெற்றோர் ஆர்வம் காட்டுகின்றனரே தவிர பாடத்தினூடாக பிள்ளையில் ஏற்படப்போகும், கலை இலக்கியம் சார்ந்த அறிவு, திறன் மனப் பாங்கைக் கருத்திற்கொண்டல்ல.

பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் கொண்டு வரப்பட்ட கவின் கலைப் பாடங்கள் போட்டிகளாலும், பொறாமைகளாலும் தனது இலக்குத்தவறி நிற்கின்றன. கல்வியில் ஏற்பட்ட போட்டி, கலைகளில் ஏற்பட்ட போட்டியாகி பிள்ளைகள், பெற்றோரால் ஒரு மாய உலகுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கலைகளற்ற, வெறும் போட்டிக் கல்வி ஊடாக , கல்வியிலாளர்களை உருவாக்கியதன் மூலம், புதிய கண்டுபிடிப்பாளர்களையும், ஆக்கத்திறன் மிக்கவர்களையும் படைப்பாளிகளையும் நாம் திசை மாற்றிக் கொண்டுவருகின்றோம். இந்த நிலை தொடரும் வரை மக்கள் மாக்களாகவே வளருவர்.

புலம் பெயர் தேசங்களில் தமிழ்ப் பிள்ளைகள் இத்தகைய தமது கலை, கலாசாரத்தை மறந்து விடாமலிருப்பதற்காக வாய்ப்பு வசதியுள்ளவர்கள் தமது பிள்ளைகளுக்கு சித்திரம், சங்கீதம், நடனம் ஆகியவற்றில் பயிற்சி வழங்கி வருகின்றனர். அத்துடன் ஆற்றுகைக் கலைகளின் அரங்கேற்றத்தையும் மேற்கொள்கின்றனர். அல்லது சித்திரக் கண்காட்சிகளை நடத்துகின்றனர். அவை பிள்ளைகளது சமநிலை ஆளுமையில்நேரடித்தாக்கங்களை ஏற்படுத்துபவை எனலாம்.

பயிர் நன்கு செழித்து வளர – பயிர் செய்யப்படும் மண் நன்கு வளம் ஊட்டப்பட்டதாக இருக்க வேண்டும். தரை பண்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். பண்படுத்தப்படாத தரையில் வளரும் பயிர் உச்சப் பயனைத் தராது.

அவ்வாறே பண்பாடு அற்ற மனிதனால், புவியில் ஆக்கத்தை விட அழிவே அதிகரிக்கும். மனித மனம் பண்படுத்தப்பட வேண்டும். மனித மனத்தைப் பண்படுத்தும் வழியாக அமைவது "எழில்கலைகளே" என்றால் மிகையல்ல. மனித மனத்தைப் பண்படுத்தி வாழ்வாங்கு வாழ வழிசமைப்பதில் கலை இலக்கியம் பெரும் பங்கு வகிக்கின்றது என்பதை மனதில் நிறுத்தி கல்விக் கூடங்களும், சனசமூக நிலையங்களும் செயற்பட வேண்டும்.